கல்கி

KALKI 12-12-1976 * 75 காசு



This festive season gives the only gift that memories are made of.



The Agfa Isoly-I remembers.

10 professional features. 16 sharp, brilliant black and white or colour pictures on a single roll of 120 film.



Agfa®

ISOLY-I

Distributors:


AGFA-GEVAERT INDIA LIMITED

® Registered Trademark of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.
Manufacturers of Photographic Products.

Made by: **THE NEW INDIA INDUSTRIES LTD., Baroda • Bombay**

SIMOES/A G/76A

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங்காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

பாட்டனாரின் முதுகுவலி, பாட்டியின் உடல்வலி,
அம்மாவின் தலைவலி,
அப்பாவின் ஜலதோஷம், மகனின் சுளுக்கு
அனைத்துக்கும்
நிவாரணம் அளிக்க
இல்லந்தோறும்
இருக்க வேண்டிய
நல்ல மருந்து.





அமிர்தாஞ்சனம்

வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில் நிவாரணமளிப்பதை உணர்வீர்கள்.
சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில் அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் 80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான குடும்ப நிவாரணி.

அமிர்தாஞ்சன் லிமிடெட்.

AM-1254

மனித உரிமைகள் மலரட்டும்!

அண்ணல் அமரரான நாள் நாம் அஞ்சலி செலுத்தும் ''தியாகிகள் தினம்'' ஆயிற்று.

தத்துவ மேதை திரு ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் ''ஆசிரியர் தினம்'' எனக் கொண்டாடுகிறோம்.

நேருஜியின் பிறந்த நாள் ''குழந்தைகள் தினம்'' எனப் பெயர் பெற்றது.

சர்தார் வல்லபபாய் பட்டேலின் பிறந்த நாள் ''ஒற்றுமை தினம்'' என இனி விளங்கப் போகிறது.

ராஜாஜி அவர்கள் பிறந்த தினத்தை என்ன பெயரிட்டு அழைப்பது?

நமக்கு அந்த வேலையை வைக்காமல் ஐ. நா. சபையே தீர்மானித்துவிட்டது, அது ''மனித உரிமைகள் தினம்'' என்று!

டிசம்பர் 8 ராஜாஜியின் பிறந்த நாள் என இதுகாறும் எண்ணி வந்தோம். ஆனால் ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை திரு ராஜ்மோகன் காந்தி எழுதப் புகுந்தபோது அவரும் அவருக்கு உதவிய திரு வேதமூர்த்தி போன்றவர்

ஐ. நா. சபை வலியுறுத்தும் மனித உரிமைகள் என்னென்ன? முப்பது அம்சங்கள் உண்டு. அவை குறிப்பாக நான்கு பிரிவுகளில் அடங்கும்.

முதல் பிரிவு தனிமனிதனின் உரிமைகளைக் கூறுவது: தனிமனிதர்கள் மற்றவர்களுடைய அல்லது அரசாங்கத்தினுடைய திடீர் வெறுப்பு விருப்புகளுக்கு ஆளாகாமல் அவர்களின் தலையீடின்றி வாழ்க்கை நடத்தும் உரிமை பெற்றிருக்க வேண்டும். இதில் மனச்சாட்சிப்படி நடக்கும் உரிமை, இஷ்டதெய்வத்தை வணங்கும் உரிமை, தனிநபர் சுதந்திரம் முதலிய பல அடங்கும்.

இரண்டாவது பிரிவு பொருளாதார உரிமைகள்: அடிமையாக இன்றி நல்ல சூழலில் நியாயமான சம்பளத்துக்கு வேலை பார்க்கும் உரிமை, தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை, சொத்துரிமை, நல்ல குடியிருப்பும், உணவும் பெறும் உரிமை, ஓய்வு எடுக்கும் உரிமை முதலியன.

கல்கி மலர் 36 இதழ் 20

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

களும் செய்த ஆராய்ச்சியில் தெரிய வந்தது, டிசம்பர் பத்துதான் அவரது சரியான பிறந்த நாள் என்று. ராஜாஜி நினைவாலயத்தில் பொறிக்கப்பட்டதும் இந்தத் தேதியே.

அதே தேதியைத்தான் இன்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஐ. நா. சபை ''மனித உரிமைகள் தின''மாக அறிவித்தது! ராஜாஜி-93 மலரில் ஐ. நா. சபை உயர் அதிகாரி திரு சி.வி. நரசிம்மன் எழுதும்போது இந்தப் பொருத்தத்தைக் குறிப்பிட்டு வியந்திருக்கிறார்.

ராஜாஜியின் பிறந்த நாள் என்று தெரியாமலேயேதான் ஐ. நா. சபை டிசம்பர் பத்தாம் தேதியை ஒவ்வோர் ஆண்டும் மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடுமாறு அறிவித்தது. ஆனால் அதில்தான் எத்தனை அதிசயமான பொருத்தம்! மனித உரிமைகளுக்காகப் பாடுபட்டவர்கள் எல்லோருமே லட்சியவாதிகள்தாம் என்றாலும் அந்த லட்சிய புருஷர்கள் அனைவரிலும் உன்னத நிலையில் வைத்து எண்ணத் தக்கவர் அல்லவா ராஜாஜி!

மூன்றாவது அரசியல், சமூக உரிமைகள்: அமைதியான முறையில் கூட்டுச் சேர்ந்து பேசவோ, அல்லது ஒரு கூட்டத்திலோ, குழுவிலோ, கட்சியிலோ சேராமல் தனித்திருக்கவோ உள்ள உரிமைகள்; அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பிரஜை என்ற முறையில் தனது செல்வாக்கைச் செலுத்தும் உரிமை; தங்கள் பிரதிநிதிகளாக இருந்து ஆள்பவர்களுக்கு வோட்டுப் போடும் உரிமை; சட்டத்தினிடமிருந்து ஏற்றத் தாழ்வின்றிச் சமமான பாதுகாப்புப் பெறும் உரிமை; குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டாலொழிய குற்றமற்றவன் என்ற அனுமானத்தோடு செயல்படும் சுதந்திரமான நீதிமன்றங்களைப் பெறும் உரிமை; ஒருவனது மனப் போக்குகளுக்கு ஏற்ப இஷ்டமான கலைகளின் ரசனையில் ஈடுபடும் உரிமை முதலியன.

கடைசியாக நான்காவது பிரிவில் கல்வி, அபிப்பிராய சுதந்திரம், சம வாய்ப்பு ஆகியன அடங்கும். அடிப்படை சுதந்திரங்களையும் மனித குல உரிமைகளையும் பலப்படுத்தும் விதத்தில்

கல்வி அமைய வேண்டும். குறுக்கீடு எதுவுமின்றி அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ளவும், வெளியிடவும் உரிமை; தகவல்களைச் சேகரிக்கவும் வெளியிடவும் உரிமை ஆகியவற்றை மக்கள் பெற்றிருக்க வேண்டும். இன, மத, நிற, பால், மொழி, அரசியல் வேற்றுமைகள் பாதிக்காதவாறு வாழ்க்கையில் முன்னேற சம வாய்ப்புக்கள் இருக்க வேண்டும்.

உலக யுத்தத்தின் முடிவில் ஐ. நா. சபை தோன்றியது எவ்வளவு இயல்பான காரியமோ அதேபோல், ஐ. நா. சபையில் மனித உரிமைகளுக்காக ஒரு சாஸனம் தோன்றியதும் ஓர் இயல்பான காரியமாயிற்று. அறிஞர்கள் பலர் மூன்று ஆண்டுகள் பாடுபட்டு இச்சாஸனத்தை உருவாக்கினார்கள். 1948, டிசம்பர் 10ந் தேதி ஐ. நா. சபை இதனை அங்கீகரித்தது. இது எந்த தேசத்தையும் கட்டுப்படுத்தும் சட்டம் அல்ல. ஆனால் எல்லா நாடுகளும் இந்த அகில உலக சாஸனத்தை ஏற்று அதன்படி தங்கள் தேசத்தில் இந்த உரிமைகளை மக்களுக்கு வழங்கும் சட்டங்களை இயற்ற வேண்டும் என்று ஐ. நா. சபை எதிர்பார்க்கிறது.

ராஜாஜியின் வாழ்க்கையைப் படித்தவர்கள் அவரது ஒவ்வொரு மூச்சுக் காற்றும் மேற்படி சுதந்திரங்களைக் காக்கவே பிறந்தது என்பதை அறிவார்கள். சுதந்திரப் போராட்ட காலம் தொடங்கிச் சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்ததுவரை அவர் ஆற்றிய தொண்டுகள் எல்லாம் மனித குல உரிமைகளை முழுமையாக மக்களுக்குப் பெற்றுத் தரவே. அதே சமயத்தில் கடமைகளை மறந்த உரிமைவாதிகளைக் குறித்தும், நமது உரிமைகள் என்று நாம் நினைப்பனவற்றை அடைய வன்முறைகளைக் கையாள்வது பற்றியும் அவர் அடிக்கடி எச்சரித்து வந்தார்.

மனிதகுல உரிமைகள் என்று ஐ. நா. சபை வகுத்துத் தந்த உரிமைகளைக் காக்க முயன்றதோடு நிற்கவில்லை ராஜாஜி. அதற்கும் ஒரு படி மேலே சென்றார். அணு ஆயுத யுத்த பயம் இன்றி வாழும் உரிமையும் மனித குலத்துக்கு உண்டு என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னார். அதற்காகப் பாடுபட்டார்.

ராஜாஜி எதிர்பார்த்த அளவில் மனிதகுல உரிமைகள் அகில உலகத்திலும் மலர நம்மால் இயன்ற அளவு பாடுபடுவோம்.

ராஜாஜியின் பிறந்தநாளுடன் ஐ. நா. சபையின் அறிவிப்புப்படி மனித உரிமைகள் தினத்தையும் சேர்த்து கொண்டாடுவோம்.

நாளொரு செய்தி; பொழுதொரு வேதனை!

நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு எந்தத் துறைகளில் பொறுப்புணர்ச்சி அதிகரித்திருக்கிறதோ இல்லையோ ஒரு சாராரிடம் அது நிச்சயமாக வளரவில்லை, தெளிவாகத் தெரிகிறது. அவர்தாம் பல்லவன் போக்குவரத்து டிரைவர்கள்.

பல்லவன் என்ற பெயரில்தான் கர்வமுற்றார்களா அல்லது உயர்ந்த பீடத்தில் அமர்ந்து தங்களை விடத் தாழ்ந்த உலகைப் பார்ப்பதால் உயர்வு மனப்பான்மை பெற்றார்களா புரியவில்லை! பஸ்கள் அவர்களிடம் அசுர சாதனங்களாகின்றன. மக்கள் தெருவில் என்ன, பிளாட்பாரத்தில் நடக்கவே பயப்படுகிறார்கள்.

எதிராஜ் கல்லூரி அருகே ஸ்கூட்டர் மீது பஸ் மோதி இருவர் மரணம்.

அண்ணா மேம்பாலத்துக்கு மேலே நடுச்சாலையில் இரு பஸ்கள் மோதிப் பலருக்குக் காயம்.

இப்படி நாளொரு செய்தியும் பொழுதொரு வேதனையுமாக வளர்கிறது பல்லவன் சரித்திரம்.

மதுரைக்கருகே பயங்கர பஸ் விபத்தில் பதினாறுபேர் மரணம் என்று ஒரு தனியான சோகக் கதை.

பல்லவன் பஸ் டிரைவர்கள் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸை ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்த மாட்டார்கள். ஓவர்டேக் செய்ய வசதியாகக் கோணலாக நிறுத்தித் தெருவை அடைப்பார்கள். பின்னால் வண்டி வருகிறதா நம்மைத் தாண்டிச் செல்கிறதா என்று பாராமலேயே சரேலென்று பஸ்ஸை எடுப்பார்கள். எதிரே வண்டி வருவதை லட்சியம் செய்யாமல் முந்திக்கொண்டு போவார்கள். ஓவர் ஸ்பீட் ஓட்டுவார்கள். 'ஹால்ட் அண்டு கோ' சின்னங்கள் நமக்கல்ல பிறருக்குத்தான் என்பதுபோல் நடந்துகொள்வார்கள். இன்னும் என்னென்னவெல்லாமோ செய்வார்கள். பட்டப் பகலில் முன் விளக்குகளைப் போட்டு விட்டால் எந்தச் சட்டமும் விதிமுறையும் தங்களைப் பாதிக்காது என்பதாக இவர்களுக்கு ஓர் எண்ணம்! பல்லவன் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்: பஸ் டிரைவர்களிடம் பொறுப்புணர்ச்சியை ஊட்டுங்கள்!

ராஜாஜி சிந்தனை


சட்டங்களைவிட உயர்ந்த உரிமைகள்

''சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நான் வாழ்ந்தால் போதும் எந்த மனிதனின் அனுமதி பெற்றும் நான் வாழத் தேவையில்லை'' – கிப்ளிங்.

பிரஜையின் சுதந்திரம் அரசின் மேற்பார்வைக்குக் கீழ் இருக்க வேண்டியதுதான். சுதந்திரம் பொறுப்பற்ற தன்மையாக மாறிவிடாதிருக்க இந்த மேற்பார்வை அவசியம். இதன் மறுபுறமாக அரசின் எல்லா அதிகாரங்களும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்த அடிப்படை உரிமைகள் சட்டசபைகள் இயற்றும் சட்டங்களைவிட உயர்ந்தவை. எனவேதான் அவை பாராளுமன்றம் இயற்றும் ஒரு சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்படாமல் அரசியல் சாசனத்திலேயே ஓர் அங்கமாக்கப்பட்டன.

–சுயராஜ்யா, மார்ச் 18, 1961.

போடு புதிர்!



படத்தில் கண்டுள்ள வரை படத்தை நான்கு சமபாகங்களாக வெட்டி அவைகளை வேறுவிதமாக ஒட்டி ஒரு சதுரம் வருமாறு செய்ய வேண்டும். - கல்பாக்கம் நாராயணன்

விடை 58 பக்கம்

கல்கி

1976 டிசம்பர் 12

நள ௵

கார்த்திகை 27





"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.


1975 ஜூன் புரட்சி
ஜே.பி
கரடியை விட்டுத் தொலையுங்கள்!
பிரதமர் கண்டனம்
என்னிடம் வாருங்கள். பிளாஸ்திரி போடுகிறேன்!
இந்திய அணி வெற்றி

மகளிர் பகுதி



இப்பகுதிக்குச் சின்னச் சின்னக் கதைகளையும் குட்டிக் கட்டுரைகளையும் மாதர்களிடமிருந்து வரவேற்கிறோம். தகவல் குறிப்பு, வாழ்க்கை அனுபவம், நகைச்சுவைச் சம்பவம் போன்ற எதையும் அனுப்பலாம். பெண் குலத்தை எதிர் நோக்கியுள்ள சமூகப் பிரச்னைகள், சட்டப் பிரச்னைகள், குடும்பப் பிரச்னைகள், மாதர் முன்னேற்றம் பற்றிய கருத்துக்கள், பெண்களின் பொழுதுபோக்கு, விளையாட்டு, அழகு, அலங்காரம், பயன் தரும் கைவேலைகள், சமூகப் பணிகள் முதலியவற்றை அலசலாம். பிரசுரமாகும் அம்சங்களுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. தவிர, இரு விசேஷப் பரிசுகளையும் அளிக்கிறோம்.

முதல் பரிசு ரூ. 500/- பெறுமானமுள்ள பட்டுப் புடவை

இரண்டாம் பரிசு ரூ. 200/- பெறுமானமுள்ள பிரஷர் குக்கர்

இப் பரிசுகளை அடுத்த ஆறு மாதங்களில் கல்கியில் பிரசுரமாகும் கதை கட்டுரை முதலியவற்றை மகளிராக அமைந்த குழுவினர் பரிசீலித்து இரு பெண்மணிகளுக்கு வழங்குவார்கள்.

குறிப்பு: ○ உறையின் மேல் மகளிர் பகுதி எனக்குறிப்பிடவும். ○ பிரசுரத்துக்கு ஏற்காத கதை கட்டுரை முதலியவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. ○ கடிதப் போக்குவரத்து கிடையாது. ○ கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. ○ விலாசம்: ஆசிரியர் கல்கி, சென்னை 600 031.

மர்மச் சிறுகதைகள்!




டிசம்பர் 19ம் இதழில் ஆரம்பம்

மர்மச் சிறுகதைப் போட்டிக்கு வந்த ஏராளமான சிறுகதைகளைப் பரிசீலித்து மணியான கதைகளைப் பொறுக்கி எடுத்து வழங்குகிறோம்.

திக் திக்கென்று இதயம் அடித்துக் கொண்டாலும் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு படித்து விடுங்கள்!




லதாவுக்குத்
தேவை பொங்கி வரும் நுரை




தீபாவுக்குத்
தேவை பொலிவு தரும் சலவை





ரம்யா
இவர்கள் இருவரையுமே திருப்தி செய்கிறது

பொங்கி வரும்
நுரை–
பொலிவு தரும்
சலவை




விலைப்பட்டியல்:
700 கிராம் ரூ. 8.23
500 கிராம் ரூ. 6.14
300 கிராம் ரூ. 4.01
50 கிராம் (பாக்கெட்)
ரூ. 0.71
சலவைக் கட்டி
(135 கிராம்) ரூ. 1.28
வரிகள் தனி

இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்

SAA UP/2120

ஜீவகாருண்யம்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய ஸ்வாமிகள்

வாழ்க்கையில் அவ்வளவாக பக்தி பண்ணிவிட்டாலுங்கூட, சாகிற சமயத்திலே ஈசுவர ஸ்மரணைத்தோடு மூச்சைவிட்டால் போதும்; அவனை அடைந்துவிடலாம் என்று கீதை சொல்கிறது. இது ரொம்ப 'ஷார்ட்–கட்' தானே ?

ஆனால் வாழ்நாள் முழுக்க நினைத்தது தானே அந்திமத்தில் வரும்? அதெப்படி வேறு ஒரு நினைப்பு அப்போது வரும் ? இது எப்படி 'ஷார்ட்–கட்' ? சும்மாவுக்காக 'ஷார்ட்–கட்' மாதிரி பகவான் ஏமாற்று கிறாரா ?

இங்கேதான் சாகிற ஸ்திதியில் இருக்கிற ஒரு ஜீவனுக்கு **மற்றவர்கள்** பண்ணுகிற மகா பெரிய பரோபகாரம் வருகிறது ; அந்த ஜீவனைப் பரமாத்மாவிடம் அனுப்பி வைக்கிற பரம உத்கிருஷ்டமான பரோபகாரம் !


இயற்கையாக ஒருத்தனுக்கு அந்திமத்தில் ஏதாவது கன்னா பின்னா நினைப்புக்களே வரலாம். ரொம்பப் பேருக்கு அப்படித்தான் வருகிறது – அல்லது ஸ்மரணையே தப்பிப் போய்விடலாம். ஆனால் இந்த மாதிரி சமயத்தில் பக்கத்தில் இருக்கிறவர்கள் பகவந் நாமாவையே கோஷித்துக் கொண்டிருந்தால் அது அவனை மற்ற நினைப்பிலிருந்து இழுத்துக் கொண்டே இருக்கும். ஸ்மரணை ஏதோ லவலேசம் ஒட்டிக் கொண்டிருந்தால், அந்த உள் பிரக்ஞையில் ஒரு வேளை ஈசுவர நாமா சுரீல் என்று ஒரு தைப்பு தைத்தாலும் தைக்கும். அவனுக்காக பகவான் நினைவு வராமல், வாழ்நாள் முழுதும் நினைத்த விஷயங்கள் தான் அந்திமத்திலும் நினைவுக்கு வந்தாலும், மற்றவர்கள் இப்படி அவனுக்கு பகவானின் நினைப்பை உண்டு பண்ணலாம்.

நாம் எங்கேயோ ஒரு பீச்சுக்குப் போகிறோம் ; அல்லது ஸினிமாவுக்குப் போகிறோம். கண்டதை நினைத்துக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டுதான் போகிறோம். ஆனால் போகிற வழியில் ஏதாவது ஒரு ஸத் ஸங்கத்திலிருந்து ''ஹரஹர மஹாதேவா'', ''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே'' என்கிற மாதிரி ஒரு கோஷம் வந்தால், சட்டென்று நம்முடைய கன்னாபின்னா நினைப்புப் போய் பகவந்நாமா க்ஷண காலம் மனசுக்குள் போய் நம்மைக் கொஞ்சம் உருக்கி விடுகிறது. நாமாவுக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது. ஆனதால் வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவிலே ஒரு ஜீவாத்மா உயிருக்காகப் போராடிக் கொண்டு மனசு நாலா திசையிலும் அலைபாய்கிற போது (அல்லது ஸ்மரணை தப்பிக் கொண்டிருக்கிற போது) பக்கத்திலே இருக்கிறவர்கள் பகவந் நாமாவை கோஷித்துக் கொண்டிருந்தால், அது அந்த ஜீவாத்மாவை அதன் மூலமான பரமாத்மாவிடம் இழுப்பதற்கு ரொம்பவும் சக்திகரமான (effective) வழியாக இருக்கும். ஒருத்தன் எத்தனை துன்மார்க்கத்தில் போனவனாயிருந்தாலும், அந்தக் கடைசி நாழியில் இந்த ஸம்ஸாரத்திலிருந்து தப்புவதற்கு பகவானைப் பிடித்துக் கொள்ளத் தவிக்கத்தான் செய்வான். அவனுக்குத் தானாக அந்தத் தாபம் வராவிட்டால்கூட நாம் உண்டாக்கித் தந்து விட்டால் பிடித்துக் கொண்டுவிடுவான். இப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.


உற்றார் ஆர் உளரோ ? உயிர்கொண்டு
போம் பொழுது?
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்(கு)
உற்றார் உளரோ ?

என்ற மாதிரி, அந்த அந்திம சமயத்தில் அவன் ஒருத்தனே பந்து என்று எந்த ஜீவனும் புரிந்து கொள்ளத்தான் செய்யும். புரிய வைக்காமல் கர்ம வாஸனை அதை நாலா திசையில் பிய்த்துப் பிடுங்கலாம். ஆனால் அந்தச் சமயத்தில், சுற்றியிருப்பவர்கள் பகவந் நாமாவைச் சொல்லிக் கொண்டிருந்தால், சட்டென்று அது ஒரு லகான் போட்டு அந்தச் சாகிற ஜீவனின் நினைப்பை பகவானிடம் திரும்பும்படி பண்ணலாம். அந்தச் சமயத்திலேயே பிராணன் ஒடுங்கி விட்டால் அவனைப் பரமாத்மா எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். கீதையில் அவர் அப்படி வாக்குக் கொடுத்திருக்கிறார். வாழ் நாள் முழுவதும் நினைக்கிறானா, நினைக்கவில்லையா என்பதைப் பாராட்டாமல், *irrespective* ஆக, ''கடைசியில் எதைதை நினைத்தாலும் அதனை அடைகிறான்'' என்று அவர் சொல்லி விட்டதால், இந்த ஜீவன் எப்படி வாழ்க்கை நடத்தியிருந்தாலும், கடைசியில் அவரை நினைத்துவிட்டதற்காக அதை அவர் எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். கடைசி நேரத்தில் அடியோடு நிராதரவான ஒரு ஜீவனுக்கு உண்டாகிற தாபத்தோடு, சுற்றியிருக்கிற நமக்கும் அது கடைத்தேற வேண்டுமே என்பதில் இருதய பூர்வமான கவலை இருந்து பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு நாமாவைச் சொன்னால் அதற்கு ஒரு பலன் இராமல் போகாது. (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]


மங்கையிடம் கொஞ்சும்
மனோலயங்கள் ஆயிரம்
மாறும் லயங்களின் மென்மை அனைத்தும் தெளிந்து, பெண்மை கொஞ்சும் ஆடைகள் அநேகம் அவளைத் தழுவிடப் படைக்கிறது ஜாஸ்மின்; நகம் முதல் சிகை வரை அவளதுத் தனித்திடும் பெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அணிவீர் ஜாஸ்மினின் அருமை லேஸ்கள்; பூப் பின்னல் துணிவகைகள்; வண்ண பிரிண்ட்களில் ஜெர்ஸி, டஃபேட்டா, க்ரேப், ப்ரோகேட் என்றிவைகள். வீட்டுக்கு அழகு கூட்டிடச் செய்யும் அலங்காரத் துணி வகையுடன், ஜாஸ்மினின் உள்ளங்கவர் லேஸ் திரைச் சீலைகள்.
Jasmine®
லேஸ்
பெண்மை அணியும்
பெண்மை
Professional Motivators/Jasmine/21

மணம் பரப்பும் மலர் அம்புகள்!



☐ தலையங்கம் படித்தேன். ஏற்றுமதி செய்தாலும் சரி, கூலிக்குப் பதிலாகத் தானியம் கொடுத்தாலும் சரி; எக்காரணத்தைக்கொண்டும் அரசு கொள்முதல் செய்து சேமித்த தானியம் வீணாய்ப் போயிற்று, சேதமடைந்தது என்கிற நிலையே தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்.

கல்கி அவர்களின் ''அரும்பு அம்புகள்'' முடிவு பிரமாதம். ''இதற்குமுன் எத்தனையோ ஜன்மங்களில் நமக்குக் கல்யாணம் ஆகியிருக்கிறது'' என்ற வரிகளுடன் முடித்திருப்பது.... கல்கி அவர்களால் மட்டுமே இவ்வளவு சிறப்புற முடிக்க முடியும்.

அறந்தாங்கி
26–11–76 வி. எஸ். அனந்தராமன்

☐ 'கல்கி அவர்களின் கதையை விமரிசிக்கும் தகுதி என் போன்ற வயதினர்க்கு இல்லையாயினும், அவரின் கதைக் கருக்கத்தை விரிவு படுத்தி எழுதியவர் என்ற முறையில் திரு வி. ராஜேந்திரன் அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கநல்லூர்
25–11–76 தர்மா நெல்லைநாயகம்

☐ நாடக பாத்திரங்களை நேரில் காண்பது போல உயிர் ஓவியங்களாக தந்த (வோகு) மணியம் செல்வனை வாழ்த்துகிறேன்.

காட்பாடி
26–11–76 கோ. திபா. ஓவியர்

☐ ஐம்பத்தைந்து வயதிலேயே அவர் அமரராகாமல் இருந்திருந்தால் இது போல் எத்தனை ''பொக்கிஷங்களை'' எங்களுக்கு அளித்திருப்பார் என்பதை நினைக்கும் போது கண்களில் கண்ணீர் வராமல் தடுக்க முடியவில்லை.

ஒசூர்
26–11–76 இருதய கமலஹாசன்

☐ ''அரும்பு அம்புகள்'' முடிவடைந்ததைப் பார்த்தவுடன் ஒரு தவிப்பு ஏற்பட்டுவிட்டது. திரு ராஜேந்திரனைக் கல்கியின் வீட்டுப் பெட்டி அலமாரி, பரண், மூலை முடுக்குகளில் மறுபடி சோதனை செய்யச் சொல்லவும். எங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் ''அரும்பு அம்புகள்'' போன்ற மற்றுமொரு புதையல் கிடைக்கலாம்!

நாகபுரி
28–11–76 ஸரோஜா ராஜன்

☐ சர்வதேச மகளிர் ஆண்டிலேயே ஆரம்பித்திருக்க வேண்டியதைச் சிறிது காலம் தாழ்த்தியிருந்தாலும், புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மகளிர் பகுதியை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 'மக்கள்' என்ற தலைப்பில் அருமையான கருத்துக் கருவூலமொன்றை வெளியிட்டிருக்கிறீர்கள்.

ஈரோடு
24–11–76 கவிதா பிரபரசி

☐ நவாப் ராஜமாணிக்கம் நாடகமொன்றுக்குத் தலைமை வகித்த கல்கி, மேடையில் இருந்த நாடக அம்பு ஒன்றைக் கையிலேந்தியபடி பேசுகிறார்.

☐ ''மரம்'' என்ற சிறுகதை ஒரு மரத்தைப் பற்றியது என்றாலும் உணர்ச்சியற்ற மரமாக இல்லாமல் உண்மையான அன்பு உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாக இருந்தது. மிகச் சிறந்த கலைக் காவியம்.

திருச்சி
23–11–76 இ.கு. கிருஷ்ணன்

☐ பாசமுடன் நேசித்த பாஸ்கரன் நினைவான
நேசமரம் வெட்டிட நினைத்தாள் இல்லை!
ஆசைமகள் அடிபடவே ஆவேசம் வந்ததுவோ
ஆசைமர உயிர்த்துடிப்பு அருமையான
வார்ப்பு!

நெய்வேலி-2
26–11–76 'சுரபி''

☐ ''புத்திசாலிகள்'' தலையங்கம் கண்டேன். மகாராஷ்டிர மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள்! அவர்களுக்கு நல்ல எதிர்காலம். மற்ற மாநிலங்களிலும் கணிதத்தையும், விஞ்ஞானத்தையும் மட்டுமாவது ஆங்கிலத்தில் போதித்தால் தேசத்துக்கு நன்மை.

''வேள்வித் தீ குளிர் காய்வதற்கு அல்ல!'' போட்டிக் கதைகளில் மிகச் சிறந்த கதைகளுள் ஒன்று.

திரு குஷ்வந்த் சிங் அவர்களின் கட்டுரை அற்புதமாக இருந்தது. வழக்கம் போல் ஒளிவு மறைவற்ற சரளமான நடை.

திருவாரூர்
25–11–76 வெ. சுப்புராமன்

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 20

சக்கரவர்த்தி சந்நிதியில்

மாரப்பபூபதி போனவுடனே பொன்னன் குதித்துக் கொண்டு குடிசைக்குள் சென்றான். வள்ளியின் கோபத்தை மாற்றுவதற்கு ஒரு வழி கிடைத்தது என்ற எண்ணம் அவனுக்குக் குதூகலம் உண்டாக்கிற்று.

மாரப்பன் சொன்னதையெல்லாம்—கொஞ்சம் கைச் சரக்கும் சேர்த்து அவன் வள்ளியிடம் தெரிவித்தபோது, உண்மையாகவே அவன் எதிர்பார்த்த பலன் கிட்டிற்று. அதாவது வள்ளியின் கோபமெல்லாம் மாரப்பன் மேல் திரும்பிற்று.

''ஓகோ! சக்கரவர்த்தியின் மகளை இவன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்; அதற்கு நீ தூது போக வேண்டுமோ? என்னிடம் மட்டும் அவன் அந்த மாதிரி சொல்லியிருந்தால் தலையிலே உடனே ஒரு சட்டி நெருப்பைக் கொட்டி இருப்பேன்; நீ கேட்டுக் கொண்டு சும்மா வந்தாய்!'' என்றாள்.

''சும்மாவா 'வந்தேன்? உனக்கு என்ன தெரியும்? எப்பேர்ப்பட்ட கோபம் அப்போது எனக்கு வந்தது, தெரியுமா வள்ளி? அவன் வாளைக் கொண்டே அவன் தலையை வெட்டிப் போடப் பார்த்தேன்; புங்க மரம் நடுவிலே நின்று தடுத்துவிட்டது!'' என்றான்.

''ஆமாம்; நீ வாய் வெட்டுத்தான் வெட்டுவாய்! வாள் வெட்டுக்கு உன் கையிலே சக்தி இருக்கிறதா?'' என்றாள் வள்ளி.

பொன்னன், ''இங்கே வா! நான் சொல்லுகிறது நிஜமா, இல்லையா? — என்று காட்டுகிறேன்'' என்று சொல்லி அவள் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு போனான். புங்க மரத்திலே கத்தி வெட்டு ஆழமாய்ப் பதிந்திருந்ததைக் காட்டினான்.

அதைப் பார்த்ததும் வள்ளியின் முகம் மலர்ந்தது. ''இந்த வெட்டை மரத்திலே ஏன் போட்டாய்? பாவம், பச்சை மரம்! அவன் மேலேயே போடுகிறதுதானே'' என்றாள்.

''இருக்கட்டும்; ஒரு காலம் வரும். அப்போது போடாமலா போகிறேன்?'' என்றான் பொன்னன்.

பிறகு, இருவரும் மேலே என்ன செய்வது என்று வெகுநேரம் யோசித்தார்கள்.

மாரப்பபூபதி எவ்வளவு துர்நடத்தை உள்ளவன் என்பதைச் சக்கரவர்த்திக்கு எப்படியாவது தெரிவித்துவிட வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால் எவ்விதம் தெரிவிப்பது?

''நீதான் அன்றைக்குச் சக்கரவர்த்திக்குக் கும்பிடு போட்டுக் காலில் விழுந்தாயே! அவரை உறையூரில் போய்ப் பார்த்து எல்லாவற்றையும் சொல்லிவிடேன்'' என்றாள் வள்ளி.

''நான் கலகத்தில் சம்பந்தப்பட்டவன் என்று உறையூரில் எல்லாருக்கும் தெரியுமே! உறையூருக்குள் என்னைப் போகவிட மாட்டார்கள். அதிலும், சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால் சந்தேகப்பட்டுக் காராக்கிரகத்தில் பிடித்துப் போட்டு விடுவார்கள்'' என்று பொன்னன் சொன்னான்.

''அப்படியானால் நான் போய் விட்டு வரட்டுமா?'' என்றாள் வள்ளி.

''நீ எப்படிச் சக்கரவர்த்தியைப் பார்ப்பாய்? உன்னை யார் விடுவார்கள்?''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது குடிசையின் வாசலில் குதிரைகள் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''யார் இப்போது குதிரை மேல் வந்திருக்க முடியும்?'' என்று யோசித்துக் கொண்டே வள்ளியும் பொன்னனும் வெளியில் வந்தார்கள். பல்லவ வீரர்கள் ஐந்தாறு பேர் வந்திருப்பதைப் பார்த்ததும், அவர்களுக்குக் கொஞ்சம் திடுக்கிட்டது.

வந்த வீரர்களின் தலைவன், ''ஓடக்காரா! உன்னைக் கைப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு வரும்படி சக்கரவர்த்தியின் கட்டளை. மரியாதையாய்

உடனே புறப்பட்டு வருகிருயா ? விலங்கு பூட்டச் சொல்லட்டுமா ?'' என்ருன்.

பொன்னன் கலவரம் அடைந்த முகத்துடன் வள்ளியைப் பார்த்தான். வள்ளி துணிச்சலுடன் வீரர் தலைவனை நோக்கி, ''சோழ நாட்டில் மரியாதைக்கு எப்போதும் குறைச்சல் இல்லை, ஐயா ! நீங்கள் பிறந்த ஊரில் தான் மரியாதைக்குப் பஞ்சம் போல் இருக்கிறது !'' என்ருள்.

''ஓகோ ! நீதான் வாயாடி வள்ளியா ? உன்னையும்தான் கொண்டு வரச் சொன்னார், சக்கரவர்த்தி!''

''ஆகா ! வருகிறேன். உங்கள் சக்கரவர்த்தியை எனக்குந் தான் பார்க்க வேண்டும். பார்த்து, 'உறையூரிலிருந்து காஞ்சிக்குப் போகும்போது கொஞ்சம் மரியாதை வாங்கிக் கொண்டு போங்கள்!' என்று சொல்ல வேண்டும்'' என்ருள்.

■ ■ ■

சக்கரவர்த்தியின் விஜயத்தை முன்னிட்டு உறையூர் வீதிகள் அழகாக அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தபோது, பொன்னனுக்கும் வள்ளிக்கும் ஆத்திரமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. முன் தடவை உறையூர் இவ்வளவு அலங்காரத்துடன் காட்சி அளித்தது, பார்த்திப மகாராஜா போர்க்குக் கிளம்பிய சமயத்தில்தான். ஆகா ! அதையெல்லாம் சோழ நாட்டு ஜனங்கள் அடியோடு மறந்துவிட்டார்கள் போலிருக்கிறது ! பார்த்திப மகாராஜாவின் மரணத்துக்குக் காரணமான நரசிம்மசக்கரவர்த்தியின் விஜயத்துக்காக இப்படியெல்லாம் நகரலங்காரம் செய்திருக்கிருர்களே! இது என்ன அவமானம் ? சோழ நாட்டுக்கு என்ன கதி நேர்ந்துவிட்டது ? அருள்மொழி ராணி இப்போது உறையூருக்கு வந்து இந்தக் கோலாகலங்களையெல்லாம் பார்த்தால் மனம் சகிப்பாரா ?— இவ்விதம் பேசிக் கொண்டே பொன்னனும் வள்ளியும் சக்கரவர்த்திக்கென்று புதிதாக அமைக்கப்பட்டிருந்த அரண்மனையை அடைந்தார்கள்.

அந்த அரண்மனையின் பெருமிதமும், அதில் காணப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளும் அவர்களைப் பிரமிக்கச் செய்தன; அவர்களின் ஆத்திரத்தையும் அதிகப்படுத்தின. சோழ மன்னர்கள் அமர்ந்து ஆட்சி செலுத்த வேண்டிய இடத்தில் வெளியூரான் வந்தல்லவா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிருன் ?

அரண்மனைக்குள் அவர்கள் ஓர் அறையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். அதற்கு அடுத்த அறையில் பேச்சுக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. கம்பீரமான ஓர் ஆண் குரல் அதிகமாகக் கேட்டது. ஓர் இளம் பெண்ணின் இனிய குரலும், சிரிப்பின் ஒலியும் இடையிடையே கேட்டன. சுவஸ்வரத்தில் இன்னேர் ஆடவன் குரலும் கேட்டது. அது மாரப்ப பூபதியின் குரல் மாதிரி இருக்கவே, பொன்னன் திடுக்கிட்டான்.

சக்கரவர்த்திக்கு விரோதமான சதியாலோசனையில் கலந்து கொண்ட



தன் பொருட்டு விசாரிப்பதற்காகத் தான் சக்கரவர்த்தி தங்களை அழைத்து வரச் செய்திருக்க வேண்டும் என்று பொன்னனும் வள்ளியும் கிளம்பும் போது ஊகித்தார்கள். விசாரணையின் போது தைரியமாக மறுமொழி சொல்லி, சக்கரவர்த்திக்குப் பொன்னன் கும்பிட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள். மாரப்ப பூபதியின் ஈனக் குரலிலிருந்து

தாங்கள் ஊகித்தது சரிதான் என்று அவர்களுக் குப்பட்டது. அப்போது வள்ளி பொன்னன் காதோடு ஏதோ சொன்னாள்.

அவள் சொல்லி முடிப்பதற்குள் உள்ளே யிருந்து கம்பீரமான குரல், ''எங்கே? அந்த ஓடக்காரனைக் கொண்டு வா!'' என்று கட்டளை யிட்டது. பொன்னனையும் வள்ளியையும் அடுத்த அறைக்குள் கொண்டு போனார்கள். அங்கே நவரத்தின கசிதமான சிங்காதனத்தில் சக்கரவர்த்தி கம்பீர தோற்றத்துடன் வீற்றிருப் பதையும், அவருக்கு அருகில் குந்தவிதேவி சாய்ந்து கொண்டு நிற்பதையும், எதிரே மாரப்பன் குனிந்த தலையுடனும் நடுங்



கிய உடம்புடனும் என் சாணுடம்பும் ஒரு சாணாய்க் குறுகி நிற்பதையும், வள்ளியும் பொன்னனும் போகும் போதே பார்த்துக் கொண்டார்கள். சக்கரவர்த்தியின் எதிரில் போய் நின்ற பிறகு அவர்களால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சக்கரவர்த்தியின் முகத்தில் பொங்கிய தேஜஸானது அப்படிக் கண்களைக் கூசச் செய்து அவர்களுக்கு அடக்க ஒடுக்கத்தை அளித்தது.

மாமல்ல சக்கரவர்த்தி இடி முழக்கம் போன்ற குரலில் சொன்னார் :

'' ஓஹோ ! இவன்தானா ? தோணித் துறையில் அன்றைக்குப் பார்த்தோமே? வெகு சாதுவைப் போல் வேஷம் போட்டு நடித்தான்! நல்லது, நல்லது! படகு தள்ளுகிறவன்கூடப் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு விரோதமாகச் சதி செய்வது என்று ஏற்பட்டு விட்டால், அப்புறம் கேட்பானேன் ? அழகுதான் !''

இவ்விதம் சக்கரவர்த்தி சொன்ன போது, பொன்னனும் வள்ளியும் அடியோடு தைரியத்தை இழந்து விட்டார்கள். அவர்களுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தோணித் துறையில் இனிய வார்த்தை பேசிய சக்கரவர்த்திக்கும், இங்கே நெருப்புப் பொறி பறக்கும்படி பேசும் சக்கரவர்த்திக்கும் காணப்பட்ட வித்தியாசம் அவர்களைத் திகைக்கச் செய்து விட்டது.


சக்கரவர்த்தி மேலும் சொன்னார்:

''இருக்கட்டும். உங்களைப் பின்னால் விசாரித்துக் கொள்ளுகிறேன். ஓடக்காரா ! நான் இப்போது கேட்பதற்கு மறுமொழி சொல்லு. ஏன் தலையைக் குனிந்து கொள்கிறாய்? நிமிர்ந்து என்னைப் பார்த்து உண்மையைச் சொல்லு. நமது சாம்ராஜ்யத்துக்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி விக்கிரம இளவரசரை முக்கியமாகத் தூண்டிவிட்டது யார் ?''

பொன்னன் பளிச்சென்று நிமிர்ந்து பார்த்து, ''பிரபோ ! இதோ உங்கள் முன்னால் நிற்கிறாரே, இந்த மாரப்ப பூபதிதான்!'' என்றான். (தொடரும்)

முள்ளும் முரடும், கல்லும் கரடும்!

ஒரு முறை உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர் அவர்கள், சங்கரதாஸ் சுவாமிகளை நோக்கி, ''சுவாமிகளே, உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும் போல் இருக்கின்றன'' என்றாராம். உடனே சுவாமிகள் சிரித்துக் கொண்டே, ''கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும் போல் இருக்கின்றனவே'' என்றாராம்.



''முள்ளும் முரடும்'', ''கல்லும் கரடும்'' என்பனவற்றை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், முரட்டுத்தனமான பாடல் என்றும் தோன்றும். ஆனால் உட்பொருள் அதுவன்று. ''முள்ளும் முரடும்'' என்பது பலாச் சுளையைப் போல இனிக்கிறது என்றும், ''கல்லும் கரடும்'' என்பது கற்கண்டைப் போன்றது என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

புலவர்களின் விளையாட்டுப் பேச்சுக்களில் கூட இவ்வாறு இனிமை சொட்டுவதைக் காண்கிறோம்.

-- காலஞ்சென்ற ஔவை தி. க. சண்முகம் அவர்களின் ஒரு கட்டுரையிலிருந்து -

அஸ்திவாரத்தில் பன்னிரண்டு லட்சம் ரூபாய் !

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள 575 அடி உயர டெலிவிஷன் கோபுரம் முழுவதும் விசேஷ உலோகப் பூச்சு கொண்ட இரும்புப் பகுதிகளால் (Galvanized Iron) இணைக்கப்பட்டது.

இக்கோபுரத்தின் மொத்த கட்டுமானச் செலவு ஐம்பது லட்சம் ரூபாய்கள். இதன் அஸ்திவாரம் அமைக்க மட்டும் ஆன செலவு பன்னிரண்டு லட்சம் ரூபாய்கள்.



இக்கோபுரத்தின் உச்சிக்குச் செல்லவும், இறங்கவும் இதன் மத்தியில் ஒரு மின்சார லிப்ட் இயங்குகிறது.

உயரத்தில், இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெறுகிறது இந்தக் கோபுரம். முதலாவது, பம்பாயில் உள்ள டெலிவிஷன் கோபுரம். அதன் உயரம் 985 அடிகள் !

இந்தக் கோபுரத்தை உருவாக்கிய ''திரிவேணி ஸ்டிரக்சரல்ஸ் லிமிடெட்'' நிறுவனத்தாரிடமிருந்து பெற்ற தகவல் இது.


காந்திஜி கடிதம்

தமது வாழ்நாளில் காந்திஜி எவ்வளவோ பேர்களுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். அவர் தமது கடிதங்களைத் தம் கையெழுத்துடனேயே முடிப்பது வழக்கம். ஆனால் அவர், காலஞ்சென்ற திருமதி இராஜகுமாரி அமிர்தகௌரி (சுதந்திர இந்தியாவின் சுகாதார அமைச்சராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றியவர்) சிறுமியாக இருந்த போது, அவருக்கு எழுதியுள்ள பல கடிதங்களில் மட்டும் முடிவில், ''அன்பு கொடுங்கோலன்'' என்றோ, அல்லது ''அன்பு கொள்ளைக்காரன்'' என்றோ முடித்திருக்கிறார்.



மேலும், அக்கடிதங்களின் ஆரம்பத்தில் ''எனது அன்புள்ள புரட்சிவாதி'' என்றும், ''எனது அன்புள்ள முட்டாள்'' என்றும் செல்லமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரம்: ''மகாத்மா காந்தியின் கடிதங்கள்-- சகோதரிகளுக்கு'' புத்தகம் -- ஆர். வெங்கட்ராமன்



'ஒளிரும்' வெண் சலவைக்கே
Weight when Packed 125 gm net
Supreme
det
detergent washing cake
for whiteness that 'Glows'
சுப்ரீம் டெட் டிடர்ஜெண்ட் சலவைக் கட்டி
தரத்தில் முன்னேற்றம் பெற்ற புதிய டெட்
கட்டியே மார்க்கெட்டில் விற்பனையாகும்
சுப்ரீம் டிடர்ஜெண்ட் கட்டி.
தூய்மையாக்கும் ஆற்றலுக்கு, நுரை
வளத்திற்கு, நறுமணத்திற்கு, வேறு எந்த
சலவைக் கட்டியும் இதற்கு ஈடாகாது!
உபயோகித்துப் பாருங்கள். அதன் வேறுபாட்டைக்
கண்கூடாகக் காணுங்கள். ஆம் அதுதான் சுப்ரீம்
டெட் கட்டி—'ஒளிரும்' வெண்மைக்கே!
பளிச்சிடும் வெண்மை,
டெட் தரும் வெண்மை

காந்தீயப் பணியில் பேராசிரியர்



"ஆக்ஸ்ஃபோர்டில் படித்துப் பட்டம் பெற்று ஆங்கிலத்தில் மகா புலமை வாய்ந்த பேராசிரியர் கே. சுவாமிநாதன் போன்ற அரிய மேதைகள் தமிழ்மீது தீவிர மோகம் கொண்டால் தமிழுக்கு யோகம் பிறந்து விட்டது என்பதில் சந்தேகம் என்ன?''

கல்கி தம் நண்பர்களிடம் இவ்வாறு அடிக்கடி உவந்து கூறுவது வழக்கம்.

சென்னை ராஜதானிக் கல்லூரியில் 1924 முதல் இருபது ஆண்டுகள் ஆங்கிலப் பேராசிரியராய்ச் சிறப்பாய்ப் பணியாற்றி, பின்னர் ஐந்தாண்டுகள் சென்னை ஆர்ட்ஸ் காலேஜின் முதல்வராய்ச் செயல்பட்ட காலமெல்லாம் எளிய தமிழ் நடை மறுமலர்ச்சியில் இப் பேராசிரியரின் பங்கு கணிசமானது. 1934ல் அவர் இயற்றிய ''கட்டை வண்டி'' பகடி நாடகமும், பின்னர் ''ஆனந்த விகடன்'', ''கல்கி'' தீபாவளி மலர்க் கட்டுரைகளும் தமிழ் நகைச்சுவை நடையில் நல்ல திருப்பங்களாக அமைந்தன. தமிழ்க் கலைக் களஞ்சியத் தொகுப்பை உருவாக்குவதில் தொடக்க காலம் முதற்கொண்டே சம்பந்தப்பட்டிருந்த பேராசிரியர் சுவாமிநாதன், கல்கியை அடுத்துத் தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுத் திறம்பட நிர்வகித்தார்.

ரமண மகரிஷியிடம் தீவிர ஈடுபாடு கொண்டுள்ள இவர் மகரிஷியின் மறைவு (1950)க்கு முன் பல ஆண்டுகள் அடிக்கடி திருவண்ணாமலை சென்று பகவானைத் தரிசித்து உரையாடும் பாக்கியம் பெற்றவர்.

கல்வித் துறையிலிருந்து 1952ல் வேலை ஓய்வு பெற்ற கையோடு ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளிதழின் கூட்டாசிரியர் பதவி இவரைத் தேடி வந்தது.

1960ல் இந்திய அரசாங்கம் இவரை மகாத்மா காந்தி நூற்றிரட்டு நிறுவனத்தின் உயர் ஆசிரியர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்தபோது ராஜாஜி இப்படிக் கேட்டு ஆசி வழங்கினாராம்: ''அட! இந்த சர்க்காருக்கு நீ இருப்பது எப்படித் தெரிந்தது? அது சரி! காந்தியைப் பொறுத்தவரை ஜமாய்த்து விடுவாய். ஆனால் ரமணரையும் கட்டிக் கொண்டிருக்கிறாயே! டில்லியில் இரண்டுமாய்ச் சேர்ந்து சரிப்பட்டு வருமா?''

கர்ம வீரர் காந்தி மகான், ஞான ஒளி ரமண மகரிஷி ஆகிய இருவரது முரணற்ற பணிகளிலும் சென்ற பதினாறு ஆண்டு காலமாகப் பாரதத் தலைநகரில் ஜமாய்த்து வரும் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களுக்கு இந்த டிசம்பர் 3-ம் தேதி எண்பதாவது பிறந்த நாள். அதையொட்டி இவ்விதழ் மேலட்டையில் அவர் படத்தைப் பிரசுரித்துப் பெருமையடைகிறோம்.

டில்லி ரமண கேந்திராவை நிறுவி, தற்போது அதன் உபதலைவராகவும் இருந்து வரும் பேராசிரியர், அக் கேந்திராவுக்கு ஒரு தியான மண்டபமும், சிறு கட்டடமும் எழுப்பச் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் திறப்பு விழா நடத்தினார். அங்கே வாராந்திர சத் சங்கங்களைத் தவிர, சமூகப் பணிகளும் நடக்கின்றன.

தேச பிதா காந்திஜியின் நல்லுரைகள், கடிதங்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள் யாவற்றையும் காலவாரியாக வரிசைப்படுத்திக் கோத்து, தக்க விவரக் குறிப்புகளுடன் மத்திய அரசு சார்பாக நூற் தொகுப்பாகத் திறன்பட வெளியிட்டு வரும் மகத்தான சேவையைப் போற்றும் வகையில் நான்கு ஆண்டுகளுக்கு முன் ஜனாதிபதி இவருக்கு ''பத்ம பூஷண்'' விருது வழங்கினார். ஆங்கிலத்திலும் இந்தியிலும் தனித் தனியே வெளியாகும் இத்தொகுப்பில் இதுவரையில் 64 நூல்கள் பிரசுரமாகியுள்ளன. இன்னமும் 26 நூல்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் வெளிவர இருக்கின்றன. இம்மாபெரும் தேசியப் பணியின் தலைமைப் பொறுப்பைப் பேராசிரியர் சுவாமிநாதன் முதுமைப் பிராயம் காரணமாகப் பிறர் தலையில் சுமத்த நேர்ந்தாலும் இப்பணியை நிறைவேற்றும் குழுவுக்குக் கௌரவ ஆலோசகராகத் தொடர்ந்து இருந்து வருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

பத்தொன்பது வயதில் கைப் பிடித்த இல்லாளின் ஆதுர அனுசரணையிலும், மூன்று பெண்களின் அன்புப் பிணைப்பிலும் வீட்டில் பேராசிரியர் திளைத்து வருபவர். வெளியில் நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள், அறிஞர்கள், அன்பர்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரித்தானவர். மன வெளியிலோ ரமணரின் உணர்வுப் பிரஞ்ஞையாகிற சிவானந்தத்தில் நீந்தித் திளைப்பவர். செயலாற்றலிலே காந்தீயக் கர்மவீரர்.

அவர், தம் அன்பு, ஞான, கர்மப் பணிகளையும் இலக்கியச் சாதனைகளையும் தொடர்ந்து நடத்திப் பல்லாண்டு வாழ்க!

புகைப்படங்கள் : டில்லி ஸ்ரீநிவாஸன்

ரா. கி. ரங்கராஜன்



மிகச் சிறந்த
அழகுக்கு அழகூட்ட
புதிய
அப்கோலைட் சூப்பர்அக்ரிலிக் எமல்ஷன்
அழகிய இல்லங்களுக்கு அருமையான பாதுகாப்பு
Apcolite
SUPER ACRYLIC EMULSION
ENAMEL
அப்கோலைட் ஸிந்தெடிக் எனாமல் மரம் மற்றும் உலோகப் பரப்புகளுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பளிக்க, மிக அதிக விற்பனையாகும் எனாமல்.
ஏஷியன் பெயின்ட்ஸ்
CMAP-7-183 tam

அவளைச் பார்க்கப்பான்

கோமல் சுவாமிநாதன்



■ ''பெங்களூர் ஏன் வந்தீங்க?''
''மெட்ராஸ்லேதான் இப்பத் தண்ணிப் பஞ்சமாச்சே!''

காட்சி – 2

(ஏழுமலை நாயுடு, 'அன்னக்கிளி உன்னைத் தேடி...' என்று பாடிக்கொண்டே தள்ளாடிய வாறு வருகிறார்.)

ஏழுமலை: (தனக்குள்) என்னப்பா இது. இந்தப் பெங்களூரிலே நான் தங்கின ஹோட்டலுக்குப் போற வழி தெரியலியே. யாரைக் கேட்டாலும் கொத்திலோ கொத்திலாங்கிறாங்க. தமிழன் ஒருத்தன் கூடக் கிடைக்க மாட்டேங்கறான்.

(என்று கூறியவாறு பார்க் பெஞ்சில் அமருகிறார்.)

ஹோட்டல் பேரு வேற மறந்து போச்சு. எந்த ஹோட்டல்லே ரூம் எடுத்தேன், ரங்கப்பா.

(தலையைப் பிடித்துக் கொள்ளுகிறார்.)

ரங்கப்பா... உன்னை எங்கெல்லாம் தேடி அலையறது? காஞ்சிபுரம் கருட சேவை முடிஞ்ச உடனே ஊருக்குப் போகலாம் னியே – உன்னை வலுக்கட்டாயமாப் பெங்களூர் கூட்டியாந்தேனே! இப்ப உன்னைப் பிரிஞ்சிட்டேனே. சமுத்திரத்துக்கு இந்தப் பக்கம் ராமரு, அந்தப் பக்கம் சீதை இப்படி ஆகிப்போச்சே நம்ம கதி – நம்மைச் சேர்த்து வைக்க ஆஞ்சநேயர் யாரும் வர மாட்டாங்களா?

(இளமுருகு உள்ளே வருகிறான், அவனும் நடை தள்ளாடியபடி இருக்கிறான்.)

ஆஞ்சநேய சாமி வாங்க...என் சீதை கிட்ட இருந்து மோதிரத்தை வாங்கிட்டு வந்தீங்களா?

இளமுருகு: அடப் பாவி மனுசா! நான் அந்தப் பொண்ணுகிட்ட இருந்து மோதிரத்தை எடுத்தது உனக்கு எப்படிய்யா தெரியும்!

ஏழுமலை: அட நீ தமிழனா?...

இள: ஆமா. நான் தமிழன்தான்.

ஏழு: வாப்பா, வாப்பா... மருந்துக்கு ஒரு தமிழன் கிடைக்க மாட்டானான்னு ஏங்கிக்கிட்டிருந்தேன்பா.

இள: ஓ... நீ மருந்து சாப்பிடற ஆளா... நான் கொஞ்சம் மருந்து வைச்சிருக்கேன். வாப்பா, சாப்பிடுவோம்.

ஏழு: சாப்பிடுவம்பா.

இள: பெங்களூருக்குப் புதுசா?

ஏழு: இல்லேப்பா. இரண்டு மூணு வாட்டி வந்திருக்கேன். – இந்த தபா காஞ்சிபுரம் கருட சேவைக்கு நானும் என் சம்சாரமும் வந்தோம். அப்படியே வேலூர் கொழுந்தியாளைப் பார்க்கணும்னு வந்தோம். நேரே மெட்ராஸ் போக வேண்டியது தானே? ரூட்டைத் திருப்பிப் பெங்களூர் வந்துட்டோம்.

இள: பெங்களூர் ஏன் வந்தீங்க?

ஏழு: மெட்ராஸ்லேதான் இப்ப தண்ணிப் பஞ்சமாச்சே.

இள: ஏன் நல்ல மழை பெஞ்சதே.

ஏழு: நான் சொல்ற தண்ணி அது இல்லேப்பா. (கையைக் காட்டி) இதுலே ஒரு சபலம். ரொம்ப நாளாச்சு. இங்க ஒரு விசேஷமான அஞ்சு தலை விநாயகர் கோவில் இருக்குன்னு சொல்லிப் பொண்டாட்டியைக் கூட்டிட்டு வந்திட்டேன்.

இள: இந்த ஊர்லே ஏதுப்பா அஞ்சு தலை விநாயகர் கோவிலு!

ஏழு: இந்த ஊர்லேதான் இருக்குது. உனக்குத் தெரியாது.

இள: எங்கப்பா இருக்குது?

ஏழு: சாதாரணக் கண்ணுக்குத் தெரியாதுப்பா.

இள: பக்தர்கள் கண்ணுக்குத்தான் தெரியுமோ?

ஏழு: இல்லேப்பா. இதை உள்ளே நுழைந்திக்கிற ஒருதலே அஞ்சு தலேயாத் தெரியும். அதைத்தான் சொன்னேன். என் பெண்டாட்டி பெங்களூர்லே வந்து இறங்கிய உடனே அஞ்சு தலே விநாயகர் கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போங்கன்னு உயிரை எடுத்தா. இருடி டாக்ஸி கூட்டிக்கிட்டு வரேன்னு வந்தேன். எனக்கு அஞ்சு தலே விநாயகர் தெரிஞ்சுட்டது. ஆனா தங்கியிருக்கிற ஹோட்டலுக்குத்தான் வழி தெரியல்லே!

இள: எந்த ஹோட்டல்லே தங்கியிருக்கீங்க?

ஏழு: ஹோட்டல் பேரைத்தானேப்பா மறந்து தொலேச்சிட்டேன். ரங்கப்பா...

இள: ரங்கப்பான்னு இங்கே ஹோட்டல் இல்லேயே.

ஏழு: அது என் பெண்டாட்டி பேருப்பா. ரங்கப்பா உன்னே எங்கே தேடுவேன்?

இள: ஆ!... அம்பாசடர்லே இறங்கினீங்களா?

ஏழு: இல்லேப்பா. பஸ்ஸுலேதாம்ப்பா வந்து இறங்கினோம்.

இள: காரைச் சொல்லல்லே. ஹோட்டல் பேரு அம்பாசடரா?

ஏழு: இல்லப்பா.

இள: உட்லண்ட்ஸா?

ஏழு: யப்பா, நீ நல்லா இருக்கணும். உன் பேரு என்னப்பா?

இள: இளமுருகு.

ஏழு: இளமுருகு! நல்ல பேரு.

இள: உங்க பேரு?


ஏழு: ஏழுமலே நாயுடு.

(ரங்கநாயகி கோபத்துடன் வருகிறாள்.)

ரங்க: யப்பா! அஞ்சு தலே விநாயகரு கோயிலு பார்க்கலாம்னு கூட்டியாந்துட்டு இங்க தண்ணி போட்டுக்கிட்டிருக்கியாப்பா? உன்னேக் காணோம்னு தெருத் தெருவா அலேயுறேன்.

ஏழு: ரங்கப்பா, என்னே மன்னிச்சிடேப்பா. லேசாச் சாதிச்சுக்கிட்டேன்.

இள: இதுல கொஞ்சம் போடுங்க. உங்களுக்கும் அஞ்சு தலே விநாயகரு தெரியும்.



● "நீயா உன்னே ரொம்ப புத்திசாலின்னு நினைச்சேன். இவ்வளவு மட்டமா ஒரு செயலைப் பண்ணி இருக்கியே!"

ஏழு: இல்லப்பா.

இள: இன்டர்நேஷனலா?

ஏழு: இல்லேப்பா.

இள: எதுவா இருக்கும்? ஹோட்டல் எவி கண்டா?

ஏழு: அடா புடான்னு எல்லாம் வராதப்பா. கொஞ்சம் மரியாதையான ஹோட்டல். ரங்கம்! சீதை ராமரை நினேச்சு ஏங்கி அசோக வனத்தில் உட்காந்த மாதிரி... யப்பா..யப்பா.. ஞாபகம் வந்திடிச்சிப்பா. ஹோட்டல் அசோகா.

இள: அதுவா? பக்கத்துத் தெருவதாவ இருக்குது. நான்கூட அங்கேதான் தங்கி இருக்கேன். நான் கூட்டிக்கிட்டுப் போறேன்.

ரங்க: யப்பா, பல்லேத் தட்டிப்புடுவேன். யார் இந்தக் கயவாளிப் பய?

இள: யாருப்பா இது?


ஏழு: என் சம்சாரம்.

ரங்க: என்னப்பா நீ இத்தனே வயதுக்குப் பிறகும் இந்தக் கெட்ட பழக்கத்தை ஒழிச்சுக்கிடாம இருக்கியே. எத்தனே கோவில் சுத்தி என்ன பிரயோசனம்? சாமி நமக்கு எப்படி வரம் கொடுப்பாரு?

ஏழு: ரங்கம்! எத்தனே கோவில் சுத்தினேன்? ஒரு புள்ளேயை எனக்குக் கொடுக்கலியே!

இள: ஐயா! என்னே உங்க புள்ளேயா ஏத்துக்குங்க.

ஏழு: உன்னை என் மகனு ஏத்துக்கலாம். ஆனு ஒரு திருட்டுப் பயலே எப்படிப்பா நான் மகனு ஏத்துக்கிறது?
இள: திருட்டுப் பயலா?
ஏழு: நீதானேப்பா சொன்னே? அந்தப் பொண்ணு கிட்டே மோதிரத்தை எடுத்தது உனக்கு எப்படித் தெரியும்னு கேட்டியேப்பா?
இள: ஏழுமலே ஆண்டவனே! என்னைக் காட்டிக் கொடுத்திடாதீங்க.
ஏழு: ஏம்பா பெங்களூர்லே பிக்பாக்கெட் அடிக்கிறதுதான் உன் வேலையா?
இள: இல்லேப்பா. நானும் மெட்ராசுதான். என் முதலாளிங்க காரிலே வந்தாங்க. வண்டி ரிப்பேர் ஆயிட்டுது. அதைச் சரி பண்ணிக் கொண்டு வரச் சொல்லிட்டு அவுங்க ரயிலிலே போயிட்டாங்க.
ஏழு: அந்தப் பொண்ணைப் பார்த்து மோதிரத்தைக் கொடுத்திடுப்பா.
ரங்க: அடப் பாவி! மோதிரத்தைத் திருடிட்டானு? இங்க ஒரு தானுக்காரர் நின்



"என்னப்பா நீ இத்தனை வயதுக்குப் பிறகும் இந்தக் கெட்ட பழக்கத்தை ஏற்படுத்திக்கிட்டா இருக்கியே!..."

னுக்கிட்டிருந்தாரே, அவரைக் கூப்பிட்டா உண்மையைச் சொல்றேன்.
இள: இந்தாங்க அந்த மோதிரம். என்னை ஆளை விடுங்க.
(மோதிரத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடுகிறான்.)
ரங்க: என்னப்பா, இவன் நம்மைத் திருடனுக்கிட்டுப் போவான் போல இருக்கே!
(ஏழுமலை மோதிரத்தைக் கையில் எடுக்கிறார்.)
ஏழு: ரங்கப்பா, இதை என்ன செய்யலாம்?
ரங்க: இங்க குடுப்பா. அடுத்த வாட்டி திருப்பதி போறப்போ உண்டியல்லே போட்டுடுவோம். நமக்கு அது வேணும்.

காட்சி — 3

(மூங்கில் பூ அலுவலகம். ஆசிரியர் சிவராமன் அறை. பத்திரிகை அதிபர் சொக்கலிங்கம், அவருடைய மகள் தீபா. காட்சி ஆரம்பத்தில் தீபா ஆசிரியர் மேஜையில் ஏதோ குடைந்து கொண்டிருக்கிறாள். சொக்கலிங்கம் வருகிறார்.)

சொக்கலிங்கம்: என்னம்மா தேடுறே?
தீபா: அப்பா, ஆசிரியருடைய தலையங்கம் பிரிண்டுக்குப் போயிட்டுதா?
சொக்க: காலையிலே அனுப்பிச்சாச்சே!
தீபா: அடடா! நான் படிக்கவேயில்லையே!
சொக்க: நாளைக்குப் பிரிண்டாகி வந்து விடுமே! பத்திரிகையிலேயே படிக்கிறது!
தீபா: எத்தனையோ விஷயங்கள் அச்சுலே வருது. ஆனு சிவராமனுடைய சொந்தக் கையெழுத்தில படிக்கும்போது அதில ஒரு ஜீவனே இருக்குது.
சொக்க: என்ன தீபா, சிவராமனுக்கு ஒரே புகழ் மாலை சூட்டிக்கிட்டு இருக்கே.
தீபா: அந்த மாலையைச் சூட்டிக்கொள்ள அவருக்குத் தகுதி இல்லையாப்பா?
சொக்க: நிச்சயமா அவனுக்குத் தகுதி உண்டு. ஆனு அவனுடைய கட்டுரைகள், எழுத்துக்கள் உனக்கு எந்த விதத்திலும் பயன்படாது.
தீபா: ஏன்?
சொக்க: அவன் நாஸ்திகன். அவனுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. அந்த மாதிரிக் கொள்கையை வச்சு அவன் ஒருத்தனுல்தான் எழுத முடியும். நாமெல்லாம் சராசரி மனிதர்கள் — அறிவுக்குப் புலப்படுதோ இல்லையோ, கடவுளை நம்பித்தான் ஆகணும்.



யாருக்கு லாபம்?

சில தனியார் மருத்துவ மனைகளில் மிகுதியான கட்டணம் வசூலிக்கப் பெறுகிறது என்ற கருத்தில் கர்நாடக மாநில அரசு, இன்ன இன்ன அறுவைச் சிகிச்சைக்கு இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்கலாம் என உச்ச வரம்பு விதித்தது. விளைவு, 'காடராக்ட்' அறுவைச் சிகிச்சைக்கு ரூ. 250 தருவதாக ஒப்புக் கொண்டிருந்த ஒரு நபர் புதுச் சட்டப்படி ரூ. 350 கட்டணம் செலுத்தும்படி நேரிட்டது!

— பாணன்

தீபா: சிவராமனுடைய கொள்கைகளை ஒத்துக்காத நீங்க ஏன் அவரை உங்க பத்திரிகைக்கு ஆசிரியராப் போட்டிருக்கீங்க?

சொக்க: சிவராமன் ஒரு சிறந்த எழுத்தாளன். மனுதர்மமும் தார்மீக உணர்வும் அவன் எழுத்துக்கு ஆணிவேர். அவன் எழுதுகிற தமிழ் பாமரனுக்கும் புரியற புதுமைத் தமிழ். அவன் எழுத்துக்கு வரவேற்பு இருக்கு. பத்திரிகை ஏராளமா விற்பனை ஆகுது.

தீபா: சுருக்கமாச் சொல்லப்போனா பத்திரிகை நடத்தறது உங்களுக்குப் பெரிய லட்சியம் இல்லே. லாபம் தரக்கூடிய ஒரு வியாபாரம்தான்.

சொக்க: எக்ஸலாக்ட்லி! சிவராமன் எனக்கு ஒரு லாபக் கணக்கு! வியாபார ரீதியா அவன் எனக்கு ஓர் ஆஸ்தி!

தீபா: அதானே பார்த்தேன். சிவராமனுடைய எண்ணங்கள் தமிழ் நாட்டில் பரவுவதை விட உங்க பாங்குக் கணக்கில் பணம் ஏறுவது உங்களுக்குப் பெரிய விஷயம்!

சொக்க: என்ன இருந்தாலும் நான் ஒரு பிஸினஸ்மேன். என்னுடைய மூலதனத்தை ஒரு 'ரிஸ்க்' எடுத்துப் பத்திரிகையில் முடக்கல்லியானு சிவராமன் எழுதுவதற்கு ஏது சாதனம்? (மணி அடிக்கிறார். இளமுருகு வருகிறான்.) இரண்டு கூல் டிரிங்க் வாங்கிக்கிட்டு வா.

சொக்க: ஏம்மா, சிவராமனுடைய எழுத்துக்கள் உன்னை ரொம்பக் கவர்ந்திருக்குன்னு நினைக்கிறேன். அது எனக்குப் பரம சந்தோஷம். ஆனா ஒரு சந்தேகம்.

தீபா: அதாவது சிவராமனுடைய எழுத்துக்கு மட்டும் நீ அடிமையா இல்லே சிவராமனுக்கே அடிமையான்னு கேக்குறீங்க. (இளஞ் சிரிப்பு).

சொக்க: என் கருத்தை நீ நல்லாப் புரிஞ்சிக்கிட்டே.

தீபா: சிவராமனுடைய எழுத்துக்கு மட்டும்தான் நான் அடிமை.

சொக்க: சந்தோஷம். தமிழ் நாட்டில் சிவராமனுக்குள்ள லட்சோப லட்சம் ரசிகைகளில் நீயும் ஒருத்தி. அவ்வளவு தானே...?

தீபா: ஆமா... ஏன் கேட்கிறீங்க?

சொக்க: ஒருவேளை சிவராமனோட கல்யாணம் பேசக் கூடிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டுட்டியோன்னு பயந்துட்டேன்.

தீபா: நீங்க சொல்றது பாதி உண்மை.

சொக்க: பாதி உண்மையா?

தீபா: ஆமா! சிவராமனோட நீங்க சம்பந்தம் பேச வேண்டி வரும். ஆனா அவருக்காக இல்லே!

சொக்க: பின்னே யாருக்காக?

தீபா: சிவராமன் தம்பி நித்யாவுக்காக.

சொக்க: தீபா, நிசமாகவா சொல்றே?

தீபா: ஆமாம்பா. உங்ககிட்ட ரொம்ப நாளாகவே சொல்லணும்னு இருந்தேன். நீங்களே கேட்டுட்டீங்க.

சொக்க: அப்படியா? ஆச்சரியமா யிருக்கே. நித்யா இங்கே வரது. நீயும் அவனும் பழகறது. சில சமயம் ரெண்டு பேரும் வெளியே உலாவப் போவது — எல்லாம் ஒரு சாதாரண நட்புன்னு நெனைச்சேன். அதில ஒரு ஆழம் இருக்குன்னு இப்பத் தான் புரியுது.

தீபா: இதிலே உங்க அபிப்பிராயம் என்னப்பா?

சொக்க: இரண்டு பேரும் முடிவு பண்ணிட்டீங்க. இதிலே என் அபிப்பிராயம் இரண்டாம் பட்சம்.

தீபா: அப்ப இந்த விஷயத்திலே நீங்க...

சொக்க: கவலைப்படாதே. முடிச்சுட்டாப் போச்சு!

(தீபா வெட்கமுறுகிறாள். சிவராமன் வருகிறான்.)

சொக்க: வாப்பா. ஒரு பெரிய நியூஸ் உனக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கு.

சிவராமன்: என்ன சார்?

சொக்க: இந்தச் சொக்கலிங்கம் உன் சம்பந்தி ஆகப் போகிறார்.

சிவ: எனக்குப் புரியலையே!

சொக்க: உனக்குப் புரியாது. ஆனால் சொன்னால் புரியாமல் போகாது. தீபாவும் நித்யாவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க.

சிவ: அப்படியா தீபா...?

(தீபா - மௌனம்.)

அந்த ராஸ்கல் நித்யா கூட என்கிட்டச் சொல்லவே யில்லையே! தீபா, உன்னை ரொம்பப் புத்திசாலின்னு நெனைச்சேன். இவ்வளவு மட்டமா ஒரு செலக்ஷனைப் பண்ணியிருக்கியே.

தீபா: ஏன், சார்!


சிவ: நித்யா ஒரு சாதாரண மனிதன்! காலையிலே குளிச்சிட்டுச் சோத்தை அள்ளிப் போட்டுக்கிட்டு ஆபீசுக்கு ஓடுற கோடானு கோடி மனிதர்களிலே அவனும் ஒருத்தனா இருப்பான். அவன் வாழ்க்கையிலே 'திரில்' கிடையாது.

தீபா: எனக்கு அதெல்லாம் தேவையில்லே. என் வீட்டுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கச் சாதாரண அரிக்கேன் லைட் போதும். வானத்து நட்சத்திரம் வரணும்னு ஆசைப் படறவ இல்லே நான்.

சிவ: ரொம்ப அழகாப் பேசறயே! நித்யா உண்மையிலேயே அரிக்கன் லைட்தான். சில சமயம் எரிவான், சில சமயம் புகைவான்.

(தொடரும்)

✖ இந் நாடகத்தில் இடம்பெறும் புகைப்படங்களையும்
சென்ற இதழ் வண்ணப் படத்தையும் எடுத்தவர்: உத்ரா



ஜெமினி டீ

தேயிலைச் சுவையிலே ராஜ திலகம்



இதோ, செழுமைத் தேயிலை ஜெமினி.
நாவிலே நறுமண 'தர்பார்'—
கெட்டித் தேநீர் தந்திடும் ராசி—எனவே
கோப்பைகள் அதிகம் அளித்திடும்.
கொண்டாடத் தக்க சிக்கனம் இது.
ஜமாய்த்துப் பருகுவீர் இனி—

ஜெமினி டீ

டாடா-ஃபின்லே படைப்பு

dCA/TFGT/2e Tam.



'ஜே.ஜே' என்றிருந்த ஜவாஹர் நகர்!

இந்திரா காந்தி. அயல் நாட்டவரும் கூடிய இளைஞர் காங்கிரஸ மாநாட்டில் பேசுகிறார்

இளைஞர் காங்கிரஸ் புது வேகத்துடன் தோன்றி ஒரு வருஷம்தான் ஆகியிருக்கிறது. ஆயினும் கோஹாட்டியில் தேசத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வந்திருந்த பிரதிநிதிகள் 13,500க்கு மேல் இருக்கும்! இளைஞர் மகாநாட்டின் முடிவுரையாக ஸ்ரீமதி இந்திராகாந்தி பேசிய போது, ''மகாநாட்டின் பெருமையையெல்லாம் இளைஞர்களே அடித்துக் கொண்டு போய்விட்டார்கள்!'' என்று கூறினார்.

அதற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு மாநில முதன் மந்திரியும் இளைஞர் காங்கிரஸையும் திரு ஸஞ்சய் காந்தியையும், அவரது ஐந்து அம்சத் திட்டத்தையும் வானளாவப் புகழ்ந்து பாராட்டிப் பேசியதைக் கேட்ட போது, வரும் காலத்தில் காங்கிரஸ் கட்சியைவிட மிகவும் செல்வாக்கு வாய்ந்த சக்தியாக இளைஞர் காங்கிரஸ் விளங்கப் போகிறது என்பது தெளிவாகப் புரிந்தது.

இரண்டு நாட்களும் இளைஞர் காங்கிரஸ் நடத்திய மகாநாட்டு நடவடிக்கைகளைப் பார்த்த போது எப்படி இருந்த இளைஞர்கள் எப்படி மாறிவிட்டார்கள் என்று வியப்பாக இருந்தது. ஸ்டிரைக், பஸ்ஸை நிறுத்துவது, ரயில் வண்டிச் சங்கிலிகளை இழுப்பது இப்படி அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த மாணவர் சமுதாயம் ஆக்க ரீதியில் செயல் படுமாறு உருப்படியான செயல் திட்டம் வகுத்ததற்கு இளைஞர் காங்கிரஸை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இளைஞர்மகாநாட்டைத் தொடங்கி வைத்து திரு ஸஞ்சய் காந்தி பேசிய போது இதையே தான் வேறுவிதமாகக் குறிப்பிட்டார்:

'' சில அரசியல் கட்சிகள் இளைஞர் காங்கிரஸுக்கு அரசியல் ரீதியான திட்டம் இல்லை என்று குறை கூறுகின்றன. ஓடும் ரயில்களை நிறுத்துவதும், நாட்டு உடைமைகளைக் கொளுத்துவதும்தான் அவர்கள் அரசியல் திட்டமாக இருந்திருக்கிறது. நமது திட்டத்தை அரசியல் திட்டம் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள், சோஷலிஸம் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள், பெயர் என்னவானாலும் ஏழை மக்களை முன்னேற்றுவது ஒன்றுதான் நமது திட்டம்'' என்றார்.


ஒவ்வொரு ஜில்லாவிலும் மாணவர்களின் வேலை முகாம் நடத்துவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆறுயிரம் பிளாக்கு (Block)

இளைஞர் காங்கிரஸில் ஸஞ்சய் பேசுகிறார்

எஸ்.பி.எஸ்







களில் கமிட்டிகள் அறுபது லட்சம் கிராமங் களைக் கவிகரித்து, இருபது அம்சத் திட்டத்தை யும், ஐந்து அம்சத் திட்டத்தையும் மக்களுக்கு அறிமுகப்படுத்துவது; இயன்றவரை நிறை வேற்றுவது என்று தீர்மானித்திருக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் சுல்தான்பூர் என்ற ஊரில் ஒன்றரை மாதத்தில் ஐம்பது கிலோ மீட்டர் ரோடு போட்டார்களாம் இளைஞர்கள். இப்பணியில் கல்லூரி மாணவர் களும் கலந்து கொண்டார்கள். கிராமத்தில் முகாம் அமைத்து அவர்களே சமைத்துக் கொண்டார்கள், கிராம மக்களோடு நெருங் கிய உறவு ஏற்படுத்திக் கொண்டார்கள். இவ்விஷயங்களை திரு சஞ்சய் காந்தி கூறிய போது, மெய்சிலிர்க்கத்தான் செய்தது.

இளைஞர் காங்கிரஸின் தலைவரும், இந்த முதல் மகாநாட்டின் தலைவருமான ஸ்ரீமதி அம்பிகா ஸோனி மிகச் சிறப்பாக மகா நாட்டை நடத்திச் சென்றது வியப்பூட்டியது. தமிழ் நாட்டிலிருந்து பல மாணவப் பிரதி நிதிகள் வந்து தமிழ் நாட்டு இளைஞர்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அயல் நாடுகளிலிருந்தும் பல இளைஞர்கள் வந்திருப் பதைப் பார்த்ததும் உலக முழுவதுமே இளை ஞர் சமுதாயத்தினிடையே புதிய விழிப்பும், நேச பாவமும் ஏற்படத் தொடங்கியிருக் கிறதோ என்று எண்ணத் தோன்றியது.

எல்லோரும் சேர்ந்து தேசிய கீதம் பாட மகாநாடு முடியும் என்று அம்பிகா ஸோனி அறிவித்தார். அப்படியே அந்த அழகான மண்டபத்தில் கூடியிருந்த இருபதினாயிரம் பேரும் சேர்ந்து பாடியபோது ஒரு புதிய எழுச்சியும் மெய்சிலிர்ப்பும் ஏற்பட்டன.

இரண்டு நாள் இளைஞர் மகாநாட்டுக்குப் பிறகு 21, 22 இரண்டு நாட்கள் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது.

இதற்கு மற்றோர் விதத்தில் தனிச் சிறப்பு உண்டு. அஸ்ஸாம் மாநிலத்தைச் சுற்றி மலைப் பகுதிகளில் வாழும் மக்கள், இதுகாறும் தங்களுக்கும், பாரத நாட்டுக்கும் சம்பந்த மில்லை போல் ஓரளவு விரோத மனப்பான்மை யோடு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இப்படி பாரத நாட்டு வட கிழக்கு எல்லையில் இமய மலைச் சாரலில் சந்தேகத்துக்குரிய மக்களாக அவர்கள் வாழ்ந்து வந்தது பாரத நாட்டின் பாதுகாப்புக்கே கவலை அளிப்பதாக இருந் தது. இந்த மகாநாட்டில் அவர்கள் முழு மனத்துடன் 'நாங்களும் பாரத நாட்டு மக்கள் தான், எங்களுக்கும் தேசிய காங்கிரஸில் இடமுண்டு' என்று ஆர்வத்தோடு சேர்ந்து கொண்டனர். சொல்லப் போனால் இந்த மகாநாட்டையே அவர்கள்தான் நடத்தி யிருக்கிறார்கள். நாகாலாந்து, அருணாசலப் பிரதேசம், மிஜோராம், சிக்கிம், திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, அஸ்ஸாம் ஆகிய எட்டு பிரதேச மக்கள் இந்தக் காங் கிரஸ் கூட்டத்துக்காகப் பாடுபட்டு இருக் கிறார்கள். கோஹாட்டியின் முக்கிய பகுதியி லிருந்து சற்றுத் தள்ளி மலைகளின் அடி வாரத்தில் இயற்கை வனப்புக் கொழிக்கும் இடத்தில் காடு திருத்தி, பதினையாயிரம் மாணவர்கள் தங்கக்கூடிய யுவ நகரையும், லட்சம் பேர்கள் உட்காரக்கூடிய, ஜவாஹர் நகரையும் சிருஷ்டித்திருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான வண்ண மின் விளக்குகளும், அலங் காரங்களும், மாபெரும் பந்தலும் கொண் டது ஜவாஹர் நகர். கண்காட்சி அரங்கத்தை யும் தனியே அமைத்திருந்தார்கள். போக்கு வரத்து முதலிய எல்லாவித வசதிகளையும் செய்து விருந்தோம்பிய மனப்பான்மை யைப் பார்த்த போது இம்மலைப் பகுதி மக்கள் நமது பாரதப் பிரதமர் இந்திராகாந்தியிடம் எவ்வளவு அன்பும் நம்பிக்கையும் கொண்

அஸ்ஸாம் முதல் மந்திரி ஸரத் சந்திர ஸின்ஹா காங்கிரஸ் தலைவர் டி. கே. பரூவா அவர்களுக்கு 'பாட்ஜ்' அணிவிக்கிறார்.



இளைஞர் காங்கிரஸ் மகாநாடு தொடங்குவதற்கு முன் தலைவி அம்பிகா ஸோனி கொடி ஏற்றுகிறார். அருகில் நிற்கும் இளைஞர் வரவேற்புக் கமிட்டியின் தலைவர் அபூர்வ ஸின்ஹா.





'கிப்ளிங்' என்ற மேலை நாட்டுக் கவிஞர் எழுதிய 'உலகமே உன்னுடையது' என்ற கவிதைதான் அமரர் ராஜாஜி அவர்களுக்கு மிகவும் பிடித்தமான கவிதையாகும். அக்கவிதையின் தமிழாக்கத்தைக் கீழே தருகிறேன்.

இந்த உலகமே உன்னுடையது

எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும்போது
உன்னிடம் நீயே நம்பிக்கை கொள்ள முடியுமானல்
பிறரால் வெறுக்கப்பட்டாலும்
வெறுப்புக்கு உன் மனத்தில் இடம் கொடாதிருந்தால்
வெற்றி தோல்விகளை அனுபவித்து

அந்த இரண்டையும் ஒன்றைப் போலவே கருத
முடியுமானல்

யாருடன் சேர்ந்து பேசினலும்
பண்புகளைக் கட்டிக் காக்க முடிந்தால்
அரசர்களுடன் பழகினலும்
பெரியவர்களின் தொடர்பு விட்டு விடாமலிருந்தால்

ஒவ்வொரு விநாடியும்
பயனுள்ள வாழ்வு நடத்த முடியுமானல்
இந்த உலகமே உன்னுடையது
இதற்கும் மேலாக என் மகனே
நீ ஒரு மனிதனுக இருப்பாய்!

அனுப்பியவர்: அரக்கோணம் சங்கரபாண்டியன்

டிருக்கிறார்கள் என்பது நிதர்சனமாகத் தெரிந்தது.

பிரதமரும் தமது அன்பை அவர்களிடம் சொரிந்தார். அவர்களின் தனிப்பண்பாட்டை, நடை உடை பாவனைகளை எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பதைப் பிரத்தியட்சமாகத் தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டார். ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு பகுதி பெண் மக்களின் வண்ண உடைகளில் தோன்றி அவர்களைக் கௌரவித்தார். பிரதமரைப் போன்ற அந்தஸ்தில் உள்ளவர்கள் மலை வாழ் மக்களின் உடையில் தோன்றுவது என்பது மிகவும் கஷ்டம். 'இது என்ன பகல் வேஷம் போல், சிறு குழந்தைகளின் ஃபான்ஸி டிரஸ் போட்டி போல் அணிவார்களா? என்று பலர் எண்ணக்கூடும். ஆனல் எல்லைப்புற மலைவாழ் மக்களின் வண்ண உடைகளில் தோன்றியது இந்திரா காந்தியல்ல. அறுபது கோடி பாரத மக்களின் பிரதிநிதி. எல்லைப்புற வாசிகளிடம் பாரதப் பிரஜை ஒவ்வொருவரும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருப்பதை உணர்த்தவே அவ்வுடைகளை அணிந்தார்.

இவ்விஷயமாக பாரதப்பிரதமர் தமது முடிவுரையில் குறிப்பிடுகையில், ''பாரத தேசத்தின் ஒவ்வொரு பகுதி பெண்மக்களின் உடைகளிலும் தனித்தனி அழகும் வண்ணமும் மிளிர்கின்றன. ஆண்மக்கள் தத்தம் பிரதேச தனி உடை வகைகளை உதறிவிட்டு எல்லாருமே பாண்ட் ஷர்ட்டு என்று அணிய ஆரம்பித்துவிட்டார்கள். நல்ல வேளையாகப் பெண்கள் உடை விஷயத்தில் தங்கள் தனித்தன்மைகளை இழக்கவில்லை. பாரதத்தின் பாரம்பரியப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கப் போகிறவர்கள் பெண்கள்தாம் என்பதை இது உணர்த்துகிறது!'' என்றார்.

எட்டுப் பிரதேச மக்களுக்கும் மகாநாட்டுப் பந்தலில் எட்டு நுழைவாயில்கள் இருந்தன. அவர்கள் தங்கள் பிரதேச உடையில், பிரதேச நுழைவாயில் வழியாகத் தங்கள் பிரதேச கீதங்களைப் பாடிக் கொண்டு வந்து மேடையிலிருந்த தலைவர்களுக்கும், கீழேயிருந்த அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்களுக்கும் வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றனர். பிறகு மகாநாடு வந்தேமாதரம் கீதத்துடன் தொடங்கியது.

நாகாலாந்து காங்கிரஸ் தலைவர் ஹோகிஸி ஸீமா (*Hokisi Seema*) தமது வரவேற்புரையில், பிரிட்டிஷார் எங்களைப் பாரத நாட்டு மக்களிடமிருந்து பிரித்து வைத்ததுமல்லாமல், எங்களுக்குள்ளேயே ஓர் இனத்தாரிடமிருந்து இன்னேர் இனத்தாரைப் பிரித்து வைத்து ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இப்பொழுது பாரதநாட்டுப் பிரதான பிரவாகத்தில் நாங்களும் இணைந்துவிட்டதில் மகிழ்ச்சி அடைகிறேம் என்று குறிப்பிட்டார்.

தலைமை உரை நிகழ்த்திய திரு தேவ்காந்த் பருவா ஒரு விஷயத்தை மிகுந்த பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

''இந்த வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் நான்கு பிரதேசங்கள் ஆங்கிலத்தைத் தங்கள் ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கின்றன. அவர்கள் நம்மை விருந்தோம்புகின்றனர். அவர்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்'' என்றார். பெருவாரியான ஹிந்தி பேசும் அங்கத்தினர்கள் உட்கார்ந்திருக்கும் காங்கிரஸ் சபையில் இம்மாதிரி பேசுவது சிரமம்தான்.

அரசியல் தீர்மானத்தின் பேரில் நடந்த சர்ச்சைக்கு முடிவுரை கூறிப் பேசிய வங்க முதல் மந்திரி திரு ஸித்தார்த்த சங்கர் ராய் இதையே குறிப்பிட்டு, ஆங்கிலத்தில் பேசினர். இவையெல்லாம் ராஜாஜி, ''ஆங்கிலம் பாரத நாட்டு மக்களுக்குக் கலைமகள் வழங்கிய பிரசாதம், அதைத் தூர எறிந்துவிடக் கூடாது'' என்று கூறிய வார்த்தைகளை நினைவூட்டின.

இந்திரா காந்தி மகாநாட்டுத் தொடக்கவுரையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறிய கருத்தொன்றை நினைவுகூர்ந்து சொன்னர். ''ஒருவன் இந்தியனுக இருப்பதற்கு இந்தியாவில் பிறக்க வேண்டும் என்பதில்லை. இந்தியா ஒரு சில கருத்துக்களையும் லட்சியங்களையும்

புதிய அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜிம்மி கார்ட்டரின் சாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டு:



இவர் 'ஜார்ஜியா' மாநிலத்தின் கவர்னராகப் பதவி ஏற்றபோது சுமார் 300 கமிட்டிகள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவைக்கு வேலையே கிடையாது. இவற்றில் 22 கமிட்டிகள் தவிர, மற்ற 278 கமிட்டிகளை ஒழித்தார். இவர் பதவிக் காலம் முடியும்போது 'ஜார்ஜியா' மாநில கஜானுவுக்கு சுமார் 20 கோடி டாலர்கள் உபரியாக வைத்து விட்டுச் சென்றார்.

சம்பத் குமாரி - ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா

நினைவுபடுத்துவதாகும். அக்கருத்துக்களையும் லட்சியங்களையும் கடைப் பிடிப்பவன் இந்தியன். அந்த லட்சிய இந்தியனை உருவாக்குவதே நமது நோக்கம்.''

மகாநாட்டில் உள்நாட்டு அரசியல்—வெளிநாட்டு விவகாரம் — பொருளாதாரம் ஆகியவற்றின் மீது விரிவான தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றின் மீது விவாதங்கள் நிகழ்ந்தன. விவாதம் என்று சொல்வது கூடத் தவறு. எல்லாரும் ஆதரித்துப் பேசி, இருபது அம்சத் திட்டம், ஐந்து அம்சத் திட்டம் இவற்றைக் குறிப்பிட்டு, இந்திரா காந்தியின் தலைமையைப் பாராட்டிப் பேசிவிட்டு அமர்ந்தனர். எல்லாரும் இதே தொனியில் பேசியதால், மகாநாட்டில் யாரும் யாருடைய பேச்சையும் கவனித்ததாகத் தெரியவில்லை.


அங்கத்தினர்கள் ஒருவருடன் ஒருவர் சல்லாபம் புரிந்து கொண்டிருந்தனர். பிரதமர் தவிர, வங்க முதல்வர் ஸித்தார்த்த சங்கர் ராய், ஸ்ரீ ஸ்வரண்சிங், வெளிவிவகார மந்திரி திரு சர்வன், மந்திரி ஜகஜ்ஜீவன்ராம் ஆகியோர் பேசியபோதுதான் சற்று அமைதி நிலவி அங்கத்தினர்கள் அவர்கள் உரைகளை ஆர்வத்தோடு கவனித்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து திரு கருப்பையா மூப்பனார், திரு டி. செங்கல்வராயன், திண்டிவனம் ராமமூர்த்தி, ஸ்ரீமதி அனந்தநாயகி முதலிய பதினைந்து, இருபது அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். திரு செங்கல்வராயனும், திண்டிவனம் ராமமூர்த்தியும் அந்தக் கொத்தவால் சாவடி இரைச்சலில் தமிழ் நாட்டிலிருந்து நாங்களும் வந்திருக்கிறோம் என்று பெயர் பண்ணி விட்டு வந்து விட்டார்கள். இன்றையச் சூழ்நிலையில் காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களில் இதற்கு மேல் ஒன்றும் எதிர் பார்க்க முடியாதுதான்.

சமீப காலத்தில் வலது கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கிரசுக்குள் பிளவு படுத்த முயன்று வருகின்றனர். இதை மனத்தில் கொண்டு பிரதமர் தமது முடிவுரையில் '''இந்திரா நல்லவர், இந்த முதல் மந்திரி சரியில்லை; அந்த ராஜ்ய முதல்வர் சரியில்லை' என்றெல்லாம் உபதேசித்து வருகிறார்கள். இப்பணியை அவர்கள் செய்ய வேண்டியதில்லை. உதவ முடிந்தால் உதவுங்கள். இல்லையேல் சும்மா இருங்கள்'' என்று வன்மையாக எச்சரித்தார்.



ஒருவேளை ஏதாவது அச்சு யந்திரத்தைப் பழுது பார்க்கிறார்களா?
38ம் பக்கம் பார்க்கவும்.



ஏழைமை என்பது என்ன என்பதையும் தமது உரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார், பிரதமர். வீடில்லாத மக்கள் வீடுகள் பெற வேண்டும். உணவில்லாத மக்கள் உணவு பெறவேண்டும். உடையில்லாத மக்கள் உடை பெறவேண்டும். இதற்குப் பணி புரிவதே ஏழைமையை அகற்றுவதாகும்.

இந்தக் காங்கிரஸ் கூட்டத்தையொட்டி ஓர் அழகிய கண்காட்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு மாநிலமும் தத்தம் மாநிலத்தைப் பிரதிபலிக்கும் வகையில் காட்சி அமைத்திருக்கிறது.


தமிழ் நாட்டுக் கோபுரம் வெகு தூரத்திலிருந்தே நம்மை வரவேற்கிறது.

ஸிக்கிம், நாகாலாந்து, முதலிய பெவிலியன்களுக்குள் நுழைந்தால் சிக்கிமுக்குள்ளும், நாகாலாந்துக்குள்ளுமே சென்றுவிட்ட பிரமை உண்டாகிறது.

காங்கிரஸ் சரித்திரத்தைக் காட்டும் கண்காட்சி மற்றொரு முக்கியமான அம்சம். இக்கண்காட்சியில் ராஜாஜி வேதாரண்ய சத்யாக்கிரகத்தை நடத்தியபோது எடுத்த படத்தையும் இன்னும் சில ராஜாஜி தொடர்பு கொண்ட புகைப்படங்களையும் பார்த்து மெய் சிலிர்த்தேன்.

இன்னொரு முக்கியமான *புகைப்படம் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரின் படம்.

1926ல் இதே கோஹாட்டியில் மாபெரும் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அதற்குத் தலைமை வகித்தவர் நமது எஸ். சீனிவாசய்யங்கார். ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு இதே கோஹாட்டியில் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றிருக்கிறது. அப்போது நடைபெற்ற மகாநாடும் மிக முக்கியமான கால கட்டத்தில் நடைபெற்றது. இப்போதும் மிக முக்கியமான கால கட்டத்தில் காங்கிரஸ் கூடியது.



ஒரு பஞ்சப் பிரதேசத்தை நோக்கிச் செல்லும் ஒரு பாசஞ்சர் ரயில் வண்டி!

வளமான பிரதேசத்திலிருந்து பிரகடனப் படுத்தப்பட்ட பஞ்சப் பிரதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது அந்தப் பாசஞ்சர் வண்டி.

நிலக்கரித் தட்டுப்பாட்டால் நின்றிருந்த அந்த வண்டி நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் தன் நெடுவழிப் பயணத்தை நீடித்திருக்கிறது.

இப்பொழுதெல்லாம் அந்த வண்டியில் கூட்டம் நிரம்பி வழிகிறது. உட்கார இடமே இல்லை. நாலு பேர் உட்கார வேண்டிய இடத்தில் ஏழுபேர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஏராளமான மூட்டை முடிச்சுக்கள் அநாமதேயமாகக் கிடக்கின்றன. பாத்தியம் கொண்டாட வேண்டியவர்கள் சாளரத்தின் அருகே சாய்ந்தபடி நிற்கிறார்கள். அந்த மூட்டை முடிச்சுக்களுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று பிறர் நினைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் காட்டும் போலிப் பாவனையே அவர்களைக் காட்டிக்கொடுக்கிறது. பெரும்பான்மையினர் பெண்கள். இடையிடையே ஆண்கள்.

சின்ன ஸ்டேஷன். தகரக் கூரை வராந்தா. லக்கேஜ் மூட்டை மீது விலாசம் எழுதி வைத்திருந்த மையினால் வரையப்பட்ட ஆடு புலி கட்டம். விளையாட்டுக் காயின்ஸ்மேன்: இரண்டு பாயின்ட்ஸ்மேன். ரசிகர்கள்: ஒரு காங்கிமேன், இரண்டு போர்ட்டர்கள். ஒரு புலியைச் சில ஆடுகள் அடைத்து விட்டன. புலிக்காரர் சிந்திக்கிறார்.

கை இறக்கவில்லை. டிரைவருக்குக் கோபம் வருகிறது. நீராவியைத் திறந்து விடுகிறார். விசிலுக்குள் புகுந்த நீராவி கோபத்துக்கு உருவம் கொடுக்கிறது. நிலக்கரிப் பஞ்சம்; நீராவி விரயம். விர





யத்தை யார் கணக்கில் எழுதுவது? ஆடுபுலிக் கணக்கிலா?

கை இறங்குகிறது; டிரைவர் கை இயங்குகிறது.

புகை வண்டி போய்க் கொண்டிருக்கிறது. அது நின்ற இடத்தில் பல மூட்டைகள்; கூடைகள்; பாலிகள். அருகருகே உரிமையாளர்கள் அவசரம் அவசரமாக மூட்டை முடிச்சுக்களைத் தூக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இது இவர்களுக்குப் பரம்பரைத் தொழில் இல்லை. பஞ்ச நாளில் நல்ல மிச்சம் கிடைக்கும்போலிருக்கவே தொடங்கியது. நல்ல லாபம் கிடைக்கிறது. இந்த ஊர் வளமான பிரதேசத்தின் கடைசி நகரம். வடக்கே இருபத்தைந்து மைல் சென்றால் வளமான பகுதியில் கண்ட்ரோல் ரேட்டிலேயே அரிசி கிடைக்கிறது. சென்று வாங்குகிறார்கள். இந்த ஊருக்குத் தெற்கே இருக்கும் பஞ்சப் பிரதேசத்தை நோக்கிச் செல்கிறார்கள். உள்ளே நுழைந்து விட்டால் வாங்கிய விலையை விட விற்கும் விலை இரண்டு மடங்காக அதிகரித்து விடுகிறது. பணத்தைப் பிடித்துக் கொண்டு கிளம்பிய இடத்துக்கு மறு ரயிலில் வருகிறார்கள். அவர்கள் தொழில் தொடர்ந்து நடக்கிறது.

ஒரு பாயிண்ட்ஸ்மேன் சாவி கொடுக்கிறார். சாவியை வாங்கியதும் எஞ்சின் செயலிழந்து தண்ணீர் பைப்புக்குக் கீழே வாயைத் திறந்து கொண்டு நிற்கிறது.

கடைசிப் பெட்டியிலிருந்து சிக்னல் லைட்டுடன் கார்டு வருகிறார். ஸ்டேஷன் மாஸ்டர் சிரித்து வரவேற்கிறார்.

தூரத்து ஒலி ஒன்றைக் கார்டு கவனிக்கிறார்.

''ஜீப் சத்தந்தான் கேட்குது. இன்னிக்கும் 'ரெய்ட்' போலிருக்கு!'' ஸ்டேஷன் மாஸ்டர் எதையோ பறி கொடுத்தவர் போல் பேசுகிறார்.

கார்டு கடிந்து கொள்கிறார்: ''ஒரு மாதமாக ரெய்ட் நடத்துறாங்க. இன்னும் ஒஞ்ச பாடில்லேயே.''

கையில் பிரம்பு வைத்திருக்கும்; கசங்கிய பாண்ட், சட்டை அணிந்திருக்கும் அதிகாரியைப் பின்னே விட்டு விட்டு நான்கு பேர் ஓடி வருகிறார்கள். கார்டை முறைத்துப் பார்த்துவிட்டு ஓடுகிறார்கள். வண்டியின் இருபுறங்களிலும் இரண்டிரண்டு பேராகப் பிரிந்து ஓடுகிறார்கள். ஓடுபவர்களில் இருவர் தான் அரசாங்க உத்தியோகஸ்தர்கள். அவர்களில் ஒருவர் ஜீப் டிரைவர். மற்றவர் அந்த அதிகாரியின் பியூன். மற்ற இருவர் கடத்தல் பெருகி விட்டதால் 'ரெய்ட்'டைத் துரிதப்படுத்த அதிகாரியால் நியமித்துக் கொ..ப்பட்ட அன்றாடக் கூலி ஆட்கள்.

அந்தக் கூலி ஆட்கள் வண்டியின் சக்கரங்களுக்கு இடையில் டார்ச் அடிக்கிறார்கள். இருவரும் 'அந்தாருக்கு', 'இந்தாருக்கு' என்ற வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். காரேஜின் அடிப் பரப்புக்கும், சக்கரங்களை இணைக்கும் இரும்பு வில்லுக்கும் இடையில் ஸ்டீல் பிளேட்டால் செய்யப்பட்ட பெட்டிகள் தெரிகின்றன. அவற்றில் புகை வண்டிக்குத் தேவையான மின் சக்தியைப் பெறப் பாட்டரிகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கன செவ்வக ஸ்டீல் பெட்டியின் இரண்டு நீளப் பக்கங்களிலும் முறையாக ஆறு ஆறு பாட்டரிகள் வரிசைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அந்த இரண்டு வரிசைக்கும் இடையில் நல்ல இடம் இருக்கிறது. அந்த இடத்தில் அரிசிப் பைகள் அழகாகக் கட்டப்பட்டு, வரிசையாக வீற்றிருக்கின்றன.

இருவரும் விரைவாகச் சரக்கை வெளியே எடுத்துப் போடுகிறார்கள். ஐந்தாறு முடிச்சுகள் சேர்ந்து விடுகின்றன. தூரத்தில் சிலர் இதை வேடிக்கை பார்க்கின்றனர். எடுத்துப் போட்ட முடிச்சுக்களை ஒருவன்



கண்காணிக்கிறான். தூரத்தில் நிற்கும் பிரஜை மேல் அவ்வளவு நம்பிக்கை. மற்றவன் பாட்டரிப் பெட்டிக்கு அருகிலிருக்கும் இரும்பு வில்லைப் பார்வை யிடுகிறான். பழந் துணி அரிசி மூட்டைகள் தூக்கில் தொங்குகின்றன. எடுத்துப் போடுகிறான். கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து மூட்டைகள். ஒரு குவியல். ஒருவன் காவல்; மற்றவன் அடுத்த காரேஜை அடைகிறான். அரிசி மூட்டைகள். குவியல் பெரிதாகிறது.......

குவியலைப் பாதுகாப்பவன் கவனமாக இருக்கிறான். குவியலைச் சுற்றி வருகிறான். நிலவொளி நிலவுகிறது. டார்ச்சையும் அணைக்கவில்லை. சிலர் குவியலை நெருங்குகிறார்கள். கம்பை ஓங்கித் துரத்துகிறான். சிலர் பின் வாங்குகிறார்கள்.

அவர்களில் இருவர் முகத்தில் மானிட உணர்ச்சி மறைந்து விட்டது. ஒருவன் மெதுவாக வினவுகிறான்: ''பாட்டரி பாக்ஸிலே அரிசி வைக்கிறோம்கிறதை இவன்களுக்கு எவண்டா சொன்னது?''

இன்னொருவன், ''நம்மகிட்டே காசு வாங்கிக்கிட்டு இங்கே வைக்கச் சொன்ன கார்டா இருக்கும்டா.''

''சேச்சே. அவரு நல்லவருடா. துரோகம் பண்ண மாட்டாரு.''

இவர்களை நோக்கி ஒருவன் ஓடி வருகிறான். அவனுக்கு மூச்சு வாங்குகிறது... ''மோசம் போச்சுடா! நம்ம அரிசியையெல்லாம் எடுத்துக் குவிக்கிறான்களே, இந்த மொள்ளமாறிப் பயலுக என்னை ஏமாத்திட்டாங்கடா'' என்கிறான்.

''எப்பிடிடா ஏமாத்தினாங்க?''

''ரெண்டு நாளைக்கு முந்தி நான் இந்த ஊர்லே அரிசி வாங்கிக்கிட்டு நின்னேன். அப்போ அந்தோ வர்ரானே, மூட்டையைத் தூக்கிக்கிட்டு, கருத்தப் பய அவங் கையிலே ஒரு அஞ்சு ரூபாயை அமுக்கிப் பேச்சுக் கொடுத்தேன். 'எப்பங்க ரெய்ட் முடியு'மின்னேன். அதுக்கு அவன், 'எங்க ஆபீசர் மொத்தமா ஒரு பத்து மூட்டை அரிசியாவது பிடித்து மேலதிகாரிக்குக் காட்டினால்தான் 'ரெய்'டை முடிக்கலாமின்னு சொல்லிட்டாரு'ன்னான். அதை நம்பி 'நாளன்னிக்குக் கடைசிப் பெட்டியிலேயும், கீழே பாட்டரி பாக்ஸிலேயும் இருக்கும் அரிசியை எடுத்துக்குங்க. அது பத்து மூட்டை இருக்கும். அத்தோட ரெய்டை முடிச்சிடுங்க. எங்க ஆளுக கிட்டே இருந்து நூறு ரூபா வாங்கித் தாரேன்'னேன். இவன்களை அனுப்பிட்டா நாம நல்லாத் தொழில் செய்யலாமின்னு நெனைச்சுச் சொன்னேன். இப்ப கதை வேறே மாதிரிப் போவுது.''

''காரியத்தையே கெடுத்திட்டியேடா முட்டாப் பயலே. ரகசிய எடத்தைச் சொல்லிப்பிட்டியே.''

டிரைவரும், பியூனும் பிடித்துப் போட்ட குவியல் பிளாட்பாரத்தில் கிடக்கிறது. அதிகாரி காவல் காக்கிறார். அதிகாரியின் அருகில் ஒரே கூட்டம். அரிசி பறி கொடுத்த பலரும் புலம்புகிறார்கள். ''இரண்டு படி தானும்'', ''சாப்பிடக் கொண்டு போகிறார்களாம்'', ''விற்பதற்கில்லையாம்'', ஒரு கிழவி, 'மகள் வீட்டுக்குப் போகிறாளாம்,' ''பறிகொடுத்து விட்டாளாம்'' இப்படிப் பல புலம்பல்கள். அதிகாரி எதையும் சட்டை செய்யவில்லை. பழகிப் போய்விட்டது.

ஜீப் டிரைவர் ஒரு காரேஜுக்குள் நுழைகிறார். பலரிடம் பல முடிச்சுக்களைப் பிடுங்குகிறார். வெளியே நிற்கும் பியூனிடம் கொடுக்கிறார்.

ஜீப் டிரைவரின் குரல் கேட்கிறது. பியூன் ஜன்னலுக்குள் தலை நீட்டுகிறார்.

ஜீப் டிரைவர் கண்டிப்பான குரலில் கத்துகிறார்: ''இப்ப நீ எழுந்திருக்கிறியா இல்லையாம்மா?''

''சும்மா தாய்யா உட்கார்ந்திருக்கிறேன்!'' அவள் பரிதாபமாகக் கூறுகிறாள்.

''அதை நான் சொல்லணும். சரி, எழுந்திரி. இல்ல, கையைப் புடிச்சு எழுப்பவா?'' டிரைவர் மிகவும் கோபிக்கிறார்.

அதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்லவில்லை. எழுகிறாள். அவள் கால்களுக்கிடையில் சேலையின் சுற்றளவுக்குள் ஒளித்திருந்த ஓர் ஓலைப் பெட்டியின் அடிப் பகுதி தெரிகிறது.

''இப்ப சொல்லும்மா. சும்மாவா இருந்தே?'' டிரைவர் பதமாகக் கேட்டுக்கொண்டே பெட்டியைத் தூக்கிப் பியூனிடம் கொடுக்கிறார்.

சுற்றி இருந்தவர்கள் திகைக்கிறார்கள்.

''எங்களுக்குத் தெரியும் சார், இந்த வண்டியிலே எங்கெங்கே அரிசியும் நெல்லும் ஒளிச்சு வைச்சிருக்கிறாங்கன்னு!'' டிரைவர் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கிறார். சீட்டுக்குக் கீழே குனிகிறார். சட்டங்களால் உருவாக்கப்பட்டுச் சீட்டுடன் இணைக்கப்பட்ட தடுப்பிலிருந்து சணலால் பிணைக்கப்பட்ட அரிசி முடிச்சுக்களை அறுத்தெடுக்கிறார்.

மேலே பார்க்கிறார். ஒருவன் படுத்திருக்கிறான். கைலி கட்டியிருக்கும் அவன் கல்லூரி மாணவன் போல் காட்சி தருகிறான்.

''சார்! உங்க சூட்கேஸைத் திறந்து பார்க்கணுமே?'' என்கிறார் டிரைவர் அவனைப் பார்த்து.

அவன் ஒன்றும் புரியாதவன் போல், ''எதற்கு?'' என்கிறான்.

டிரைவருக்குக் கோபம் வருகிறது. அடக்கிக்கொண்டு, ''ம்ம்... அரிசி இருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான்'' என்கிறார்.

''சூட்கேஸிலே அரிசி இருக்குமா?'' அவன் ஏளனமாகக் கேட்கிறான்.

''இல்லேங்கறதைத் திறந்து காட்டி நிரூபியுங்க.''

''நீங்க யாருய்யா அதைக் கேட்கறதுக்கு. திறக்க முடியாது. என்ன பண்ணுவீங்க?'' டிரைவருக்கு அவனிடம் வம்பிழுக்க முடியும். விரும்பவில்லை. ஜன்னலுக்குள் தலை நீட்டிக்

1-111-11-1

கான்பூர் கிரீன் பார்க்கில் இரண்டாவது டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து ஒரு விக்கெட் இழப்பிற்கு நூற்று பதினொரு ரன்கள் எடுத்திருந்த பொழுது *B.S.* பேடி ஒரு மெய்டன் ஓவருடன் பதினொரு ஓவர்கள் முடிந்திருந்தது குறிப்பிடத் தக்க ஒன்று.

—குமார்

1. ஸ்ரீருத்ரம் – சமகம்

மூன்று பாஷ்யங்களைத் தழுவி தமிழில் பதவுரை, விளக்கம், தியானம், பிரயோகம், பயன் முதலிய அம்சங்களுடன், இந்த 3ம் பதிப்பில் இதுவரை வெளிவராத ''ருத்ரைகாதசினி பிரயோகமும்'' சேர்க்கப்பட்டிருக்கிறது. ரூ. 2.50

2. விதுரநீதி – யக்ஷப்பிரச்னம்

உலகிலேயே தலைசிறந்த நீதி நூல். தமிழில் 4-ம் பதிப்பு ரூ. 1.50. ஆங்கிலத்தில் ரூ. 1.50. ஸம்ஸ்கிருத மூலம் 0.70.

ரூ. 100/-க்குக் குறையாத ஆர்டர்களுக்கு கமிஷன் 25%.

கிடைக்குமிடம் :

R. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்
அத்யக்ஷர், ஜகத்குரு வித்யாஸ்தானம்
வடக்குத் தெரு, திருவானைக்காவல்
திருச்சி - 620 005

மணிவிழாக்காணும் தம்பதிகள்



ஸ்ரீமதி ஜானகி ராமமூர்த்தி — ஸ்ரீ ஜி.எஸ். ராமமூர்த்தி

கோவை மாவட்டம் சூலூரில் 15-10-76ல் விமரிசையாக நடைபெற்ற எங்கள் தமையனார் **திரு ஜி. எஸ். ராமமூர்த்தி அய்யர் ஷஷ்டி அப்த பூர்த்தி** விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு & திருமதி வெங்கட்ராமன்
திரு & திருமதி கிஷ்ணமூர்த்தி
திரு ஜி. எஸ். ராஜரத்னம்
(ராஜ ஷ்யாமளா)
திருமதி லட்சுமி ராஜரத்னம் (எழுத்தாளர்)



திரு ஜி.ஆர். மூர்த்தி (*Glaxo, Bombay*) அவர்களின் மூத்த குமாரத்தி செள. **நிர்மலாவுக்கும்**, கல்லிடைக்குறிச்சி திரு லக்ஷ்மி நாராயண ஐயர் அவர்களின் குமாரன் **திரு சேகர்** *B. Com; A. C. A. (Love Lock & Lewis, Bombay)*க்கும் 3-11-76 அன்று நாராயணி அம்மாள் கல்யாண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®

ஸ்விட்சர்லாந்தில் ஸாண்டோஸ் உருவாக்கியுள்ள, உலகிலேயே தலைசிறந்த கால்ஷியம்




கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும் வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ் வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

CA/CS/15 I TAM

கொண்டிருந்த பியூனிடம், "ஐயாவைக் கூப்பிடுய்யா" என்று கத்துகிறார்.

அரிசிக் குப்பலில் பியூனை நிறுத்திவிட்டு, "யார்ராது?" என்று கேட்டுக் கொண்டே அதிகாரி வருகிறார்.

மேலே இருந்தவன் இறங்குகிறான். குட் ஷேனைத் திறக்கிறான். "ரெண்டு லிட்டர் தான் சார்" என்கிறான்.

"அதை அப்பவே சொன்னா என்னய்யா? படிச்சவங்களே இப்படிச் சொன்னா கடத்தல் ஏனய்யா பெருகாது? சரி, விட்டுட்டு வாப்பா" என்று சொல்லிக் கொண்டே அதிகாரி வெளியேறுகிறார்.

பொந்து விழுந்த ஆலமரத்துக்கு அருகில் இருக்கும் சிமெண்ட் பெஞ்ச் இன்றும் கதை கட்டிக் கொண்டிருக்கிறது. மருத்துவ மாணவர், தொடக்கப் பள்ளி ஆசிரியர், கலைக் கல்லூரி மாணவர், சட்டக் கல்லூரி மாணவர் ஆகியோர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

"என்ன இது...காலிலே மூட்டை முடிச் செல்லாம் தட்டுப்படுது... அரிசியா? யாரு கடத்தறது?" சிமெண்டுப் பெஞ்சுக்கடியில் காலைத் துழாவிய சட்ட மாணவர் கேட்கிறார்.

"உஸ்ஸ். சத்தம் போடாதீங்க. அந்தா நிக்கிறானே ஒரு பையன் அவனது. பாவம். அவங்க ஊரிலே அரிசி வாங்க முடியலையாம். அப்பா, அம்மா வயசானவங்களாம். வேலை செய்ய முடியாதாம். கூடப் பொறந்தவங்க வேறே ஆறு பேராம். இந்தத் தொழில்லே புகுந்தப்புறம் நிம்மதியா இருக்காம்" என்கிறார் கலைக் கல்லூரி மாணவர்.

"ஆறு புள்ளைங்க பெத்துக்கிட்டதே பெரிய துரோகம். அவங்க பொழைக்க அரிசிக் கடத்தல் செய்யறது ராஜத் துரோகம்" என்று சற்றுக் கடுமையாகவே கூறுகிறார் மருத்துவ மாணவர்.

"அரிசி கடத்தல்ங்கற வார்த்தையை ஏன் போடுறீங்க? பிழைப்புக்கு வழின்னு சொல்லுங்களேன்" என்கிறார் ஆசிரியர்.

சட்ட மாணவர் குறுக்கிடுகிறார்: "எதுங்க பிழைப்புக்கு வழி? டிக்கெட் எடுக்காமெ ரயில்வேயை ஏமாத்திக்கிட்டு, சட்ட விரோதமா அரிசி கடத்தறதா?"

"ரயில்வேயை ஏமாத்தறாங்கன்னு மட்டும் சொல்லாதீங்க. இவங்க அத்தனை பேரும் சீசன் டிக்கெட் எடுத்திருக்காங்க" என்று வக்காலத்து வாங்குகிறார் கலைக் கல்லூரி மாணவர்.

"அரிசிக் கடத்தலுக்கும் அதுக்கு உடந்தையாயிருக்கிறதுக்கும் எவ்வளவு தண்டனை தெரியுமா? 'தமிழ் நாடு பேடி அண்ட் ரைஸ் கண்ட்ரோல் ஆக்ட்'டுன்னு தனியா எழுதி வைச்சிருக்காங்க. ஜாக்கிரதை. அது சரி... இவங்களுக்கு ஏன் நீங்க இவ்வளவு வக்காலத்து வாங்குறீங்க? ஏதும் சொந்தமா?" வினயமாகக் கேட்கிறார் சட்ட மாணவர்.

"நாங்களாம் மனிதர்கள்" என்கிறார் ஆசிரியர்.

"நீங்கள் மனிதர்களா? மனிதர்களின் நலத்துக்காக அரசாங்கம் இயற்றும் சட்டதிட்டங்களை மீறும் நீங்கள் மனிதர்களா?" மருத்துவ மாணவர் தொடர்ந்து ஏதோ கூற வாயெடுக்கிறார்.

தோல்வியிலும் வெற்றி!

ஒரு பள்ளிக்கூடத்தில் தேர்தல் சாவடியில் ஃபோர்டும் அவர் மனைவி பெட்டி ஃபோர்டும் ஓட்டுப் போட்டு விட்டுத் திரும்பும் போது "உங்கள் கணவர் தோற்று விட்டால் என்ன ஆகும்?" என்று பெட்டியை ஒருவர் கேட்டார். உடனே பெட்டி ஃபோர்ட், "அப்போது நான் ஜெயித்து விடுவேன். தேசப் பணியிலேயே ஈடுபட்டிருந்த என் கணவர் எனக்குத் திரும்பக் கிடைத்து விடுவார். எப்படி இருந்தாலும் எனக்கு வெற்றிதான்" என்றார்.



பாபு - நியூஸ்வீக்

"நம்ம ரயில்வே ஸ்டேஷன் என்ட்ரன்ஸ் பக்கிட்டே ஒரு டீக்கடை இருக்கில்லே. அந்தக் கடையிலே டீக்ளாஸ் கழுவிக் கொடுத்திட்டு ஒரு டீ வாங்கிக் குடிச்சிட்டுப் போவாரே ஒரு சாமியாரு. அவரு தலைமையிலே பத்துப் பிச்சைக்காரங்க இருக்காங்க. அவுங்க தோளிலே தொங்குற பையிலேயே அரிசி கடத்துறாங்க. வண்டியிலே டிக்கெட் எடுக்கிறதில்லே. சாமியாரு பணம் கொடுப்பாரு. அரிசி வாங்குவாங்க. வண்டியிலேயே போய் இரட்டிப்பு விலைக்கு வித்திட்டு, முதலையும், லாபத்திலே பாதியையும் சாமியார் கிட்டே கொடுத்திடுவாங்க. மறுபடியும் முதல் கிடைக்கும். தொழில் நடக்குது. எப்படி?"

"என்னைக் குழப்பாமே எங்கிட்ட இருக்கிற கதையைக் கேட்டுக்கிட்டு ஆளை விடுங்க" என்கிறார் அப்பொழுது அங்கே வந்த ஒண்ணாங் கிளாஸ் வாத்தியார்.

அவரிடம் கதை கேட்பது என்றாலே எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். காதல் விவகாரங்களைச் 'சமுதாயக் கோணல்கள்' என்ற தலைப்பில் சொல்பவர்.

ஒண்ணாங் கிளாஸ் வாத்தியார் ஆரம்பத்திலேயே கிளைமாக்ஸ் வைத்து ஆரம்பிக்கிறார்: "இன்னிக்கு நடந்தது. கொஞ்ச நேரத்துக்கு முந்தி. முதல் கம்பார்ட்மெண்டிலே. ஒரு கர்ப்ப ஸ்திரீ உட்காந்திருக்கிறா. அரிசி பிடிக்கிறவன் கருப்பா இருக்கானே அவந்தான்; அவ பக்கத்திலே போயிறான்; 'எந்திரிம்மா'ங்கிறான்.

'ஏன் சார்'னு கேட்கிறா.

'எழுந்திரி ஏன்னு தெரியும்'னு சொல்றான். அவ எழுந்திரிக்கவே இல்லே.

'இந்தாம்மா நீ எழுந்திருக்கிறியா நான் கையைப் பிடிச்சு எழுப்பணுமா?'ன்னு கேட்கிறான்.

பக்கத்திலே இருந்த பெரியவர் ஒருத்தர் ஏம்பா கர்ப்ப ஸ்திரீயைத் தொந்தரவு பண்றேன்னு கூடக் கேட்டாராம்.

அவன் ஒரேயடியா வெரட்டிட்டான், அவளும் வெட்கப்பட்டு டபார்ன்னு எந்திருச்சு வயித்திலே கட்டியிருந்த அரிசிப் பையை அவுத்துக் கொடுத்திட்டா.

அவன் அரிசிப் பையை வாங்கிக்கிட்டு வர்றான். அவ விடலே. புள்ளைங்களெல்லாம் பட்டினியாக் கெடக்குதய்யான்னு அழுதபடியே அவன் பின்னாடியே வந்திருக்கா. ரெண்டு பேரும் அந்தப் பக்கம் இருக்கிற



லண்டனில் உலகப் பிரசித்தி பெற்ற கடிகாரம் ''பிக் பென்''னின் உட்புற இயந்திரத்தைத்தான் 34ம் பக்கத்தில் பார்த்தீர்கள். மணி அடிக்கும் பகுதியில் இரு முக்கியமான 'கியர்' சக்கரங்களில் மயிரிழை வெடிப்புக்கள் உள்ளனவாம். அவற்றைச் சீராக்க முயற்சி நடக்கிறது. 1858ல் தயாரானகடிகாரம் இன்றளவும் பிழையின்றி மணி காட்டுகிறது. வருடத்தில் அரை செகண்டு தவறு நடந்தால் அதிகம்!

×

கேட்டுக்கிட்டே வந்திட்டாங்க. அங்கே கொஞ்ச நேரம் இழுபறி. இவங்களே ஒருத்தரும் கவனிக்கல்லே. ரெண்டு பேரும் டாய்லட்டு அறைக்குள்ளே போயிட்டாங்க. அவன் கொண்டு போனானு அவ கொண்டு போனாளான்னு தெரியல்லே. அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு மாப்பிள்ளே வெறுங் கையை வீசிக்கிட்டு வெளியே போயிட்டாரு. கதை முடிஞ்சிருச்சு.''

கந்தசாமியின் ஒற்றைக் குடிசையில் புகை வண்டியின் கிளீனர் வேண்டியதைக் குடித்துவிட்டு இரண்டு பாட்டில்களிலும் நிரப்பிக் கொண்டு கணக்குப் பார்த்துக் காசு கொடுக்கிறார். கந்தசாமி காசை வாங்க மறுக்கிறான்.

''ஏனப்பா, இன்னிக்கு மட்டும் காசு வாணுங்குறே?'' கனிவாகக்கேட்கிறார்கிளீனர்.

கந்தசாமி தலையைச் சொறிகிறான். தயங்கித் தயங்கிப் பேசுகிறான்.

''சார், நீங்க மட்டும் எனக்கு ஒரு உதவி ஏற்பாடு செய்தா, ரெண்டு பாட்டில் என்ன சார், தினம் நானே உங்க வண்டியிலே ஒரு நெறஞ்ச பானே கொண்டாந்து வைச்சுடுவேன் சார்!''

கிளீனர், ''என்ன உதவி? சும்மா சொல் அப்பா. நீ பானே நெறைய எங்களுக்கு வேண்டியதைக் கொடுத்திட்டா, நாங்க எதுவும் செய்வோம்'' என்று தைரியமூட்டுகிறார்.

''ஒண்ணுமில்லே, அண்ணாச்சி!'' கந்தசாமி புதுச் சொந்தம் ஒன்றை உருவாக்கிப் பேசுகிறான். ''அரிசி பிடிக்கிறது ரொம்பக் கெடுபிடியாப் போச்சல்ல. இப்போ பொழப்பிலே மண்ணு விழுந்திருச்சு. அதனலே தினமும் ரெய்ட் முடிஞ்சப்புறம் வண்டியை எடுக்கிறீங்கல்ல, அப்பத்தான் நீங்க உதவணும். வண்டியை எடுத்துக்கிட்டுப் போய் முதல் கைகாட்டியைத் தாண்டினதும் கொஞ்சத் தூரம் லேசா ஓட்டினீங்கன்னு நானும், எங்க ஆளுங்களும் அரிசி மூட்டையோட ஏறிக்குவோம். சம்மதிச்சீங்கன்னு தலைக்கு அஞ்சு ரூபா வசூலிச்சுத் தர்றேன். பாஆ...னே தனி. அதை நெரப்பித் தவறாமக் கொண்டாந்து வச்சர்றேன்.''

பலவீனத்தைத் தட்டிப் பேசுகிறான் கந்தசாமி. சகாக்களின் சம்மதம் கிடைக்கும் என்ற நம்பிக்கை கிளீனருக்கு உண்டு. தாமதிக்காமல் சம்மதிக்கிறார்.

''என்ன சார், ரெய்ட் முடிஞ்சுதா?'' கேட்டுக் கொண்டே கார்டு அதிகாரியை நெருங்குகிறார்.

''முடிஞ்சிச்சு சார். நீங்க இனி வண்டியை எடுக்கலாம். லக்கேஜ் வானேத்தான் பார்க்கலே. வேண்டியதில்லேயே'' என்கிறார், அதிகாரி.

''வேண்டியதில்லே சார். நான் செக் பண்ணித்தான் எதையும் ஏத்தறது. வேணுமின்னு வாங்க பாப்பபோம்.''

''உங்க மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு சார். வண்டியை எடுங்க'' பெருந்தன்மையாகப் பேசுகிறார், அதிகாரி.

கார்டு விசில் ஊதுகிறார். எஞ்சின் விசில் ஊதுகிறது. புகை வண்டி கிளம்புகிறது. ஆலமரப் பொந்தில், இருளில், கக்கூஸில், ஒளிந்திருந்த சிலர் ஓடிவந்து ஏறுகிறார்கள்.

பின்புறம் நின்று கார்டு கையில் ஆடும் விளக்கு ஒளியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் எதையோ நினைத்துக் கொண்டு வண்டியோடு ஓடி கார்டைப் பார்த்து, ''அவுட் என்ன போடுறீங்க?'' என்கிறார்.

கார்டு, ''ட்டு நாட்'' என்கிறார்.

ஸ்டேஷன் மாஸ்டர் திரும்புகிறார். 'ஏழு இருபதுக்குப் போக வேண்டிய வண்டி எட்டுக்குப் போகிறது' என்று நினைத்துக் கொண்டே செல்கிறார்.

கைகாட்டியைத் தாண்டியதும் வண்டியின் வேகம் குறைகிறது. எஞ்சின் டிரைவரின் கரங்கள் வேடு கட்டிய ஒரு நிறை குடத்தைச் சுவீகரித்துக் கொள்கின்றன. கந்தசாமியும், ஆட்களும் அரிசி மூட்டைகளுடன் ஏறிக் கொள்கின்றனர்.

இப்பொழுது,

வளமான பிரதேசத்திலிருந்து பிரகடனப் படுத்தப்பட்ட பஞ்சப் பிரதேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது அந்தப் பாஸஞ்சர் வண்டி.



வெற்றி நமதே

விண்டுமணி

✖ விசுவநாத் ஆட்டம்

✖ மொஹிந்தர் அமர்நாத் கோன்லியின் பந்தில் பெத்தரிக் காட்ச் பிடிக்க 'அவுட்' ஆனார்.

சிதம்பரம் ஸ்டேடியத்தில் டெமோல்லோ கோப்பையைத் திரு எம். ஏ. சிதம்பரம் வழங்க, கோப்பையுடன் காப்டன் பேதி தம் சகாக்கள் பின்தொடர வெற்றி ஊர்வலம் வந்தார்!

''கங்கிராஜுலேஷன்ஸ்!'' என்று கை குலுக்கியபோது, ''இந்த வெற்றியில் என் சகாக்கள் அனைவருக்குமே பங்கு உண்டு!'' என்றார் காப்டன் பேடி பெருந்தன்மையோடு.

''முதல் நாள் ஈர மைதானத்தில் நீங்கள் முதலில் பாட் பண்ண முன் வந்ததற்கு ஏதாவது காரணம் உண்டா?''

''ஓ! முதல் இன்னிங் 'பாட்டிங்' செய்து விட்டால் கடைசி இன்னிங்ஸில் பௌலிங்கில் சமாளித்துவிடலாம் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு!'' என்றார் காப்டன் பேடி. அவர் நினைத்தபடியே 'பௌலிங்' அபார வெற்றியைத் தந்துவிட்டது!

☐ சிதம்பரம் ஸ்டேடியத்தில் கிரிக்கெட் ரஸிகர்களுக்கு ஆறுதல் அளித்த ஸிக்ஸர்கள் எட்டு! இந்திய கோஷ்டியில் வாமன விசுவநாத் இரண்டு, பட்டேல் ஒன்று, வெங்கட்டு ஒன்று கண்டார்கள். நியூஸிலந்து கோஷ்டியில் ஹாட்லி இரண்டும், பர்கஸ் இரண்டும் அடித்தார்கள்!

☐ கிரிக்கெட், ஹாக்கி டபிள் இன்டர் நேஷனல் எம். ஜே. கோபாலனைக் கௌரவிக்க, அவரது பெயரைச் சிதம்பரம் ஸ்டேடியம் ஆசார வாசலுக்கே சூட்டியிருக்கிறார்கள்! மைதானத்தை 'நீர்' வடித்து ஆட்டத்துக்குரியதாக்கியதில் இவருக்குப் பங்குண்டு.

☐ பெவிலியனில் ஜெயலலிதா ஒரு நாள் தவறாமல் டெஸ்டுக்கு வந்ததைக் கண்டு வியந்து, ''உங்களுக்குக் கிரிக்கெட்டில் விருப்பம் உண்டா?'' என்று கேட்டேன்.

உடனே ஜெயலலிதா, ''என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! எனக்குப் பள்ளிக்கூட நாளிலிருந்து கிரிக்கெட்டுன்னா உசிரு! நான் ஒரு மெட்ராஸ் டெஸ்ட் 'மிஸ்' பண்ணினதில்லே! இந்த டெஸ்டில் பேடி, சந்திரா, காவ்ரி பௌலிங் ரொம்பப் பிடிச்சது! நம்ம இந்திய கோஷ்டியின் ஸ்டாண்டர்டுக்கு, நியூஸிலந்து கோஷ்டி தரம் ரொம்பக் குறைவு!'' என்று விமரிசனமே செய்து தள்ளிவிட்டார்!

☐ கதையில்தான் மர்மம் உண்டு என்றில்லை! டெஸ்ட் மாட்சிலும் 'பெயில்ஸ்' விழுந்த மர்மம் உண்டு! நியூஸிலந்து 'பாஸ்ட் பௌலர்' ஹாட்லி ஓடிப் போய்த் துப்புத் துலக்க முயன்றார்! அத்தனை நியூஸிலந்து கோஷ்டியினரும் அம்பயர் ராமசாமியைச் சூழ்ந்து கொண்டனர்! அம்பயர் ராமசாமிக்கு முதல் டெஸ்ட் அனுபவம்! ஆனாலும் அவர் இலேசில் மசிந்துவிடவில்லை! அம்பயரிடமிருந்து 'ஹாட்'டைப் பறித்து ஹாட்லி கசப்பைக் காட்டினார்! கடைசியில் அந்த ருத்திரமூர்த்தி ஹாட்லியின் கோபம் ஸ்டம்புக் குச்சியை இரண்டாகப் பிளந்து உடைத்த பிறகே தணிந்தது!

☐ டர்னரைப் படம் போட வேண்டும் என்ற ஆசை ஓவியர் விறுவுக்கு!

அவர் 'டிரஸ்ஸிங் ரூமை' விட்டு வெளியில் வந்தால்தானே!

கிரிக்கெட் விமர்சகர் ஆலன் ரிச்சர்டு பெவிலியனுக்கு வந்தார்! ''ஆலன்! டர்னரைப் படம் வரையணும்! ஒத்தாசை செய்ய இயலுமா?'' என்றோம்.

ஆலன் ரிச்சர்டு, ''எத்தனை நேரம் பிடிக்கும்?'' என்று கேட்டார் மிடுக்கோடு.

''இரண்டு நிமிஷங்கள்!'' என்று கூறித் தாம் வரைந்த 'ஸ்கெட்ச்' புத்தகத்தைக் காட்டினார் ஓவியர் விறு.

படங்களைப் பார்த்து வியந்த ஆலன் ரிச்சர்டு, ''இந்த ஸ்கெட்ச் புக்கை எடுத்துச் சென்றுவிட்டு வருகிறேன்!'' என்று சொல்லி டர்னரின் டிரஸ்ஸிங் ரூமுக்குள் நுழைந்தார்! அடுத்த கணம் டர்னர் 'ஸ்கெட்ச்' வலைக்குள் மாட்டிக் கொண்டார்! இந்த டெஸ்டில் ஆடாத ஆட்டக்காரர் நியூஸிலந்துக் குழு ஆண்டர்சன். அவர் ஓவியர் விறுவை அணுகித் தம்மைப் படம் வரையச் சொன்னதோடு, ஒரு படம் எழுதி வாங்கி நியூஸிலந்துக்கும் எடுத்துச் சென்றார்.

☐ உணவு வேளை. லாலா அமர்நாத்தும் கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராமனும் பேசிக்கொண்டிருந்தனர்!

✖ இந்தியக் கோஷ்டியின் வெற்றி ஊர்வலம்.





சித்திரக்காரர் விஜு
வின் 'ஸ்கெட்ச்' புத்த
கத்திலிருந்து ஒரு சில
படங்கள் :

1. காப்டன் பேடி.
2. வேங்கடராகவன்
3. எம். ஜே. கோபாலன்
4. அடாத ஆண்டர்சன்.
5. விகாவுடன் ரஞ்சனி
6. நாடலி.
7. காப்டன் டர்னர்.
8. காரி ட்ரூப்.

''இனி இந்திய ஆட்டக்காரர்கள் பாடு யோகம். ஐந்து டெஸ்ட்களுக்குக் குறையாமல் ஆடிய இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குக் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு உதவித் தொகை அளிக்கப் போகிறது!'' என்றார் ஸ்ரீராமன்.

''நிடைவரான எங்களைப் போன்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கும் பென்ஷன் உண்டா?'' என்று கேட்டார் லாலா!

□ பெங்களூர் சிங்கங்கள் சந்திராவும் பட்டேலும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். திடீரென்று பட்டேல் எழுந்து நின்று கைகளைப் பலமாக அசைத்துக் கொண்டிருந்தார்! 'இது என்ன?' என்று சந்திராவிடம் வினவியபோது, ''நேற்று ஓய்வு நாள். பட்டேல் புரூஸ் லீ படத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்! அதன் விளைவு இது!'' என்றார் சந்திரசேகர்.

''புரூஸ் லீ என்னமா கராத்தே சண்டை போடுகிறார், தெரியுமா?'' என்று வியந்தபடியே அமர்ந்தார் பட்டேல்! கிரிக்கெட் ஆட்டக்காரர்களையும் 'சினிமா' ஆசை விட்டு வைக்கவில்லை!

□ நெடிதுயர்ந்த தமிழக கிரிக்கெட் சங்க உதவித் தலைவர் பட்டாபிராமனிடம், ''நியூஸிலந்து குழுவுக்கு 'Sportsmanship' குறைவு என்று படுகிறதே!'' என்றேன்.

''சுற்றி வளைப்பானேன்? குறைவுதான். இதற்குமுன் 1955ல் வந்த நியூஸிலந்து குழு காப்டன் 'கேவ்' தலைமையில் வந்தது! அவர்கள் பண்பாடு என்னைக் கவர்ந்தது!'' என்றார் திரு பட்டாபிராமன்.

□ சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்தில் பெவிலியனில் அந்தக் குழந்தையையும், தாயாரையும் பல பெண்களின் பார்வை மொய்த்தது. அடிக்கடி அவள் முகம் மைதானத்து ஆட்டத்தில் லயித்துப் பிரகாசம் அடைந்தது. சித்திரக்காரர் வினு அந்தக் காட்சியை ஒரே நிமிஷத்தில் வரைந்து அவளிடம் எடுத்துச் சென்றார்!

''நீங்கள் இதில் கையெழுத்துப் போட்டுத் தர வேணும்!'' என்றார் வினு!

''என்னையா? அவரை அல்லவா நீங்கள் முதலில் வரைய வேணும்?'' என்றாள் அந்த அழகிய மங்கை, தம் மகன் விக்ரமை அரவணைத்தபடியே!

''இந்தச் சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் உங்கள் கணவர் நான்கு காட்ச், 64 ரன்கள், ஒரு ஸிக்ஸர், பௌலிங்கில் கடைசி விக்கெட் எடுத்து ஆல்ரௌண்டர் என்பதை நிரூபித்து விட்டார்!'' என்றேன்.

தம் கணவர் வெங்கட்டின் சாதனையில் மகிழ்ந்த ரஞ்சனி படத்தில் கையெழுத்திட்டுத் தந்து விட்டார்! வெங்கட்டையும் தம் சித்திர வலைக்குள் வளைத்துவிட்டார் ஓவியர் வினு!

இந்தியாவின் சாதனை இரண்டு டெஸ்ட்களில் வெற்றி. நியூஸிலந்துக்குத் தோல்வி நெருங்க நெருங்க அவர்கள் வேதனை பெருகியது! டர்னர், வெற்றிக் கோப்பையோடு பவனி வந்த பேடியை டிரஸ்ஸிங் ரூமை விட்டு வெளி வந்து முதுகில் தட்டிப் பாராட்டியது அதற்கு முன்பு ஏற்பட்ட சிறிதளவு மனக் கசப்பைப் போக்கி விட்டது.

மக்கள்!

வி.ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்களின் உலகப் பயண அனுபவ நூல் வானதி பதிப்பகப் பிரசுரமாகியுள்ளது. வெளியீட்டு விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் நூல் பற்றி அருமையான விளக்கம் கொடுத்தார். அவர் வடலூர்க் கோவில் திருப்பணியில் ஈடுபட்டிருந்தபோது பெரிய பெரிய மரங்களைத் துண்டாக்க மரத் தச்சர்கள் பணி செய்ய வருவார்கள். எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் அதன் மேல் ஒரு நூலைப் போட்டு அந்த நூலின்மீது சாக்கட்டியை உருட்டிவிட்டு அந்த அடையாளத்தில் ரம்பம் வைத்துத் துண்டாக்குவார்கள்.



''அந்த நூல் மரத்தைக் கோண விடாமல் துண்டாக்க உதவுகிறது. இந்த மாதிரி நூல் (புத்தகங்கள்) மனத்தைக் கோணலாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று வாரியார் கூறியதைச் சபை பலத்த கரகோஷத்துடன் ஆமோதித்தது.

சென்னை டெஸ்ட் மாட்சின்போது திருவல்லிக்கேணி, பைகிராஃப்ட்ஸ் ரோட் பக்கம் போகும் பல்லவன் பேருந்துகள் எல்லாம் காசினோ தியேட்டரிலிருந்து வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல சிம்சன் கம்பெனி வாசலில் இருக்கும் பெரியார் சிலையைச் சுற்றிக்கொண்டு டெலிவிஷன் ஸ்டேஷன் வழியாக அண்ணா சதுக்கத்தில் போய் நின்றன.

குறிப்பிட்ட ஒரு பஸ் கண்டக்டர், திருவல்லிக்கேணிப் பகுதிக்கு முப்பத்தி ஐந்து பைசா டிக்கட் கொடுத்திருக்கிறார். ஆனால் அண்ணா சமாதி முன் பஸ் போய் நின்றதும் பல்லவன் போக்குவரத்து ஸ்தாபனத்தைச் சேர்ந்த டிக்கட் பரிசோதகர்கள் சிலர், முப்பத்தி ஐந்து பைசாக் கொடுத்து டிக்கட் வாங்கி விட்டு வழக்கத்தை விட அதிகமாகச் சில பர்லாங்குகள் நடக்க வேண்டியிருந்த பிரயாணியை மடக்கி, அவர் நாற்பது பைசா டிக்கட்டுக்குப் பதிலாக முப்பத்தி ஐந்து பைசா டிக்கட் வாங்கிக் கொண்டு அண்ணா சமாதி வரை வந்த மாபெரும் தவற்றைச் செய்துவிட்டதாகவும் அதற்காக இரண்டு ரூபாய் நாற்பத்தி ஐந்து பைசா அபராதம் கட்டவேண்டும் என்று கனல் பறக்கப் பேச ஆரம்பித்தார்கள்! பயணிகள் பலர் தீவிர எதிர்ப்புக் காட்டிய பிறகே அந்தப் பரிசோதகர்கள் வேண்டா வெறுப்புடன் பின் வாங்கினர்!

அன்று அவர்கள் நடந்து கொண்ட முறை பாராட்டும்படி இல்லை! — **பழைய கருப்பன்**

கல்லூரிக் கதை-9

மாணவ மேதைகள்!

விஜயா பாலகிருஷ்ணன்



நான் 'இண்டர்மீடியட்' படிக்கையில் ரஸிகமணி டி. கே. சி. அவர்களுடன் தென்காசியிலிருந்து சென்னை வரையில் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. மாணவன் என்று தெரிந்தவுடன் டி. கே.சி.க்கு ஒரே குஷி ! தமிழில் கதை எழுதும் 'குற்றம்' வேறு புரிந்திருக்கிறேன் என்று தெரிந்ததில் இரட்டிப்பு சந்தோஷம். இரவு படுக்கப் போவது வரையில் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார். பேச்சில் பெரும் பகுதி நமது கல்வித் திட்டங்களையும், கல்லூரி சம்பிரதாயங்களையும், ஏட்டுப் படிப்பையும் சாடுவதிலேயே கழிந்தது. அப்பாவி ஆசிரியர்களையும் விட்டு வைக்கவில்லை டி. கே. சி. சரியான 'போஸ்' கொடுத்தார் !

அன்று அவர் சொன்னது எதுவும் என் இளம் மண்டையில் ஏறவில்லை. நீண்ட காலம் பல கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றி அனுபவம் பெற்ற பின்தான், ரசிகமணி எவ்வளவு பெரிய சிந்தனையாளர், தீர்க்கதரிசி என்பது விளங்கியது. இனி நான் குறிப்பிடப் போகும் நிகழ்ச்சிகளுக்கும், டி. கே.சி.யின் அன்றையப் பேச்சுக்கும் நேரடியான தொடர்பு இல்லைதான். ஆனால் இவற்றை எழுதுகையில் எனக்கு அவர் நினைவு வருகிறது. காரணம், ஏறக்குறைய இது போன்ற விஷயங்களைப் பற்றி அவர் அன்று தொட்டும் தொடாமலும் பேசியிருந்ததுதான்.

கிருஷ்ணமூர்த்தி என்றொரு மாணவன். பார்ப்பதற்குப் பைத்தியக்காரன் போலிருப்பான். ஆங்கில இலக்கியம் நான்காவது ஆனர்ஸ் (இரண்டாவது வருஷம்) படித்துக் கொண்டிருந்தான். வகுப்புக்குப் போகும் வழக்கமே கிடையாது. அந்தச் சர்வகலாசாலையின் விதிகள்படி அவ்வப்போது இரண்டு ரூபாய் அபராதம் கட்டிவிட்டால் 'அட்டெண்டன்ஸ்' இல்லாத குறை நிவர்த்தியாகிவிடும். கிருஷ்ணமூர்த்தி இந்தச் சலுகையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ஒரு வகுப்பைக்கூட எட்டிப் பாராமல் தன் நேரம் முழுவதையும் சர்வகலாசாலை லைப்ரரியில் கழித்தான். அவன் என்ன படித்தானோ, கடவுளுக்கே வெளிச்சம் ! ஆங்கிலப் பேராசிரியர் டாக்டர் சுதர்சனம் கொதித்து எழுந்தார். வகுப்புக்கு வராமல் எந்த மாணவனாலும் 'பழைய ஆங்கிலம்' (Old English) போன்ற கஷ்டமான பாடங்களைக் கற்க முடியாது என்பது அவர் துணிபு. துணைவேந்தரின் அனுமதி பெற்றுக் கிருஷ்ணமூர்த்தியை நான்காம் ஆனர்ஸிலிருந்து இரண்டாம் பி.ஏ.க்கு (ஸீனியர் பி. ஏ.) மாற்றிவிட்டார். அதற்குப் பின்னும் கிருஷ்ணமூர்த்தி வகுப்புக்குப் போனானில்லை. வருடக் கடைசியில் மூன்றும் வகுப்பில் பி. ஏ. பாஸ் பண்ணினான். பிறகு என்ன ஆனான் என்று தெரியவில்லை.

நீண்ட காலத்துக்குப்பின் புது தில்லியில் ஒரு தேநீர் விருந்தில் அவனைச் சந்தித்தேன். 'ட்ரிம்'மாக டிரஸ் செய்து கொண்டிருந்தவன் தன் அழகிய மனைவிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தான். 'இந்தியன் ஃபாரின் சர்வீஸி'ல் (I. F. S.) பணியாற்றுவதாகவும் சொன்னான்.

'' நான் மட்டும் வகுப்புகளுக்கு முறையாகப் போயிருந்தால் எனக்கு நிச்சயம் முதல் வகுப்பு கிடைத்திருக்கும். எங்காவது குமாஸ்தாவாக முடங்கிச் 'சம்பிரதாய வாழ்க்கை' வாழ்ந்து கொண்டிருப்பேன். என்னுடன் படித்து வந்த 'மணிப் பிள்ளை' லக்ஷ்மி நாராயணன் முதல் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறி என்ன பயன்? அத்தனை போட்டிப் பரீட்சைகளையும் கோட்டை விட்டான். எங்கோ மிகக் குறைந்த சம்பளத்தில் கஷ்டப்படுவதாகக் கேள்வி. என்னைக் கேட்டால் எந்த மாணவனையும் 'வகுப்புக்கு வந்தாக வேண்டும்' என்று கட்டாயப்படுத்துவது தவறு. வகுப்பில் கற்றுக் கொள்வதைவிட, நாம் சொந்த முயற்சியில் கற்றுக் கொள்வது தான் உண்மையான கல்வி. .... மிகச் சிறந்த பேராசிரியரையே எடுத்துக் கொள்வோம். கூடிப் போனால் அவரால் அப்படி என்ன சாதித்துவிட முடியும்? பாடத்தில் ஒரு ருசியை ஏற்படுத்த முடியும்; மாணவனின் சிந்தனையையும், கற்பனை சக்தியையும் தூண்டிவிட முடியும். வாசற்படி வரையில் வழிகாட்டிவிட்டு அவர் போக வேண்டியது

தான். பிறகு பயணம் தனியேதான் தொடர வேண்டும். அது கஷ்டமான பயணம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் சரியான நோக்குடன் பார்த்தால் மிக இன்பமானது. வாசகசாலையில் சுயேச்சையாகப் பல்வேறு துறைப் புத்தகங்களை மாந்தி மாந்திச் சுவைக்கப் போய்த்தான் வாழ்க்கையில் நான் வெற்றி பெற்றேன்.''

வில்லியின் கதையே வேறு. வயதுக் கோளாறு காரணமாக ஏதோ சில்லறை அசம்பாவிதத்தில் மாட்டிக் கொண்டாள். அந்தக் காலத்து ஆசிரியர்கள் அனைவரும் அவளைக் கல்லூரியை விட்டு உடனே வெளியேற்ற வேண்டும் என்று ஏக குரலில் கூறினார்கள். ஓர் இளைஞர் மட்டுமே வில்லிக்காகப் பரிந்து பேசினார். அவள் செய்திருந்த குற்றம் மன்னித்து மறக்க வேண்டிய ஒன்று என்பது அவர் அபிப்பிராயம். பழி வாங்கத் துடித்த பழைய காலத்து ஆசிரியர்கள் அவர் மீது சாடினார்கள்.

''அந்த உதவாக்கரைப் பெண்ணைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அத்தனை பரீட்சையிலும் குறைந்த மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறாள். ஏதோ 'கெட்டிக்கார மாணவி' என்றாலும் 'போனால் போகிறது' என்று விட்டுத் தொலைக்கலாம். அவள் ஒரு கழிசடை. இப்படியே விட்டு வைத்தால் மற்ற மாணவிகளையும் கெடுத்து விடுவாள். உமக்குச் சின்ன வயசு. அவள் இளமையைக் கண்டு மயங்கி என்னென்னமோ பிதற்றுகிறீர்கள். அவளைக் கல்லூரியை விட்டு வெளியேற்றியே தீர வேண்டும்'' என்று விடாப்பிடியாகச் சாதித்ததுடன், அவளுக்குக் 'கல்தா'வும் தந்தார்கள்.

ஆச்சு! இருபத்தஞ்சு வருஷங்களுக்குப்பின் நான் வில்லியை மீண்டும் சந்தித்தேன் சற்றும் எதிர்பாராதவிதமாக! எனக்கு அவளை அடையாளமே தெரியவில்லை. பஞ்சுத் தலையுடன் என் முன் நிற்கும் வில்லி எங்கே, அன்று துள்ளிக் குதித்த பருவப் பெண் எங்கே? ஆஸ்பத்திரியில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறோம் என்பதுகூட ஒரு கணம் மறந்து விட்டது. '' நான் இந்த ஊர் மெடிகல் கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றுகிறேன். அடிக்கடி இந்த ஆஸ்பத்திரிக்கு வந்து என் மாணவர்களான இளம் டாக்டர்களுக்கு உதவுவதுண்டு. ஒரு கேஸ் மிகவும் சிக்கலாக இருப்பதாக எனக்குத் தெரிவித்தார்கள். அது நீங்களாக இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை! எத்தகைய சூழ்நிலையில் பிரிந்தோம். எத்தகைய சூழ்நிலையில் கூடுகிறோம்? வாழ்க்கை ரொம்ப விசித்திரமானது. எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது'' என்று தத்துவ ரீதியில் பேசிக் கொண்டே போனாள் வில்லி.

பிறகு விசாரித்ததில் பின்வரும் விஷயங்கள் தெரிய வந்தன. கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்ட வில்லியைப் பெற்றோர்கள் உள்பட அனைவரும் 'உதவாக்கரை', 'கழிசடை' என்றெல்லாம் ஏசினார்கள். வெறுப்புற்ற அவள் ஒரு 'மிஷனரி'யின் உதவியுடன் நியூயார்க்குக்குச் சென்று விட்டாள். போன இடத்தில் படிப்பைத் தொடருவோம் என்று அவள் நினைக்கவே இல்லை. ஆனால் நடந்தது என்னமோ அதுதான். மெடிகல் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினவளுக்கு, மருத்துவத்தின் மீது எப்படி அவ்வளவு ஆர்வம் பிறந்தது என்பது அவளுக்கே வியப்பாக இருந்தது. அந்த ஆர்வம் விரைவில் ஒரு வெறியாக மாறி, இலட்சிய வாழ்க்கை ஒன்றுக்கு அடிகோலும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. உயரிய பட்டங்கள் பெற்ற பின் ஆராய்ச்சியில் இறங்கினவளுக்கு, 'அவார்டு'களாக வந்து கொட்டின. அவள் உலகப் பிரசித்திபெற்ற டாக்டரானாள். குறிப்பிட்ட ஒரு நோய் விஷயத்தில் அவள் பெரிய 'அதாரிட்டி'.

''என்னிடம் இந்தத் திறமை ஒளிந்து கொண்டிருந்தது எனக்கே தெரியாது. சந்தர்ப்பங்கள் சதி செய்யப் போய் அது வெளியே வந்தது. என்னைப் போல் எத்தனை மாணவ மாணவிகளை 'உதவாக்கரை' என்று உதறி எறிகின்றனவோ நம் சர்வகலாசாலைகள்?'' என்று உணர்ச்சிவசப்பட்டு அவள் பேசப் பேச, நம் போதனை முறையிலும் ஆசிரியர்கள் நோக்கிலும் இருக்கும் குறை





கெடுத்தார்களே மகிழ்ச்சியை!

ஐரோப்பாவில் பாங்க் அதிகாரி ஒருவர், உள்ளூர் தபாலாபீஸ் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார். தம் மனைவி எழுதிய கடிதம் ஒன்றைத் தமக்குத் தாமதமாகப் பட்டுவாடா செய்தார்கள் என்பதுதான் காரணம்... 'உங்களுடன் வாழ விரும்பாமல் போகிறேன்' என்ற அக்கடிதம் உரிய நேரத்தில் கிடைத்திருந்தால், ஒரு வாரமாக மனைவியைக் காணவில்லையே என்று அவதிப்படாமல் இருந்திருக்கலாம். ஒரு வார மகிழ்ச்சியை இந்தத் தபாலாபீஸ்காரர்கள் தகர்த்துவிட்டார்கள்'. என்கிறார் - சாமி

களைப் பற்றித் தீவிரமாக எண்ணத் தொடங்கினேன் நான்.

கோபால்ராவ் இன்னொரு 'டிராப் அவுட்' (Drop out). வகுப்புக்கே வரமாட்டான். வந்தாலும் கனவு உலகில் சஞ்சரித்துக்கொண்டிருப்பான். நாடகங்களில் நடிப்பதுதான் அவன் பொழுதுபோக்கு. ஆந்திராவில் எங்கே நாடகம் போட்டாலும் கோபால் ராவை அங்கு காணலாம் என்று மிகைப் படுத்திச் சொல்லும் அளவுக்கு 'நாடகப் பைத்தியம்' பிடித்திருந்தது. ஆசிரியர்கள் சீறினார்கள்; அபராதம் போட்டார்கள். பெற்றோர்களுக்கு எழுதினார்கள். கோபால் ராவ் திருந்தவில்லை. கடைசியில் 'அட்டென்டன்ஸ்' போதாது என்று சொல்லிக் கல்லூரியைவிட்டு வெளியேற்றினார்கள். கொஞ்ச நாட்கள் பிச்சைக்காரனுட்டம் கல்லூரியைச் சுற்றிச்சுற்றி வந்தான் கோபால் ராவ். பிறகு தலைமறைவானான்.

பிரபல சினிமா நடிகர் சொக்கையா கோபால்ராவுக்குக் கைகொடுத்து உதவினார். சினிமாவில் அவனுக்கு 'சான்ஸ்' கிடைத்தது. முதலில் ஹாஸ்ய நடிகனாகத் தோன்றினான். குணசித்திர நடிகனாக வளர்ந்தான். கடைசியில் கதாநாயகனாக விசுவரூபம் எடுத்தான்.

எந்தக் கல்லூரி அவனை வெளியேற்றிற்றோ, அந்தக் கல்லூரியே அவனுக்கு வாழ்த்து மடல் படித்து வரவேற்றது! எந்தப் பிரின்ஸிபால் அவனை 'உருப்படாக் கழுதை' என்று தூற்றினாரோ, அதே பிரின்ஸிபால் அவனுடைய மேதாவிலாசத்துக்குக் கவி பாடினார்! கோபால் ராவுக்குச் சிரிப்பு வந்தது. அவன் பேசுகையில் தனக்குத் தனிப்பட்ட முறையில் யாரிடமும் கோபமில்லை யென்றும், தன் துரதிர்ஷ்டத்துக்கெல்லாம் காரணம், கற்பனையற்ற கல்வி நிபுணர்கள் வகுத்த கல்வித் திட்டந்தான் என்றும் குறிப்பிட்டான். எத்தனை 'டிராப் அவுட்ஸி'டம் என்னென்ன திறமைகள் ஒளிந்து கொண்டிருக்கின்றனவோ? அவையெல்லாம் வீணாக வேண்டியதுதானா? காரமாகப் பேசின கோபால் ராவ் கல்லூரி வாசகசாலைக்குக் கணிசமான தொகை ஒன்று தந்தான்.

ராமதாஸ் ஒரு பிறவி மேதை. எஞ்சினீரிங் கல்லூரியில் சேர்ந்து முறையாக 'எலெக்டிரானிக்ஸ்' படிப்பதற்கு முன்னாலேயே தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சிகள் பல செய்திருந்தான். 'தியரி' எதுவும் தெரியாமலே, பட்டம் பெற்ற பேராசிரியர்கள் மூக்கில் விரலை வைக்கும் வண்ணம் செப்பிடு வித்தைகள் செய்வதில் மன்னன். அவன் அறைக்குள் தப்பித் தவறிக் காலெடுத்து வைத்தால் வெளியே வருவது பிரயாசை. குறுக்கும் நெடுக்குமாக ஆயிரம் கம்பிகள் பிணைக்கப் பட்டிருக்கும். கபந்த ரூபத்தில் அநேகம் 'காஸெட்'டுகள் கன்னா பின்னா வென்று இறைந்து கிடக்கும். பிரித்துப் போடப்பட்ட 'டேப் ரெக்கார்டர்'களும், ரேடியோக்களும் கணக்கிலடங்கா. இன்னும் என்னென்னமோ தட்டுமுட்டுச் சாமான்கள்!

ஒரு தடவை டிஜிடல் கம்ப்யூட்டர் ஒன்று மக்கர் செய்தது. கம்பெனி எஞ்சினீயர்களாலேயே தவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கண் மூடித் திறப்பதற்குள் யந்திரத்தைச் சரிசெய்து விட்டான் ராமதாஸ். 'எப்படி?' என்று கேட்டதற்கு அவனால் சரிவரப் பதில் அளிக்க முடியவில்லை. ஆனால் எந்தச் சிக்கலான யந்திரத்தையும் தன்னால் பழுதுபார்க்க முடியும் என்று தைரியமாக மொழிந்தான். உள்ளுணர்வாகத் தவறு எங்கே இருக்கிறது என்று அவனுக்குத் தெரியுமாம்!

பலமுறை முயன்றும் ராமதாஸினால் பி.இ. பட்டம் பெற முடியவில்லை. ஆனால் அவன் கலங்கவில்லை. அவனுக்குத் தன் திறமையில் அபார நம்பிக்கை இருந்தது. அவன் எதிர் பார்த்தது போலவே மேல்நாட்டு நிறுவனம் ஒன்று உயர் பதவி அளிப்பதாகச் சொல்லி அவனைக் கொத்திக் கொண்டு சென்றது. முதல் வகுப்பில் பி.இ. பட்டம் பெற்ற எத்தனையோ பேர் இன்று ராமதாஸின் கீழ் பணியாற்றுகிறார்கள்!

சரித்திரசிப்ஸ்



○ ஔரங்கசீப்பால் சிறையில் அடைக்கப்பட்ட அவர் தந்தை ஷாஜஹான், தம் மனைவியின் ஞாபகார்த்தமாக யமுனை நதிக்கரையில் கட்டப்பட்ட 'தாஜ்மகலை'ச் சிறைச் சாலையின் ஜன்னல் வழியாகவே எட்டு ஆண்டுகள் பார்த்துப் பார்த்து ஏங்கியே இறந்துபட்டார்.

○ ஔரங்கசீப் தம் சொந்தச் செலவுகளுக்காக அரசாங்கப் பணத்தில் ஒரு சிறிதும் எடுத்துக் கொண்டார் இல்லை. குல்லாய் தைத்து விற்றும், திருக் குரானைக் கைப் பிரதிகள் எடுத்து விற்றும் தம் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொண்டார். மரணத் தறுவாயில் கூடத் தம் புதல்வர்களிடம், தம் இறுதிக் காரியங்களைத் தம்மிடம் எஞ்சியுள்ள தம் சொந்தப் பணத்திலிருந்தே நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

○ பூஜ்யத்தை முதன் முதலில் கண்டுபிடித்தது நம் இந்தியா தான். அரேபியர்கள் இந்தியர்களிடமிருந்துதான் கணிதம், வான சாஸ்திரம் போன்றவற்றைக் கற்று, அவற்றை மேல் நாடுகளில் பரப்பினார்கள்.

—லலிதா நாராயணன்

உங்கள் குழந்தையை நடத்தும் அதே வகையில் அவனது சளியையும் அகற்றுங்கள். கனிவுடன். கண்டிப்புடன்.



ரபெக்ஸ்

உங்களைப் போலவே... சளியைப் போக்கும் வலிமையும், திறனும் மிக்கது. இதமும், ஆறுதலும் அளிப்பது.

ரபெக்ஸில் அடங்கியுள்ள நம்பகமான ஆறு மருந்துப் பொருள்கள், (மென்தோல், கேம்ஃபர், தைமால், டர்ப்பென்டைன், யூகலிப்டஸ் ஆயில், நட்மெக் ஆயில்) அவனுடைய மூக்கு, தொண்டை, மார்பு மற்றும் முதுகுப் பகுதிகளில் தேய்க்கும்போதே இதமான ஆறுதல் தர வல்லவை. ரபெக்ஸ் அவனது மூக்கடைப்பைத் தளர்த்தி, மார்புச் சளியை அகற்றி, மூச்சு விடுதலை எளிதாக்கும். ரபெக்ஸ் தரும் இதம், உங்களது கனிவு இழைந்திணூடே அவனது புன்னகைக்கு அளவே இராது. உடனடியாகவே!

ரபெக்ஸ்


தேய்த்தாற்றும் திறனுள்ள களிம்பு. எரிச்சலூட்டாது. ஒட்டாது.

க்ளைகோடின் போன்ற நவீன மருந்துகள் தயாரிக்கும் Alembic அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/665/ACW-tm.

மகளிர் பகுதி

சைக்கிள் அனுபவம்



தமிழ்நாட்டில் முதன் முறையாக நானும் என் கணவரும் (இரா. பூபதி) தனித்தனி சைக்கிள்களில் பல இடங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தோம். அப்பொழுது ஏற்பட்ட அனுபவங்கள்:

1. ஒரு பெண் சைக்கிளில் இப்படி சுற்றுப் பயணம் செய்வதை வியப்பாகவும், ஆச்சரியமாகவும் கிராம மக்கள் நினைக்கின்றனர்.

2. சைக்கிள் விடுவதற்கு ஏதுவாக சல்வார் கமீஸ் அணிந்து போவதால், ஏதோ வெளிநாட்டுப் பெண் சைக்கிள் விடுவதாக நினைக்கின்றனர். கழுத்தில் 'தாலிக்கயிறு' கால் மெட்டி இவற்றைக் கண்டதும் ''பாத்தியா இப்படிப் பொம்பளைங்க சைக்கிள் விடுவதால் தான் மழையே இல்லை'' என்று கூறுகின்றனர்.

3. போகின்ற இடங்களில் சிறுபிள்ளைகள் சைக்கிள்களின் பின்னே உற்சாகமாகக் கத்திக் கொண்டு வருவார்கள். பல இடங்களில் இந்தப் பிள்ளைகள் குடிக்கத் தண்ணீர் நுங்கு முதலியன கொடுத்து உபசரித்து எங்களை வியப்பில் ஆழ்த்தியும் இருக்கின்றனர்.

4. பல இடங்களில் வாலிபர்கள் பின்னுடியே கொஞ்ச தூரம் தங்கள் சைக்கிள்களில் தொடர்ந்து வருவதும் உண்டு.

5. பல கிராமக் கடைகளில் வெளியே இருந்து வருகின்றனர் என்ற காரணத்திற்காக விலைகளை அதிகமாகச் சொல்கின்றனர்.

6. எங்கள் சைக்கிள் பயணத்தைப் பொதுவாகப் பாராட்டினாலும், ''ஏனம்மா உனக்குத் தொல்லை? இவ்வளவு தூரம் சைக்கிளில் வர வேண்டுமா?'' என்று எல்லோரும் பொதுவாகக் கேட்கின்றனர்.

7. சைக்கிள் பயணம் செய்வதற்குப் பொருளாதாரக் காரணத்தை விட மனத் துணிவும், சுதந்திரச் சிந்தனையும், எதையாவது புதுமையாகச் சாதிக்க வேண்டும் என்ற உறுதியும் வேண்டும்.

—மதுராந்தக சகுந்தலா பூபதி



பெருமை சேர் பெண்மை!

பொம்பளை சிரித்தால் போச்சு!

புகையிலை விரித்தால் போச்சு!

என்பது தமிழ்ப் பழமொழி. ஆனால் உத்தம இலக்கணமுடைய பெண்டிர்கள் பார்த்தாலும், சிரித்தாலும், உதைத்தாலும், பாடினாலும், ஆடினாலும் எவை எவை தளிர்த்து, அரும்பிப் பூக்கும் என்று பண்டைத் தமிழ் இலக் கியங்களில் பாடி வைத்திருக்கிறார்கள்.

தனிப் பாடல் திரட்டு

''ஏடவிழ் மகிழ்கவைக்க! எழிற்பாலை நண்புகூடப்
பாடலம் நிந்திக்க! தேம்படி முல்லை
நாககக்க! புன்னை
ஆட! நீள் குரா அணைக்க! அசோகம்
உதைத்திட வாசந்தி
பாட! மா பார்க்க! வார் சண்பகம்
நிழற்படத் தளிர்க்கும்!

என்ற தனிப் பாடலில் உத்தமப் பெண்டிர்கள்
கவைத்தால் — மகிழமும்
நண்புகூட (நட்பு கொண்டாடினால்)
—எழிலம்பாலையும்
நிந்தித்தால் (திட்டினால்) — (பாடலம்)
பாதிரியும்



பெமினா இதழ் 25 அழகுக் குறிப்புக்களை வெளியிட்டுக் கடைசியில் பின்வருமாறு எழுதியிருந்தது: "எல்லாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற உற்சாகம் வேண்டும். அது இல்லையானால் ஒரு பெண் எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் பிரயோஜனமில்லை."

-சரோஜா ராமச்சந்திரன்

ஒரு சினிமாக் கதை!

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள். நானும் என் கணவரும் சென்னையில் இரண்டாவது ஷோவுக்கு ஓர் ஆங்கிலப் படத்துக்குச் செல்லுவதாகத் திட்டமிட்டிருந்தோம். அதற்காக எங்களுக்கு எங்கள் நண்பர்கள் மூலம் இரண்டு இலவச பாஸ்களும் கிடைத்திருந்தன. குறிப்பிட்ட நாளன்று இரவு எட்டு மணி அளவில் படத்துக்குக் கிளம்புவதற்கு இருபது நிமிடங்களுக்கு முன் எதிர்பாராத விருந்தினர் இருவர் மூட்டை முடிச்சுக்களுடன் டாக்ஸியில் வந்து இறங்கினர். மனத்துக்குள் என் (சினிமா) அதிர்ஷ்டத்தை எண்ணி வருத்தமுற்றேன். வந்தவர்களை வரவேற்றுத் தகுந்தவாறு உபசரித்தேன். நல்ல வேளையாக அவர்கள் 10-30 மணி ரயிலுக்குப் போவதாகவும், வேறு ஒருவர் வீட்டுக்கு நேற்றே வந்ததாகவும், வந்த இடத்தில் எங்களையும் பார்த்துப் போக வந்ததாகவும் கூறி உடன் வந்த டாக்ஸியிலேயே கிளம்பி விட்டனர். நாங்கள் உடனே வீட்டைப் பூட்டிக் கொண்டு ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு மௌண்ட்ரோட்டுக்கு ஓட்டச் சொன்னோம். பாதி தூரம் சென்றவுடன் டாக்ஸியில் ஒரு கோளாறு. அது ஓடாமலே சதி செய்து விட்டது. பிறகு வேறு ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு மௌண்ட்ரோடு சென்றோம். தூக்கம் வராமல் இருப்பதற்காக அங்கு ஒரு ஹோட்டலில் காப்பி சாப்பிடச் சென்றோம். எதிர்பாராதவிதமாகக் காப்பி கொண்டு வந்த சர்வர் என் புடவையில் காப்பியைக் கொட்டி விட்டார். அதனால் என் கணவருக்கும் காப்பி கொண்டு வந்த சர்வருக்கும் பெரிய லடாய். பிறகு தியேட்டருக்குச் சென்றோம். படம் ஆரம்பமாகிப் பத்து நிமிடங்கள் ஆகி விருந்தது. பாஸைக் காண்பித்து உள்ளே சென்றால், எங்கள் இருவரையும் வெவ்வேறு சீட்டில் அமர்த்தி விட்டுக் 'கேட்கீப்பர்' சென்று விட்டார். அதோடு எதிர்பாராத விதமாகப் படம் இரவு 12-30க்கே முடிவடைந்து விட்டது. திரும்பிவர பஸ்ஸுக்குக் காத்திருந்தால், மௌண்ட்ரோடு தியேட்டர்களில் எல்லாம் காட்சி முடிந்த பிறகுதான் எல்லா பஸ்ஸும் கிளம்பும் எனக் கூறி விட்டார்கள். டாக்ஸிக்குக் கொடுக்கும் அளவுக்கு வீட்டிலும் பணம் கிடையாது. பஸ்ஸுக்கு வெகு நேரம் காத்திருக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் நாங்கள் நடந்துபோய் விடலாம் என்று நடக்க ஆரம்பித்தோம். பாதி தூரம் வந்தவுடன் நல்ல மழை பிடித்துக் கொண்டு விட்டது. மழைக்கு எங்கேயாவது வீட்டுக்கு அருகில் ஒதுங்கலாம் என்று சென்றால் நாய்கள் (பெரிய மனிதர்கள் வீட்டு நாய்கள்) குரைத்து விரட்டி விட்டன. ஆகவே தொப்பல் தொப்பலாக நனைந்து கொண்டே வீடு வந்து சேர்ந்தோம். (வீடு பழைய மாம்பலம் லேக் வியூ ரோடு.) வீட்டைத் திறந்து பார்த்தால் ஒரே மழை நீர் ஒழுகிக் குளமாகத் தேங்கிக் கிடந்தது. பிறகு நீரைத் துடைப்பம் கொண்டு வெளியேற்றி விட்டுத் தூங்கப் போகும்போது மணி காலை 3-15.

இவ்வளவு இடையூறுகளுடன் நாங்கள் பார்த்த ஆங்கிலப் படத்தின் பெயர்:

"NOTHING BUT TROUBLE"

– லலிதா நாராயணன், தேவகோட்டை



நகைத்தால் — முல்லையும்
ஆடினால் — புன்னையும்
அணைத்தால் — குராவும்
உதைத்தால் — அசோகமும்
பாடினால் — வாசந்தியும்
பார்த்தால் — மாமரமும்
நிழல்பட்டால் — சண்பகமும்

பட்டுப் போயிருந்தாலும் துளிர்த்தும், அரும்பியும், பூத்தும், காய்த்தும், கனிந்து குலுங்கும் என்று பாடியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா ?

—செல்வி ஆண்டாள், சென்னை-15



கோட்டூர்புரம்

□ திரு குப்புராவ் அன்றும் மாலை வீடு திருப்ப இயலவில்லை. மவுண்ட்ரோட் காரியாலயத்திலேயே தங்கி விட்டார்.

மறுநாள் வியாழக்கிழமையும் வீடு திரும்ப வேண்டாம் என்றுதான் நினைத்தார். ஆனால் பிற்பகலில் பெரம்பூர்ப் பகுதியில் தெருக்களிலெல்லாம் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது என்று யாரோ கொண்டுவந்த செய்தி அவரைப் பதற்றமடையச் செய்தது. பேருந்துகள் அன்று ஓடவில்லை. ஐந்து மணிக்கு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

''பெரியவரே! எங்கே போறீங்க? திசை தெரியாம தண்ணீர் அலைபாயுது. குடிசைகளெல்லாம் மிதக்குது. பேசாம வந்த வழியே திரும்புங்க'' என்று ஒலித்த எச்சரிக்கைக் குரலைக் குப்புராவ் சட்டை செய்யவில்லை.

நல்ல நாளிலேயே அவ்வளவு தூரம் நடப்பது சிரமம். வெள்ளத்தில் நடப்பதென்றால்? அசதி வாட்டியது. பாதை ஓரமாக ஒரு பஸ் ஸ்டாப் கம்பம். அதைப் பிடித்துக்கொண்டு நின்றால் தேவலை போல் தோன்றியது. அது அவர் கரம் பட்டவுடன் அவரையும் இழுத்துக்கொண்டு நீர்ப் பிரவாகத்தில் விழுந்து விட்டது. இளைப்பாறும் ஆசையைத் தியாகம் செய்துவிட்டுத் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார்.

சரவணா திரைப் படக் கொட்டகையை எட்டுவதற்கு முன்னால் ஒரு சந்திப்பில் தண்ணீர் குமிழியிட்டு ஓடிக் கொண்டிருந்தது.

அதைக் குப்புராவ் கவனிக்காமல் நெருங்கி விட்டார். கடைசி விநாடியில் புதைத் தவிர்க்க ஒதுங்கியபோது ஒரு பள்ளத்தில் காலை வைத்து நீரில் சாய்ந்து விட்டார். நீரில் மிதந்து வந்த ஆட்டுக்குட்டியோ கன்றுக்குட்டியோ கீழே ஊன்றிய கையில் தட்டுப்பட, சட்டென்று எழுந்து நின்றார்.

வீட்டின் அவசரத் தேவைக்காக இரண்டு பேர்களிடம் கடனாக வாங்கி வைத்திருந்த இருபத்தி மூன்று ரூபாய் இரண்டு தடவை கீழே விழுந்ததில் தண்ணீரோடு போய்விட்டது. இடையில் ஒரு பாலத்தைக் கடக்கும் போது எதிர்பாராத விதமாக ஓர் ஐயப்ப பக்தர் தோன்றிக் கைகொடுத்தார்.

இப்போது அநேகமாகப் பெரம்பூர் எல்லையை அடைந்துவிட்ட குப்புராவுக்கு உள்ளத்தில் தெம்பு வந்தாலும் உடல் தள்ளாடியது.

எங்கிருந்தோ முளைத்த ஒரு போலீஸ் காவலர் குப்புராவை வழிமறித்தார். ''இந்தா ஐயா! ஊது பார்க்கலாம்!'' என்றார்.

பாவம், குப்பு ராவ்! வெளித் தண்ணீரால் அவர் பாதிக்கப்பட்டிருந்தாரே தவிர உள் தண்ணீரால் அல்ல! பலமாகவே போலீஸ் காவலர் முகத்தில் ஊதிவிட்டு மேலே மேட்டுப் பாளையம் பகுதியை நோக்கி நடந்தார். ஒரு சிகரெட் கடைக்காரர் எட்டுப் பைசா சிகரெட்டுக்குப் பதினைஞ்சு பைசா வசூலித்தார்.

துவண்டு தள்ளாடிக் குப்புராவ் வீட்டு வாசலை அடைந்தபோது இரவு மணி ஒன்பது பத்து. நான்கு மைல் தூரத்தை நான்கு மணி அவகாசத்தில் கடந்திருக்கிறார்.

வியாசர்பாடி







''குழந்தையைப் பிடிங்க!''
— கோட்டூர்புரம்

தெருவில் தண்ணீர் இருந்தாலும் அவர் வீடு பாதிக்கப்படவில்லை. குழந்தைகள் முகங்களைப் பார்த்ததும், கடந்த நான்கு மணி நேரமாகப் பட்ட கஷ்டங்களை மறந்து விட்டார்!

☐ நான்கு மணி நேரப் பிரயாணம் அறுபத்தி இரண்டு மணிப் பிரயாணமாக மாறியது நாவலாசிரியர் திரு உமாசந்திரனுக்கு!

நான்கு மணி நேரம் தாமதமாகக் காலை ஏழு மணி சுமாருக்கு ஹைதராபாத் எக்ஸ்பிரஸ் நெல்லூர் ஸ்டேஷனில் நின்றது. சட்டுப்புட்டென்று கிளம்புவதாகத் தெரியவில்லை. ரயில் நிலையத்திலிருந்த சிற்றுண்டி விடுதிச் சரக்குகளெல்லாம் காலி! நல்லவேளையாக ஊருக்குள்ளிருந்து நிறையச் சாப்பாட்டுப் பொட்டலங்களைத் தயார் செய்து கொண்டு வந்து விற்பனைக்கு ஏற்பாடு செய்தார்கள்.

வெள்ளிக்கிழமையன்று சென்னையில் மணமேடையில் மாப்பிள்ளையாக உட்கார வேண்டிய இளைஞன் ஒருவன் ஜானவாசம் போக வேண்டிய நேரத்தில் நெல்லூர் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தான்!

இரவு ஒன்பது மணிக்குப் பிரயாணிகள் சிலர் பொறுமை இழந்தார்கள். நெல்லூருக்குள் போய் நல்ல சாப்பாடு சாப்பிட்டு விட்டு ஏதாவது திரைப் படம் பார்க்கலாம் என்று கிளம்பியபோது ஸ்டேஷனிலிருந்து வந்த அறிவிப்பு ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்தியது. 'வண்டி எந்த நேரத்திலும் புறப்படலாம். யாரும் ஸ்டேஷன் எல்லையை விட்டு வெளியே போக வேண்டாம்' என்பதுதான் அந்த அறிவிப்பு.

மூன்று டாக்டர்கள் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். தேவைப் பட்டவர்களுக்கு மருத்துவ உதவி கொடுத்தார்கள். பத்து மணி சுமாருக்கு உள்ளூர் அன்னதான சமாஜத்தார் கூடை கூடையாகப் பூரி தயார் செய்து வந்து கொடுத்தார்கள்.

இரவு ஒரு மணிக்கு வண்டி நகருவது போன்ற பிரமை. உமாசந்திரன் விழித்துப் பார்த்தார். ஆம், வண்டி ஓடிக் கொண்டிருந்தது. சென்னையை நோக்கி அல்ல! ஹைதராபாத்தை நோக்கி!

வெள்ளிக்கிழமை காலை ஹைதராபாத் எக்ஸ்பிரஸ் மீண்டும் ஹைதராபாத்தை அடைந்தது! ரயில் நிலயத்தில் 'இந்த வண்டி வாடி, ரெய்ச்சூர் குண்டக்கல் வழியாகச் சென்னை செல்லுகிறது. இதிலேயே சென்னை செல்ல விரும்புபவர்கள் தொடர்ந்து பிரயாணம் செய்யலாம். அப்படி விரும்பாதவர்கள், தங்கள் டிக்கட்டுகளைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் பணத்தைத் திரும்பப் பெறலாம்' என்று அறிவித்தது ரயில்வே நிர்வாகத்தின் பெருந்தன்மையைக் காண்பித்தது.

உமாசந்திரன் தம்பதிகள் வண்டியை விட்டு இறங்கவில்லை. தொடர்ந்து பிரயாணம் செய்தார்கள். மறு நாள் சனிக்கிழமை இரவு ஒன்பது மணி சுமாருக்கு ரயில் சென்னையை அடைந்தது!

☐ அடையாறு தியாசாபிகல் சொஸைட்டியின் பக்கம் ஆற்றங்கரை ஓரமாக வசிக்கும் லிங்கேசன் கூறுகிறார்:

''எங்க பகுதியிலே வசிக்கிறவங்க யாரும் இப்படி ஆத்துத் தண்ணி வீடுகளுக்குள்ளே வரும்னு நெனைச்சுப் பார்த்தவங்களில்லே. ஏதோ பெரிய மழை பெய்யுது, மழை நின்னுட்டா ஆத்துத் தண்ணி வேகமும் குறைஞ்சு போயிடும்னுதான் எதிர்பார்த்தோம்.

''பாதி ராத்திரியிலே ஒரே சில்லிப்பு. முழிச்சுப் பார்த்தா வீட்டுக் கூடமெல்லாம் தண்ணி. நாங்க பதறிப்போயி எழுந்து கீழே படுத்திருக்கிற குழந்தைகளைத் தூக்கிகிட்டோம். சில சாமான்களைக் கொஞ்சம் உயர்ந்த லெவலிலே எடுத்து வைக்க முயற்சி பண்ணினோம். ஆனால் எங்க வேகத்தைப் பீட் அடிச்ச மாதிரி தண்ணி உள்ளே வேகமாக



சைதாப்பேட்டை

வந்துக்கிட்டு இருந்தது. எங்க கண்ணு முன்னுலேயே சாப்பாடு வைச்சிருக்கிற பாத்திரங்கள், சாப்பிடற தட்டுக்கள் எல்லாம் மிதக்க ஆரம்பிச்சுடுச்சு!

''காம்பவுண்டுச் சுவர்களெல்லாம் மூடிப் போற அளவுக்குத் தண்ணி தேங்க ஆரம்பிச்சுடுச்சு. ஒருத்தர் அந்தச் சுவரை இடிச்சு விட்டுட்டா தண்ணி மறுபக்கம் போயிடும்னுரு! உடனே கையிலே கிடைச்ச இரும்புச் சாமானைக் கொண்டு சுவரை இடிச்சோம்! நல்ல வேளை! அந்த வழியாகத் தண்ணி வடிய ஆரம்பிச்சுது! ஆனால் இது நடுவே கொஞ்சம் துணிமணிகள் பாத்திரங்களெல்லாம் தண்ணியோடு போயிடுச்சு. ராத்திரி முழுதும் கொட்டுக் கொட்டுன்னு நின்னுக்கிட்டு இருந்தோம். உட்காரவே பயம்!''

□ கோடம்பாக்கம் முருகேச நாயக்கர் நகர் பகுதியில் வசிப்பவர் ஸ்ரீமதி சரோஜா கிருஷ்ணமூர்த்தி. இங்கு தண்ணீர் ஓரிடத்தில் முழங்கால் அளவுக்கும் மற்றோரிடத்தில் இடுப்பளவுக்கும் நிறைந்திருந்ததால், மகாபாரதத்தில் வரும் மயன் மண்டபத்தில் நடக்கிற மாதிரி இருந்தது.

ஸ்ரீமதி சரோஜாகிருஷ்ணமூர்த்தியின் வீடு கொஞ்சம் உயர்ந்த மட்டத்தில் வீட்டுக்குள் தண்ணீர் வராமல் தப்பியது! ஆனால் தெருவுக்கே நான்கு நாட்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. விபத்துக்களைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை. ஞாயிற்றுக் கிழமை இரவு மீண்டும் மின்சாரம் விநியோகமாயிற்று. திங்கட்கிழமை காலையிலேயே ஒரு பால்காரப் பையன் நீரில் அமுங்கியிருந்த மின்சாரக் கம்பியில் கால் வைத்துவிட்டான்! இந்த உயிர் இழப்பைத் தொடர்ந்து மீண்டும் மின்சார விநியோகம் தடைப்பட்டு விட்டது.

□ புரசைவாக்கத்தைச் சேர்ந்த சாப்பாட்டுக்காரக் கண்ணம்மாவின் உடைமைகளையும் உறவினர்களையும் எதிர்பாராத வகையில் வீட்டில் இருந்த அவளது மருமகன் காப்பாற்றினுன்.

புதன்கிழமை பகலில் சாப்பாட்டுக் கூடையுடன் டவுன் பக்கம் போன கண்ணம்மா பதறிக்கொண்டு வீடு திரும்பினுள். வழியிலேயே அவள் வீடு இருக்கும் தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்க ஆரம்பித்திருப்பதாக அவள் காதில் செய்தி விழுந்துவிட்டது.

அவள் வீட்டுக்கு வந்தபோது மருமகன் எல்லாச் சாமான்களையும் உயர இருந்த பரண் மீது தூக்கிப் போட்டு விட்டான். நிறை மாதக் கர்ப்பிணியான கண்ணம்மாவின் மகளையும், கைக்குழந்தையையும் பக்கத்து வீட்டு மாடியில் வசித்தவர்களிடம் ஒப்படைத்து விட்டிருந்தான். தான் மாத்திரம் காவலாக ஒரு பீத்தளை அண்டாவைக் கவிழ்த்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அப்புறம் இரண்டு நாட்கள் அந்த வீட்டின் வழியாகத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

□ இப்படி ஒன்று, இரண்டா? எத்தனையோ துயரக் கதைகள். சென்னையிலேயே இந்தப் பாடென்ருல் ஆந்திராவில் ஐம்பத்து மூன்று உயிர்களைக் காவு கொண்ட புயலும் வெள்ளமும் எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும் என ஊகிக்கலாம். நமது துயரை எண்ணும் போதே ஆந்திர சகோதரர்களுக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவிப்போம்.

— கோமதி சுவாமிநாதன்

தேளின் நடனம்!



இனப்பெருக்க காலத்தில் பெண் தேளைக் கண்டு விட்ட ஆண் தேள் உடன் தன் வாலை நிமிர்த்தி மெதுவாகப் பெண்ணை நெருக்கி, அதே சமயத்தில் சற்று பயத்துடன் பெண்ணின் வாலோடு தன் வாலை உராயும். இச் செய்கையினுல் உணர்ச்சியால் உந்தப்பட்ட பெண் தேள், தானும் மிகச் சந்தோஷத்தோடு ஆண் தேளின் வாலோடு தன் வாலை உராயும். இச் செய்கை விட்டு, விட்டு பலமுறை நிகழ்கிறது. குறிப்பிட்ட நேரம் கழிந்ததும் ஆண் தேள் தன் இடுக்கி போன்ற அமைப்புடைய இரண்டு முன் உறுப்புக்களால் பெண்ணின் இரண்டு முன் உறுப்புகளை நன்கு பற்றிப் பிடித்துக் கொண்டு முன்னும், பின்னும் நகர்ந்து விநோதமான முறையில் நடனமாடும். அடிக்கடி தங்காது இடுக்கி போன்ற உறுப்புகளை விட்டுவிட்டு, சிறிது தூரம் பின் நகர்ந்து பின்பு மீண்டும் முன் வந்து பிடித்துக் கொண்டு நடனமாடும். இவ்வாறு பலமுறை நிகழ்கிறது. முடிவில் இரண்டும் இனப்பெருக்கச் செயலில் ஈடுபடுகின்றன. இணைந்து முடிந்ததும் பெண் தேளை விட்டு ஆண்தேள் உடனடியாகப் பிரிந்து அவ்விடத்தை விட்டு ஓடிச் செல்லாவிடில் அந்தோ பரிதாபம்! உருவில் ஆணை விடப் பெரிதான பெண்தேள் தன்னுடன் கூடி மகிழ்ந்தவன் என்பதையும் மறந்து அகோரப் பசியுடன் ஆண் தேளை அவ்விடத்திலேயே நசுக்கிக் கொன்று தன் உணவாக்கிக் கொண்டுவிடும்!

ஈயின் காதல் விநோதம்!

எம்ப்பிடீ (EMPIDAE) என்னும் பூச்சிக் குடும்பத்தைச் சேர்ந்த, அளவில் சிறிய ஆண் ஈக்கள், அவை உண்ணும் இரையையே பெண் ஈக்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து அவற்றின் காதலைப் பெறுகின்றன. ஆண் ஈ தன் உடலிலிருந்து உண்டாகும் ஒருவித சுரப்பினுல் தன் உடலைக் காட்டிலும் பன்மடங்கு பெரிதான ஒரு பலூன் போன்ற உருவம் கொண்ட குமிழியை உண்டுபண்ணி, அக் குமிழியின் மீது இரையை வைத்துப் பெண்ணுக்குக் கொடுக்கும். சில சமயங்களில் இரைக்குப் பதிலாகப் பெண் ஈக்கள் பார்த்தவுடன் மனம் மகிழ்ந்து, உணர்ச்சி வயப்படக்கூடிய பூவிதழ் போன்ற ஏதேனும் கவர்ச்சிகரமான பொருளை வைத்துக் கொடுப்பதுமுண்டு. பெண் ஈ கூட்டத்தில் ஆணினுல் கொடுக்கப்பட்ட அன்பளிப்பை ஏற்கும் பெண் ஈ ஆணின் காதலுக்கு உரியதாகிறது.



— அந்தோனி பேசில்



...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று!

MAFATLAL GROUP

நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான

-M. 458 TM



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 3

ஆகமம் வழங்கும் அத்தாட்சி

தோண்டி எடுக்கத் தேவையில்லாமலே தொன்மைக் காலம் தொட்டு இன்றுவரையில் பாதுகாக்கப்பட்டு வரும் பூர்விக நகரம் ஜெருசலம்.

பாரதத்தில் கற்கோட்டைகள் கட்டப்படுவதற்கு முன்னாலேயே, ஏன், உலகமே கற்கோட்டை கட்டுவதற்கு முன்னால் முதன் முதலில் கற்கோட்டை கட்டிய நகரம் ஜெருசலம்.

விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கே வளர்த்த இஸ்ரவேல் நாட்டின் தலைநகரம் அது.

எபிரேய மொழியும், கிரேக்க மொழியும் மட்டுமே அந்த நாட்டின் பூர்விக மொழிகள்.

பிற்காலத்தில் உலகத்தையே வளைத்துப் போட்ட ஒரு புதிய மார்க்கம் பிறந்த பூமியல்லவா அது?

எத்தனையோ நாடுகளின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பிய இஸ்ரவேல், யூத ஜாதியின் தாயகம்.

இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே அது கிறிஸ்தவ மார்க்கத்தைத் தோற்றுவித்தது.

அன்று ஜெருசலம் ஆலயத்தின் பிரம்மாண்டமான பூர்விக மணி ஓங்கி ஒலித்துக்கொண்டேயிருந்தது.

அரசன் சாலமன் காலத்திலேயே கட்டப்பட்டதாகக் கூறப்படும் மணி அது.

அந்த ஆலயத்தில் நூற்றுக் கணக்கான இளம் பெண்கள் கூடிப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

எழுநூறு ஆண்டுகளுக்கு மேலாக அதே பாடல்களைத் தான் யூதர்கள் பாடுகிறார்கள் என்றாலும், ஒவ்வொரு நாளும் அந்தப் பாடல்களில் ஏதோ புதிய அர்த்தம் இருப்பது போல் தோன்றிற்று.

வாத்தியங்கள் மென்மையாக இயங்கிக்கொண்டிருந்தன.

கம்பீரமான அந்த ஆலயத்தில் மணியோசையே தாளமாக அமைந்தது.

உட்சுவர் அதை எதிரொலித்தது.

முதல்பேன் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்சங்கீதத்தில்அமைத்துஅவர்கள் பிரார்த்தனை கீதங்களைப் பாடினார்கள்.

தம்மை மறந்து அத்தனை பெண்களும், மற்றொரு பகுதியிலிருந்த ஆண்களும் பாடிக் கொண்டிருந்த போது உள்ளே நுழைந்து மண்டியிட்டாள் யூஜியானா.

தந்தை யோகாவா தள்ளாடிய நிலையில் ஆடவர்களோடு போய் அமர்ந்தார்.

பிரார்த்தனை தொடர்ந்து கொண்டிருந்தது.

கிழவர் யோகோவாவின் அருகில் அமர்ந்திருந்தார். இன்னொரு கிழவர். அவர் பெயர் **மனோவா**.

இந்தப் பக்கம் உட்கார்ந்திருந்தார் இன்னொரு கிழவர்; அவர் பெயர் **மோசே**.

பிரார்த்தனையின் ஊடே அவர்கள் இருவரும் யோகோவாவை அடையாளம் கண்டு கொண்டார்கள்.

''நீ யோகோவா அல்லவா?'' என்று கேட்டார் மனோவா.

''ஆம்'' என்று தலையை ஆட்டினார் யோகோவா.

உடனே மனோவா அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். மோசேயும் அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

மூவரும் பள்ளித் தோழர்கள்.

''எப்போது வந்தாய்?'' என்று கேட்டார் மோசே.

''வந்து கொண்டேயிருக்கிறேன்'' என்று பதில் சொன்னார் யோகோவா.

''வீட்டைத்தான் விற்று விட்டாயே, எங்கே தங்கப் போகிறாய்?'' என்று கேட்டார் மனோவா.

''இடம் தெரியாமல்தான் ஆலயத்துக்கு வந்தேன். ஏராளமாகப் பொன் கொண்டு வந்திருக்கிறேன். ஒரு நல்ல இடமாகப் பார்த்து வாங்கவேண்டும்!'' என்றார் யோகோவா.

''உறவுகள்...?'' என்று கேட்டார் மோசே.

''ஒரே உறவுதானே, என் மகள் யூஜியானா. அதோ அங்கே இருக்கிறாள்'' என்று சுட்டிக் காட்டினார் யோகோவா.

அங்கே அவர்கள் யூதஜாதி யூஜியானாவைக் காணவில்லை; குங்குமப் பொட்டு வைத்த கேரளப் பெண்ணைப் பார்த்தார்கள்.

''உன் மகளுக்குப் பக்கத்தில் இருக்கும் முதியவள் **மில்க்காள்**தான் என் மனைவி. முன் பக்கமிருக்கும் **லேயாள்** தான் என் மகள். நம் வீட்டுக்குப் போகலாம். அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம்'' என்றார் மனுவா.

பிரார்த்தனை முடிந்தது.

மனுவாவும் மோஸேயும், யோகோவாவைக் கைத்தாங்கலாக அணைத்தபடி பெண்கள் பகுதிக்குப் போனார்கள்.

மில்க்காளிடம் யோகோவாவையும், யூஜியானுவையும் அறிமுகப்படுத்தினார்கள்.

மில்க்காளைக் கூர்ந்து கவனித்தார் யோகோவா.

தான் இஸ்ரவேலை விட்டுக் கேரளத்துக்குச் சென்றபோது அவளும் வழியனுப்பியதை ஞாபகப்படுத்தினார்.

''அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் மில்க்காள். லேயாளுக்கும் யூஜியானுவை அறிமுகப்படுத்தினார்கள்.

ஆலயத்தை விட்டு அவர்கள் வெளி வந்தபோது சேர நாட்டிலிருந்து அழைத்து வந்த தோழிப் பெண்கள், சேவகர்கள் எல்லாம் தங்க நாணயப் பெட்டிகளையும், நகைப் பெட்டிகளையும் பரப்பி அதன் மீது அமர்ந்திருந்தார்கள்.

ஜெருசலமின் சதுரக்கல் சாலையில் போவோர், வருவோர் எல்லாம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆடை அணியைத் தவிர மற்ற விஷயங்களில் சேர நாட்டுப் பெண்களுக்கும் யூதப் பெண்களுக்கும் அதிக வித்தியாசம் இராது. ஆயினும், 'சேர நாடு ஒரு வளமான நாடு' என்று நினைக்கும் இஸ்ரவேலியர்கள் சேர நாட்டிலிருந்து யார் வந்தாலும் அதிசயமாகப் பார்ப்பார்கள்.

யோகோவாவும், மனுவா குடும்பத்தினரும் அவர்களையும் அழைத்துக் கொண்டு மனுவாவின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மனுவாவின் மாளிகை மிகப் பிரும்மாண்டமான ஒன்றே.

எகிப்திலே வாணிபம் செய்து பொருளீட்டியவர் மனுவா.

ஏராளமான சொத்துக்களோடு யோகோவாவும் மகள் யூஜியானுவும் வந்ததால் வரவேற்பும், மரியாதையும் பிரமாதமாகத்தான் இருந்தன.

யூத ஜாதியும், ஒரு வணிக ஜாதி தானல்லவா?

லேயாள் யூஜியானுவுக்குத் தன் மாளிகையைச் சுற்றிக் காட்டினாள்.

கூட வந்த கேரளப் பெண்கள் ஐம்பது பேரும் அந்த மாளிகையைப் பார்த்து அதிசயித்தார்கள்.

''இவர்களையெல்லாம் திருப்பியனுப்ப வேண்டும்!'' என்று பெருமூச்சோடு சொன்னாள் யூஜியானு.

அதே நேரத்தில் மனுவா, யோகோவாவிடம், ''ஏன் இவ்வளவு பெண்களை அழைத்து வந்தாய்?'' என்று கேட்டார்.

''ஒரு ராணி தனியாகவா கப்பலில் ஏறுவது?'' என்று பெருமூச்சு விட்டார் யோகோவா.

''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார் மனுவா.

அதற்குள் மாடத்திலிருந்த லேயாளும் யூஜியானுவும் கீழே இறங்கி வந்து விட்டார்கள். மில்க்காளும் வந்து பக்கத்தில் நின்று கொண்டாள்.

எல்லோரையும் உட்காரச் சொன்னார் மனுவா.

பெண்களுக்குப் புளிக்காத திராட்சை ரசமும், ஆண்களுக்குப் புளித்த ரஸமும் வழங்கப்பட்டன.

ஆதியோடு அந்தமாக அத்தனை விஷயங்களையும் யோகோவா கூறினார்.

சரஞ் சரமாகக் கண்ணீர் வடித்தபடியே யூஜியானு அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''சேர நாட்டுக்கு வாரிசு இல்லாத போது யூஜியானுவின் பிள்ளைதான் வாரிசாக வேண்டும்'' என்றாள் மில்க்காள்.

''இனி அது எப்படிச் சாத்தியமாகும்?'' என்று கேட்டார் மனுவா.

''ஏன் ஆகாது?'' என்று சொன்ன மில்க்காள் ஆகமத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

> தாவீது ராஜா வயது சென்று கிழவனானபோது ஆடைகளினால் அவனை மூடினாலும் அவனுக்கு அனல் உண்டாகவில்லை. அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி, 'அரசே, ராஜ சமூகத்தினின்று உங்களுக்குப் பணிவிடை செய்யவும், உங்கள் உடல் சூடுபடும்படி மடியிலே படுத்துக்கொள்ளவும் ஒரு கன்னிப் பெண்ணைத் தேடுகிறோம்' என்று கூறி, இஸ்ரவேலின் எல்லையில் சூனேம் என்னும் ஊரில் இருந்து அபிஷா என்னும் பெண்ணைக் கண்டுபிடித்து அவளை அரசரிடம் கொண்டு வந்தார்கள். அந்தப் பெண் மிக அழகானவள். ஆயினும் தாவீது அவளை அறியவில்லை.
>
> ஆகீத்துக்குப் பிறந்த அதோனியா என்பவன் 'தாவீதுக்குப் பிறகு நானே ராஜா' என்று கூறி, ரதங்களையும், குதிரைகளையும், காலாட்களையும் சம்பாதித்தான். அவன் செருயாவின் குமாரனாகிய யோவாப்போடும், ஆச்சாரியாரின் அபியத்தா



ரோடு ஆலோசனை செய்து உதவி பெற்று வந்தான்.

தாவீது மன்னனோடிருந்த பராக்கிரமசாலிகள் யாவரும் அதோனியாவுக்கு உதவி செய்யவில்லை.


அதோனியா இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே 'ஆடு மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் அடித்து, ராஜாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும், ராஜாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைத்தான்.

தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை.

அப்பொழுது நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளை நோக்கி, 'நம்முடைய ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியாமல், ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா?

இப்போதும் உன் பிராணனையும், உன் குமாரனாகிய சாலொமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா, உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன்.

நீ தாவீது ராஜாவினிடத்தில் போய், 'ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப் பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையோ? அப்படியிருக்க, அதோனியா ராஜாவாகிறது என்ன?' என்று அவரிடத்தில் கேள்.



பதில்: வலது பக்கத்தில் உள்ளது போல 1, 2, 3, 4 என்று நான்கு சம பகுதிகளாகப் பிரித்து வெட்டி இடது பக்கத்தில் உள்ளதுபோல் ஒட்ட வேண்டும்.

'நீ அங்கே ராஜாவோடு பேசிக்கொண்டிருக்கையில் நானும் உனக்குப் பின் வந்து உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன்' என்றான்.

அப்படியே பத்சேபாள் பள்ளியறைக்குள் ராஜாவிடத்தில்போனாள். ராஜா மிகவும் வயது சென்றவனாக இருந்தான்; சூனேம் ஊராளாகிய அபிஷாக் ராஜாவுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்.

பத்சேபாள் குனிந்து ராஜாவை வணங்கினாள். அப்போது ராஜா, 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

அதற்கு அவள்: 'என் ஆண்டவனே! எனக்குப் பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மீது வீற்றிருப்பான் என்று நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைக் கொண்டு, உமது அடியாளுக்கு ஆணையிட்டீரே.

இப்பொழுது, அதோனியா ராஜாவாகிறான்; என் ஆண்டவனாகிய ராஜாவே நீர் அதை அறியவில்லை.

அவன் மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து ராஜாவின் குமாரர் அனைவரையும் ஆசாரியனாகிய அபியத்தாரையும் யோவாப் என்னும் படைத் தலைவனையும் அழைத்தான். ஆனாலும் உமது அடியானாகிய சாலொமோனை அழைக்கவில்லை.

ராஜாவாகிய என் ஆண்டவனே! ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பிறகு அவருடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பவன் இன்னான் என்று தங்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கின்றன.

அறிவியாமற் போனால் ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய பிதாக்களோடே படுத்துக்கொண்ட பின்பு, நானும் எனது குமாரனாகிய சாலொமோனும் குற்றவாளிகளாய் எண்ணப்படுவோம் என்றாள்.

....பின்பு தாவீது ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும், தீர்க்கதரிசியான நாத்தானையும் யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் அழைத்து வாருங்கள் என்றான்.

அவர்கள் ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்தபோது, ராஜா அவர்களை நோக்கி: 'நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சேவகரைக் கூட்டிக்கொண்டு என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதைமேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

அங்கே ஆச்சாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின் மேல் அபிசேகம் பண்ணக் கடவர்கள்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள்.

அதன் பின்பு அவன் நகர் வலம் வந்து என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி அவனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்; அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாய் இருப்பான்; அவன் இஸ்ரவேலின் மேலும் யூதாவின் மேலும் தலைவனாய் இருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன்' என்றான்.

—''இப்பொழுது நீ என்ன சொல்கிறாய்? யூஜியானாவின் மகனுக்குப் பட்டம் கிடைக்கும் என்கிறாயா...?'' என்று கேட்டார் யோகோவா.

''கிடைத்தாக வேண்டும்!'' என்றார் மனோவா.

''என் மகனுக்குப் பட்டம் வேண்டாம்; எனக்கு அவர் வேண்டும்!'' என்று கண்ணீர் வடித்தாள் யூஜியானா.

''பட்டத்துக்குப் போட்டி வந்து விடும் என்றுதானே யாரோ எங்களைச் சதி செய்து அனுப்பியிருக்கிறார்கள். அது பற்றி ஏன் பேசுகிறீர்கள்?'' என்றார் யோகோவா.

''அதைப் பிறகு விரிவாகப் பேசுவோம். கொஞ்ச நாட்களுக்கு நீங்கள் இங்கேயே தங்குங்கள். பிறகு ஒரு நல்ல வீடாகப் பார்த்து வாங்குவோம்'' என்றார் மனோவா.

''கூட வந்த கேரளப் பெண்கள் இரண்டு நாட்கள் இங்கேயே தங்கட்டும்'' என்றாள் மில்க்காள்.

''கப்பல் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் இங்கே நிற்கலாம். இந்தப் பெண்களும், கப்பலில் வந்த அலிகளும் இஸ்ரவேலையும் சுற்றிப்

பார்த்துவிட்டுப் போகட்டும். அவர்கள் கொஞ்ச நாட்கள் இங்கே இருந்தால் பூஜியானுவுக்கு ஆறுதலாக இருக்கும்'' என்றார் யோகோவா.

அன்று இரவு யனேவாவின் மாடத்து நிலா முற்றத்தில் அக்கம் பக்கத்து பூதப் பெண்கள் கூடிவிட்டார்கள்.

'சேர ராஜாவின் மனைவி! சேர ராஜாவின் மனைவி' என்பதே அவர்கள் பேசிய பேச்சாக இருந்தது.

நிலா முற்றத்தில் அமர்ந்தவாறே இப்போது பூத உடையில் இருந்த பூஜியானு ஆகாயத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

அங்கு ஒளிவீசிய பூரணச் சந்திரனில் சேரமானின் திருமுகம் தெரிந்தது.

'கற்பனையா உண்மையா?' கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தாள்.

நிலாவில் இருந்த சேரமான், 'கப்பலை அங்கேயே வைத்துக்கொள்; நீ திரும்பவும் சேர நாட்டுக்கு வரவேண்டியிருக்கும்' என்பது போலிருந்தது.

(தொடரும்)

மோகம் முப்பது வருஷம்



ஸ்ரீப்ரியா பிரமாதப்படுத்திக் கதாநாயகியின் அந்தஸ்தைப் பெற்று விட்டார். பாமா தற்கொலை செய்து கொண்டதும் படம் தானாகவே முடிந்து விடுகிறது. அப்புறம் கடைசி 'க்ளைமாக்ஸ்' கடைசி மஞ்சள் பட்டாசுமா இரி வெடிக்க மறுத்து விடுகிறது!

ஜயலட்சுமி, மேனகா; படு கவர்ச்சியாக வந்து திரைக் கதைக்கு நல்லதோர் ஓட்டம் தருகிறார். கதாநாயகி கஸ்தூரியாக வரும் சுமித்ரா, மடிசஞ்சி மாமியிடம் வளர்ந்த மடிப் பெண் பாத்திரத்தில், அதற்கேற்ற முகபாவத்துடன் நன்றாக நடித்திருக்கிறார். கணவன் அபரிமிதமான அன்பைப் பொழிய வரும்போதெல்லாம் அவனது ஆசைத் தீயில் தண்ணீரைக் கொட்டித் தணித்துவிடும் கஸ்தூரியை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார், சுமித்ரா.

நடிப்பாற்றலில், எஸ். என். லட்சுமிக்குச் சிறப்பிடம் உண்டு. கஸ்தூரியின் மாமியாராக வரும் அவருக்கு எத்தனை இயல்பான நடிப்பு! ராஜி மாமி முக்கியமான பாத்திரம் இல்லை தான். ஆனால் அதை ஏற்றிருக்கும் மனோரமா....? சில நிமிஷங்களே வந்தாலும், கஸ்தூரியிடம் தன் காதல் அநுபவங்களை விவரிக்கும்போது ''...கொன்னுப்பிடுவேன்.. முழுக்கக் கேளடி....!'' என்று சொல்லியே ரசிகர்களைத் திணற அடித்து விடுகிறார்.

சுகுமாரியும் மேஜர் சுந்தரராஜனும் 'ஏ'சிகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.


கமலஹாஸன் ரமேஷ். மனைவி அசட்டுத் தனமாக விலகி விலகிப் போகும்போதெல்லாம் தாம்ஏற்ற பாத்திரத்திலிருந்துவிலகி விடாமல் இயல்பாக நடித்திருக்கிறார். பாமாவைப் புரிந்து கொள்ளாமல் தவிக்கும் போது அவர் நடிப்பு ஒரு படி மேலேயே போய்விடுகிறது. விஜயகுமார், ஓவியன் ரவியாக வந்து கொஞ்ச வரும் மனைவியை மிஞ்ச விடாமல் பார்த்துக் கொள்கிறார்.

''ஆனந்த விகடன்'' மணியனின் கதையை மூலக் கருத்துக் கெடாமல் அப்படியே சுவை குன்றாமல் படமாக்கியிருக்கும் பெருமை டைரக்டர் எஸ். பி. முத்துராமனையே சேரும். வசனமும் மிகவும் அளவாகக் கணக்கிட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நாவலில் காணப்பட்ட சில விரஸமான உரையாடல்கள் படத்தில் இல்லை.

பலவீனமான மனப் போராட்டங்களைத் துணிவாக எடுத்துச் சொல்லும் படம் ''மோகம் முப்பது வருஷம்''. —சாந்தன்

எழுத்தாளரைப் போற்றிய ராஜாஜி

அழ. வள்ளியப்பா



ஒலிபரப்பும் அறைக்குள் நுழைந்ததும், அங்கே மேஜை மேல் இருந்த ஒரு ஃபிளாஸ்கைக் காட்டி, ''இது என்ன தெரியுமா?'' என்று கேட்டார் ராஜாஜி.

''ஃபிளாஸ்கிலே காஃபி இருக்கும்'' என்றேன். ''ஆம், இது என்னுடைய ஒலி பரப்புக் கருவி. காஃபி சாப்பிட்டால்தான் என் தொண்டையிலிருந்து ஒலி கிளம்பும்!'' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

• • •

ராஜாஜி வானொலியில் ஒலிபரப்பி, 'கல்கி'யில் வாரந்தோறும் வெளிவந்த சிறுகதைகள் 'கற்பனைக் காடு' என்ற பெயருடன் தென்மொழி புத்தக டிரஸ்ட் ஆதரவில் வெளிவந்தன. அந்தத் தொகுதியிலிருந்து மிகச் சிறு குழந்தைகளுக்கு ஏற்ற நான்கு கதைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை ஏராளமான வண்ணப் படங்களுடனும், உறுதியான அட்டையுடனும் தென் மொழிகள் நான்கிலும் மிகச் சிறந்த முறையில் வெளியிடவேண்டும் என்று விரும்பினேன். டிரஸ்டின் குழந்தைப் புத்தகத் தனி அலுவலர் என்ற முறையில் ராஜாஜியைச் சந்தித்து, அவரது அனுமதியை வேண்டினேன்.

மலிவு விலையில் தயாரான ராஜாஜியின் இரு நூல்களை ஒரு விழா நடத்தி வெளியிட விரும்பினோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தோம். அந்நூல்களை வெளியிடத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேடிப் பிடிப்பது சிரமமா யிருந்தது. கடைசியில் ராஜாஜியையே கேட்டுவிடுவது என்று முடிவு செய்து, அவரிடமே போய்க் கேட்டோம்.

ராஜாஜி சிறிதும் தயக்கமின்றி, ''புத்தகங்களை வெளியிட ஒரு புத்தக ஆசிரியர்தான் பொருத்தமானவர். ஏன் மாஸ்தியைக் கூப்பிடக் கூடாது?'' என்று கேட்டார்.

அவர் விரும்பியபடியே கன்னட உரை நடை இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப்படும் மாஸ்தி வேங்கடேச அய்யங்கார்தான் அந்த நூல்களை வெளியிட்டு வைத்தார். மாஸ்தியின் கன்னடச் சிறுகதைகளைப் பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழில் தந்தவரல்லவா ராஜாஜி!

உலகத் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் ராஜாஜி, எழுத்தாளர்களை எவ்வாறு மதித்தார் என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

• • •

ஒரு சமயம் எழுத்தாளர் மகாநாட்டைத் தொடங்கி வைத்த ராஜாஜி, ''ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிப்பது அவசியம்தான். அதற்காக மோட்டார், பஸ், சைக்கிள் போன்ற சொற்களை ஒதுக்க வேண்டாம். அப்படியே உபயோகிக்கலாம்'' என்றார்.

''பிரேக்'' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் வேண்டுமா? கிராமத்திலே மாட்டு வண்டியை நிறுத்த 'கட்டையைப் போடு', 'கட்டையைப் போடு' என்பார்கள். 'பிரேக்' போடுவதைத்தான் அப்படிச் சொல்லுகிறார்கள்'' என்றார் தலைமை தாங்கியவர்.

விழா முடிந்ததும் ராஜாஜியை வழியனுப்பி வைக்கும்போது, ''பிரேக்கிலே ஹாண்ட் பிரேக், வாக்கூம் பிரேக், ஹைட்ராலிக் பிரேக் என்று பல வகை உண்டு. அதற்கெல்லாம் எந்தக் கட்டையைப் போடுவதாம்?'' என்று சிரித்தபடி கேட்டார் ராஜாஜி.

• • •

வானொலியில் பல வாரங்கள் தொடர்ந்து குழந்தைகளுக்கு ராஜாஜி கதை சொல் வந்தார். ஒரு நாள் மாலை வானொலி நிலை வாசலில் காரிலிருந்து ராஜாஜி இறங்கு போது, உள்ளேயிருந்து வ நான், அவரைக் கண்டு வணக்கம் செலுத்தினேன்.

திரு சோமு ராஜாஜியை உள்ளே அழைத்துச் சென்றார். ''ஏன், நீங்களும் வரலாமே! என்றார் ராஜாஜி. தொடர்ந்து, ''என் கதையைக் கேட்க 'ஆடியன்ஸ்' வேண்டாமா?'' என்று புன்னகை தவழக் கேட்டார்.

படம்: திரு மன்ரோ லீஃப் தமது புத்தகங்களுள் ஒன்றை ராஜாஜி பார்வைக்குச் சமர்ப்பிக்கிறார். அவரை அறிமுகப்படுத்திய திரு வள்ளியப்பா இருவருக்கிடையில் நிற்கிறார்.

''அப்படி வெளியிட்டால் விலை அதிகம் ஆகுமே!'' என்றார்.

''ஒன்றே கால் அல்லது ஒன்றரை ரூபாய் விலையில் வெளியிடலாம்.''

''என்ன! நாலு கதைக்கு ஒன்றரை ரூபாயா? வேண்டவே வேண்டாம்'' என்று மறுத்து விட்டார்.

எவ்வளவோ சமாதானம் கூறியும் அவரது அனுமதியைப் பெற முடியவில்லை.

தம்முடைய எளிய நடை போலவே தம் நூல்களும் எளிய விலையில் கிடைக்க வேண்டும் என்பதுதான் ராஜாஜியின் விருப்பம்.

● ● ●

''பஞ்ச தந்திரக் கதைகளை விட ஈசாப் கதைகள் உயர்ந்தவையா?'' என்று ஒருமுறை ராஜாஜி என்னிடம் கேட்டார். சில நாட்களுக்கு முன்பு என்னுடைய 'ஈசாப் கதைப் பாடல்கள்' என்ற புத்தகத்தின் இரு தொகுதிகளை ராஜாஜியிடம் கொடுத்திருந்தேன். அதனால் அவரது கேள்வியின் உட்பொருளை நான் புரிந்து கொண்டேன்.

''ஈசாப் கதைகள் சிறு சிறு கதைகளாக இருப்பதால், பாட்டாக எழுதுவது சுலபமாக இருந்தது. ஆனால் பஞ்ச தந்திரமோ கதைக்குள் கதையாக இருக்கிறதே!'' என்றேன்.

''முன் காலத்தில் இப்படி எல்லாமே கதைக்குள் கதையாகத்தான் இருக்கும். தனித் தனியாக எடுத்துக் குழந்தைகளுக்கு ஏற்றபடி கூற வேண்டியதுதான்'' என்றார் ராஜாஜி.

''பிற நாட்டுக் கதைகளை நம் குழந்தைகளுக்குக் கூறும்போது, நமது பண்டைய கதைகளை மறந்துவிடக் கூடாது'' என்பதையே மறைமுகமாக உணர்த்தினர் ராஜாஜி.

● ● ●

1956-ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் ராஜாஜி. அப்போது அவர், ''குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் எத்தனை அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். 107 பேர்கள் இருக்கின்றனர். ஜெபம் செய்யும் போது கூட 108 என்று சொல்வது நமது புராதனப் பழக்கம். ஆகையால், என்னை 108வது அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுங்கள். அதற்கு மேல் அங்கத்தினர்கள் சேராத போனாலும் பரவாயில்லை'' என்று சபையோரின் பலத்த சிரிப்புக்கு இடையே கூறினர். ராஜாஜி சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தால் சங்கத்துக்கல்லவா பெரிய கௌரவம்? அதனால், அன்றே ராஜாஜி கௌரவ அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

● ● ●

குழந்தைகளுக்கு எழுதுவதில் ராஜாஜிக்கு ஒரு தனிப் பிரியம். குழந்தைகளுக்கு எழுதுவோரை அவர் மிகவும் பாராட்டுவார். அமெரிக்காவிலிருந்து 1961ல் சென்னை வந்த புகழ் பெற்ற ஓர் அமெரிக்கக் குழந்தை எழுத்தாளருக்குக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒரு வரவேற்பு அளித்தது. மன்றோ லீஃப் என்னும் அவர், எந்த விஷயத்தையும் குழந்தைகளுக்கு வேடிக்கையாகக் கூறுவதில் வல்லவர். 'Can be fun series ல் 'Health can be fun' 'Manners can be fun' 'Arithmetic can be fun' என்று பல புத்தகங்களை எழுதி, அவரே வேடிக்கையான படங்கள் போட்டிருக்கிறார். அந்த வரவேற்புக்கு எல்லோருக்கும் அனுப்பியது போல், ராஜாஜிக்கும் சங்கத்திலிருந்து அழைப்பு அனுப்பப்பட்டது.

யாரும் எதிர்பார்க்கவில்லை, ராஜாஜி அங்கு வருவாரென்று! குறித்த நேரத்தில் வந்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டார்.

வேடிக்கை நூல்களை எழுதிய மன்றோ லீஃபுடன் சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசி, அவரைச் சிரிக்க வைத்தார். தமக்களித்த வரவேற்பில் உலகமறிந்த மேதை, இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரல், தலைசிறந்த எழுத்தாளர் கலந்து கொண்டதை மிகப் பெருமையாகக் கருதிப் பெருமகிழ்ச்சி அடைந்தார் மன்றோ லீஃப்.

மாதவியிடமிருந்து கொண்டு வந்த ஓலையைக் கோவலனிடம் கொடுத்தான் கோசிகமாணி. ஓலையை வாங்கிய கோவலன், உடனே அதைப் பிரித்துப் படிக்க முயன்றானில்லை. காரணம் ஓலையின்மேல் மாதவி தன் கூந்தலால் பொறித்திருந்த முத்திரையிலிருந்து வெளிப்பட்ட மணத்தை நுகர அவன் விரும்பியதுதான். பல ஆண்டுகள் அவளோடு கூடி வாழ்ந்தபோது அவன் அனுபவித்த ''பூர்வ வாசனை'' அல்லவா!

முன்னர், மாதவியிடம் ஊடல் கொண்டு, அவளை விட்டுப் பிரிந்து பூம்புகார் வீதிகளில் விரைந்து நடந்து கொண்டிருந்தபோது, மாதவியின் தோழி வயந்தமாலை கொண்டுவந்த கடிதத்தை வாங்க மறுத்து விட்டான் கோவலன். மறுத்ததோடன்றி, ''அவள் ஆடல் மகள்தானே!'' என்று மாதவியைப் பழித்தும் பேசினான்.

இப்போது தன் ஓலையின் மீது மாதவியாள் பொறித்த முத்திரையிலிருந்து வீசிய மணமானது, கோவலனை மயக்கி, கோசிகமாணியிடமிருந்து ஓலையை வாங்கும்படி செய்துவிட்டது. அதன் வாசகம் வருமாறு:

'' அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியும், குலப்பிறப்
பாட்டியோடு,
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு
அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்;
பொய்தீர் காட்சிப் புரையோய்,
போற்றி!''

முன்னர் வயந்தமாலையிடம் மாதவி கொடுத்து அனுப்பிய கடிதத்துக்கும், இப்போது கோசிகமாணி கொண்டு வந்த கடிதத்துக்கும் வாசக அமைப்பிலே தலைகீழான மாற்றம்! பொருளிலேயும் அப்படித்தான்! முந்தைய ஓலையிலே கோவலன் மனத்திலே காம உணர்ச்சியைத் தூண்டும் வகையில் காதல் மொழிகளை எழுதியிருந்தாள் மாதவி! ஆம்; அப்போது அவள் அவனைத் தன் காதலனாகவே கருதினாள். இப்போது தன்னைப் பிரிந்த பின் கோவலன் அடைந்த நிலை மாதவியின் நெஞ்சை உருக்கி விட்டது. அதனால் அவள் தன் கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறாள்:

''பெற்றோரை விட்டுப் பிரிந்து சென்றீரே; முதுமைப் பருவத்தை அடைந்து விட்ட அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் துறந்து சென்றீரே; குலத்தில் பிறந்த மனைவியுடன் நாடு விட்டு நாடு செல்லத் துணிந்தீரே! அந்தப் பயணத்தையும் நள்ளிரவில் தொடங்கினீரே! இவ்வளவு துன்பங்களைத் தாங்கள் அடைவதற்கு யான் செய்த தவறுதான் யாதோ? அதை அறிய முடியாமல் என் நெஞ்சம் செயலற்றுத் தவிக்கின்றதே! பொய்மையை வெறுத்து, உண்மையை விரும்பும் மாதவனே! உன்னைப் போற்றுகின்றேன். எனது நெஞ்சத் துயரையாவது போக்குவீராக!''

மாதவியின் ஓலையைப் படித்ததும் அவள் விஷயத்தில் தான் முன்னர் கொண்டிருந்த தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டான் கோவலன்.

''மாதவி தீது ஏதும் இல்லாதவள். எனக்கு நேர்ந்த இன்னல்களுக்கெல்லாம் என் தீவினை தான் காரணம்'' என்று கூறி, தான் மன மாற்றம் அடைந்த செய்தியைக் கோசிகமாணி மூலம் மாதவிக்கு அனுப்பினான் கோவலன்.

வயந்தமாலை கொண்டு வந்த ஓலையை வாங்க மறுத்த கோவலன் கோசிகமாணி கொண்டு வந்த ஓலையை வாங்கக் காரணம், அந்த அந்தணன்பால் அவன் கொண்டிருந்த பெருமதிப்புத்தான்!

முதலில் அனுப்பிய ஓலையிலே கோவலனைத் தன்பால் சேர்த்துக்கொள்ள அழைப்பு விடுத்தாள் மாதவி. இரண்டாவது அனுப்பிய ஓலையிலே அழைப்பு விடவில்லை. அவன் துயருக்கு வருந்தியிருந்தாள். — அவ்வளவுதான்! பத்தினியிடம் சேர்ந்தவனை அவளிடமிருந்து மீண்டும் பிரித்தெடுக்க மாதவி விரும்பவில்லை.

வயந்தமாலையிடம் கொடுத்து அனுப்பிய ஓலையை வாங்கி மாதவி மனைக்குத் திரும்பக் கோவலன் மறுத்ததைக் கேட்ட போது,

''மாலை வாரா ராயினும்
காலை காண்குவம்''

சிலம்புச் செல்வம்

ம.பொ.சி.



என்று இறுமாப்புடன் கூறினாள் மாதவி. அது நடக்கவில்லை. எனவே இப்போது கோவலனைச் சரியாகப் புரிந்து கொண்டு அவனைத் தந்தையின் நிலையிலே வைத்து ஓலை எழுதிக் கோசிகமாணியிடம் கொடுத்தனுப்பினாள்.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendiran.

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!



கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர் உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல் மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூற்றாண்டு கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளடங்கியுள்ளது. இந்த மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக் கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை... கன்னிப் பருவக் களை


ஹிந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-PS. 56-140 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

CLEVITE

RESEARCH HAS PROVED
COPPER-LEAD
TO BE THE RIGHT
COMBINATION
MATERIAL FOR




HEAVY DUTY

APPLICATIONS

In 50 **years** working with all materials, CLEVITE research has proved copper-lead to be the right combination material in the world for heavy duty applications.

Where in all cases, the test is in performance spread over many years, CLEVITE copper-lead have proved to be the best heavy duty engine bearings.





BIMETAL BEARINGS LIMITED

(in technical collaboration with Clevite Corporation, Cleveland, Ohio, USA)

2, ARTS COLLEGE ROAD, COIMBATORE - 18

A Unit Company of Amalgamations Group